



கர்மவீரர் காமராஜரை பற்றி இணையத்தில் கிடைத்த கட்டுரைகளை தொகுத்து ஒரு E-BOOK ஆக இங்கே தருகிறோம். இதன் நோக்கம் வளரும் இளம் தலைமுறையினர் இந்த தொகுப்பில் உள்ள ஒரு சில கட்டுரைகளையாவது படித்து காமராஜரின் பெருமையை தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தான். மேலும் விபரங்களுக்கு காமராஜரின் உறவினர்கள் எழுதும் kamarajar.blogspot.com என்ற வலைப்பதிவை பார்க்கவும்.

visit us : kamarajar.blogspot.com
நன்றி: kamaraj101.blogspot.com


kamarajar.blogspot.com
Indira Gandhi - K.Kamaraj


kamarajar.blogspot.com




kamarajar.blogspot.com


kamarajar.blogspot.com


kamarajar.blogspot.com

## .காமராஜரை பார்க்க வந்த விடுதலைப் போராட்டத் தியாகி

அன்று காமராஜரை பார்க்க வந்தவர் ஒரு விடுதலைப் போராட்டத் தியாகி. தன் இல்லத் திருமணத்திற்க்கு வரவேண்டுமென்று கேட்டு அழைப்பிதழோடு வந்திருந்தார். அவரை அழைத்து அமரச் செய்து நலங்கேட்டார். அதே நேரத்தில் அவருடைய வசதியற்ற வாழ்க்கை நிலையை அவரது சொற்கள் மூலமாக புரிந்து கொண்டார்.

தனது உதவியாளரை அழைத்துக் கேட்பது போலக் கேட்டு அந்த திருமணனாளில் தனக்கு வேறு அலுவல் இருப்பதாகக் கூறி விழா சிறப்பாக அமையத் தன் வாழ்த்துக்களைத் தெரிவித்து அனுப்பிவிட்டார். வந்தவர் மனம் மிக வருந்தி விடைப்பெற்றார். ஆனால் அவருடைய உள்ளத்தில் " ஹூம் ... காமராஜ் இன்று பெரிய தலைவராகி விட்டார். அந்தக் காலத்தில் நாமும் அவரோடு போராட்டங்களில் ஈடுபட்டோம். ஒரே சிறைச்சாலையில் அடைக்கப்பட்டிருந்தோம். ஆனால் இன்று மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசம் எற்பட்டுவிட்ட நிலையில் ஏழையான தன் வீட்டுக்கு வருவதற்கு அவரது அந்தஸ்த்து இடம் தருமா?" என்றெல்லாம் எண்ணியவண்ணம் ஊர் போய் சேர்ந்தார்.

விழா நாளும் வந்தது. அந்த சிற்றூரில் தன் பொருளாதார வசதிக்கேற்ப மிக எளிமையாக விழாவை நடத்திக் கொண்டிருந்தார். திடீரென அந்த வீதியில் பரபரப்பு, ஆரவார ஒலி கேட்டு அந்த தியாகி வெளியே வந்தார். அவர் கண்களையே நம்ப முடியவில்லை. வந்து நின்ற காரிலிருந்து காமராஜ் இறங்கினார். புன்னகை பூத்தமுகத்தோடு தியாகியின் கைகளைப் பற்றினார்.

தியாகிக்கோ கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் பெருக்கெடுத்தோடியது. அவரைத் தட்டிக் கொடுத்த வண்ணம், 'வா, விழா மேடைக்குப் போவோம்' என்று கூறிய வண்ணம் மண்டபத்தின் உள்ளே சென்றார், மணமக்களை ஆசீர்வதித்தார். அவரைச் சரியான ஆசனத்தில் கூட அமர்த்த முடியவில்லையே என்று அந்தத் தியாகி ஏக்கத்தோடு செயலற்று நின்றார்.

அப்போது காமராஜ் பேசினார். "நீ அழைப்பிதல் கொடுத்த அன்றைக்கே நான் வர்றதுக்கு முடிவு செஞ்சிட்டேன். ஆனா நான் அப்பவே வர்றதாச் சொல்லியிருந்தா முதலமைச்சரே வர்றார்ன்னு சொல்லி கடனை வாங்கித் தடபுடலா பண்ணியிருப்ப, உன்னை மேலும் கடன்காரனாக்க நான் விருப்பல. இப்ப வந்துட்டேன், உனக்கு திருப்தி தானே" என்றார். கூடியிருந்த கூட்டத்தை பெருமிதத்தோடு பார்த்தார் அந்தத் தியாகி.

"சரி...வரட்டுமா... மேல் கொண்டு காரியத்தை கவனி" என்று சொல்லி விட்டு விடை பெற்றார் காமராஜ்.

நட்பில் பழைமை என்ற ஒரு அதிகாரத்தையே எழுதிய வள்ளுவரின் வைர வரிகளுக்கு ஓரிலக்கியமாகத் திகழ்ந்தவர் காமராஜ்.

## மக்கள் தந்த வரிப்பணத்தில் நமக்கு விளம்பரமா?

திரு எஸ்.டி.சுந்தரம் அவர்களுக்கு நெஞ்சிலே அமைதியில்லை. அல்லும் பகலும் உழைத்து, ராக்கெட் வேகத்தில் முன்னேற்றமடையச் செய்து, தமிழகத்தை இந்தியாவில் இரண்டாம் இடத்திற்க்கு கொண்டுவந்துவிட்டபோதும், பொதுத் தேர்தலில் எதிர் கட்சியாக, வெறும் மேடை முழக்க வாதிகளாயிருக்கும் திராவிட முன்னேற்ற கழகம், தன் ஆதரவு வாக்காளர் விகிதத்தை உயர்த்திக்கொண்டே வருவது புரியாத புதிராக அவரை உறுத்தியது.

அவருக்கு தோன்றியதெல்லாம், காமராஜ் அரசு தன் சாதனைகளை பாமர மக்களின் கவனத்திற்க்கு கொண்டு செல்லாமையே. இந்தியாவில் அதிகளவு திரையரங்குகளை கொண்டிருந்த தமிழ் நாட்டின் திரையுலகின் பெரும்பங்கை திராவிட முன்னேற்ற் கழகத்தினரே கையகப்படுத்தியிருப்பதை உணர்ந்தார். அந்த சாதனத்தை காங்கிரசும் பயன்படுத்திக் கொள்ளவேண்டுமென முடிவெடுத்து தலைவர் காமரஜரை சென்று கண்டார்.

"ஐயா, நாட்டு மக்களின் முன்னேற்றத்திற்காக எண்ணற்ற சாதனைகளை நீங்களும் உங்கள் நல்லாட்சியும் செய்திருந்தாலும் நமக்கு கிடைக்க வேண்டிய மக்கள் ஆதரவு எதிர் கட்சிக்கே செல்வதைப் பார்க்கும் போது நாம் நமது சாதனைகளை மக்களின் கவனத்திற்க்கு கொண்டு செல்வதில் சற்றே பின் தங்கி இருக்கிறோம் என நினைக்கிறேன்" என்றார்.

அவர் கருத்தை கூர்ந்து கேட்ட காமராஜ், "சரி அதற்கென்ன செய்யலாம்னு நினைக்கிறீங்க?" என்று அவரிடமே யோசனை கேட்டார். அதற்க்கு கவிஞர் "ஐயா, திரைபடங்கள் மிக வலிமை மிக்க சாதனங்கள். மூலை முடுக்குகலுகெல்லாம் நாட்டு நடப்புகளை கொண்டு செல்வது அவைதான். இதை நாமும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது ஆட்சியின் சாதனைகளையெல்லாம் தொகுத்து ஒரு செய்திப் படம் ஒன்று தயாரித்து வெளியிட்டால் எல்லா தரப்பு மக்களையும் அவை சென்றடையும்." என்றார்.

" நாம்ப மக்களுக்குகாகச் செய்கிற காரியங்களை நாம்பளே விளம்பரப்படுத்தனுமா ? ... சரி, இதுக்கு எவ்வளவு செலவாகும்" என்று காமராஜ் கேட்டார்.

"சுமாரா மூனு லட்சம் இருந்தா எடுத்திரலாம்னு நினைக்கிறேன் ஐயா" என்றார் கவிஞர்.

"ஏ...யப்பா...மூனு லட்சமா? மக்கள் தந்த வரிப்பணத்தில் நமக்கு விளம்பரமா? அந்த மூனு லட்சம் இருந்தா நான் இன்னும் மூனு பள்ளிக்கூடத்தை திறந்திடுவேனே...வேண்டாம்...படமெல்லாம் எடுத்துக் காட்ட வேண்டாம்" என்று சொல்லி கவிஞரை அனுப்பிவிட்டார்.

## நாங்களெல்லாம் ஹவுஸ் சர்ஜன்ஸ்

மருத்துவப் படிப்பு தோற்றுவிக்கப்பட்ட நாளிலிருந்தே பயிற்சிக்காலதில் எவ்வித உதவித்தொகையும் வழங்கப்பட்டதில்லை. பயிற்சி மருத்துவர்கள் தங்களின் தேவைகளுக்கு தங்கள் கை காசை போட்டே பயிற்சியை முடித்தனர். பயிற்சி மருத்துவர்கள் அவ்வபோது துறை சார்ந்த அமைச்சர்களிடம் எடுத்துக் கூறியும், பாறையில் முட்டிய கதையாகவே முடிந்தது.

காமராஜ் அரசில் அத்துறையின் அமைச்சரும் மாணவர்கள் தரும் விண்ணப்பத்தை வாங்குவதோடு சரி, எவ்வித தீர்வும் எடுக்கவில்லை. இந்நிலையில் பயிற்சி மருத்துவர்கள் இருபது பேர் கூடி காமரஜரை சந்தித்து தங்கள் கோரிக்கையை சொல்வதென முடிவெடுத்தனர். அக்குழுவில் இன்றைய பிரபல மருத்துவர்கள் சிலரும் இருந்தனர். அக்குழுவினர் முதல்வரை சந்திக்க தலைமை செயலகம் சென்றனர். அன்றைய பணிமுடித்து வெளியேறுகையில் காமராஜரிடம் விஷயத்தைக் கூற, உடனே அவர்களைப் பார்க்க வந்தார்.

" நீங்களெல்லாம் யாரு?" காமராஜ்.
" ஐயா நாங்களெல்லாம் ஹவுஸ் சர்ஜன்ஸ்".
" அப்படின்னா என்ன" காமராஜ்.
" ஐந்து வருஷம் டாக்டர் படிப்பை முடித்துவிட்டு ஒரு வருஷம் பயிற்சி டாக்டராக வேலை பார்க்கிற்வர்கள். நாங்கதான் இந்த ஒரு வருசத்துல வருகிற நோயாளிகளை சோதிப்பது, அவசர சிகிச்சை செய்வது, இரவும் பகலும் வார்டுகளில் நோயாளிகளை பார்த்துக்கிறது. இந்த ஒரு வருஷ பயிற்சிக்கு பிறகுதான் நாங்க டாக்டரா வெளிய வேலை பார்க்க முடியும்."
" சரி ...இப்ப என்னை எதுக்கு பார்க்க வந்தீங்க" காமராஜ்.
" ஐயா, இந்த ஒரு வருச பயிற்சி காலத்துக்கு எங்களுக்கு எதாவது உதவித் தொகை STIPEND தரனும்னு கேட்டுக்கிட்டுக்கோம். மந்திரி அம்மா பார்க்குறேன், செய்றேன்னு சொல்றாங்களே தவிர எதுவும் செய்யமாட்டேங்றாங்க".
" இதென்ன அநியாயமா இருக்கு ...5 வருஷம் படிச்சுட்டு ஒரு வருசம் ஓசியா வேலை வாங்குறது சரியில்லையே... சரி நீங்க போங்க, நான் அதை என்னனு பார்க்கிறேன்" காமராஜ் அனைவரையும் குப்பிட்டு அனுப்பினார்.

நான்காம் நாள், பயிற்சி டாக்டர்களுக்கு மாதம் ரூ.105 சம்பளமும், கடந்துவிட்ட ஆறு மாதங்களுக்கும் சேர்த்து வழங்க வேண்டுமென்ற் உத்தரவு வந்தது.

## ஏழு ஆண்டு காமராஜ் ஆட்சியினை கண்டபின், பெரியார் ஆற்றிய உரையின் பகுதி

இதோ காணுங்கள்...

" தோழர்களே, எனக்கோ வயது 82 ஆகிறது. நான் எந்த நேரத்திலும் இறந்துவிடலாம். ஆனால் நீங்கள் இருப்பீர்கள். உங்களை விட முதிர்ந்த நான் மரண வாக்குமூலம் போன்று ஒன்றை கூறுகிறேன். மரண வாக்குமூலம் கூற வேண்டிய நிலையில் இருப்பவன் பொய் சொல்ல வேண்டிய அவசியமில்லை. இன்றைய காமராஜ் ஆட்சியில் நமது நாடு அடைந்த முன்னேற்றம் இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளில் என்றுமே நடந்தது இல்லை. நமது மூவேந்தர்கள், அடுத்து நாயக்க மன்னர்கள், மராட்டிய மன்னர்கள், முஸ்லீம்கள், வெள்ளைகாரர்கள் இவர்கள் ஆட்சியில் எல்லம் நமது கல்விக்கு வகை செய்யப்படவில்லை.

தோழர்களே, என் சொல்லை நம்புங்கள், இந்த நாடு உருப்பட வேண்டுமென்றால் இன்னும் பத்து ஆண்டுகளாவது காமராசரை விட்டு விடாமல் பிடித்துக்கொள்ளுங்கள். அவரது ஆட்சி மூலம் சுகமடையுங்கள். காமராசரை பயன்படுத்திக் கொள்ள நாம் தவறிவிட்டால் தமிழர்களுக்கு வாழ்வளிக்க வேறு ஆளே சிக்காது."

( இராமநாதபுர மாவட்ட திராவிட கழக 4வது மாநாடு 9.7.1961-ல் தேவகோட்டையில் நடந்தபோது தந்தை பெரியாரின் உரையின் ஒரு பகுதி - 17.7.1961 விடுதலை)

கட்டிலைத் தூக்கி மரத்தடியில் போடு

காமராஜ் முதலமைச்சராக இருந்த போது மதுரைக்கு சென்றார். இரவு விருந்தினர் மாளிகையில் தங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விருந்தினர் மாளிகையிலோ இரவு மின்சாரம் இல்லை. ஊழியர்கள் வந்து பழுது பார்த்துக்கொண்டிருந்தார்கள். காத்திருந்த காமராஜ், " கட்டிலைத் தூக்கி மரத்தடியில் போடு" என்றார்.

அறைக்குள்ளிருந்த கட்டிலை வேப்பமரத்தடியில் கொண்டுவந்து போட்டார்கள்.

காமராஜ் படுக்க வந்தார். கட்டில் அருகே ஒரு போலீஸ்காரர் காவலுக்கு நின்று கொண்டிருந்தார்.

" நீ ஏன் இங்கே நிற்கிறாய்? என்னை யாரும் தூக்கிக்கொண்டு போய்விடமாட்டார்கள்! நீயும் போய்ப் படு" என்று போலிஸ்காரரை அனுப்பிவைத்த காமராஜ் சில நொடிகளில் உறங்கிவிட்டார்.

இந்த எளிமை உலக வரலாற்றில் எந்த மக்கள் தலைவரிடமும் காண்பது அரிது.

## அந்த தம்பி அப்படியா நடந்துக்கிறார்

அந்த அமைச்சர் சார்ந்த துறையில் பணிபுரிந்தவர்களுக்கு ஒரு மனக்குறையிருந்தது. தனது அறைக்கு அழைத்து பேச வரும் அதிகாரிகளுக்கு ஆசனம் கூட தராமல், நீண்ட நேரம் நிற்க வைத்தே பேசிவிட்டு அனுப்பினார் அமைச்சர்.

அதிகாரிகளுக்கு இந்த மனக்குறையை முதல்வரிடமே முறையிடுவதென முடிவெடுத்து ஒரு அதிகாரியை காமரஜரிடம் அனுப்பினர். அவரை வரவேற்று ஆசனத்தில் அமரச்செய்து, வந்த விவரங் கேட்க, அவர் அமைச்சர் தங்களை அவமதிப்பது போல் நடந்துகொள்ளும் விசயத்தைக் கூறினார்.

கேட்ட காமராஜ், " அந்த தம்பி அப்படியா நடந்துக்கிறார், அது தப்பாச்சே" என சொல்லிய வண்ணம் அந்த அமைச்சரை தொலைபேசியில் அழைத்து தனது அறைக்கு வருமாறு கூறினார்.

அந்த அதிகாரிக்கு சங்கடமாகிவிட்டது, நேரிடையாக அமைச்சரிடம் கேட்டு கடிந்து கொள்ளப்போகிறார் என பயந்துவிட்டார்.

இதற்குள் அமைச்சரும் வந்துவிட்டார். அந்த அதிகாரி எழுந்து நிற்க, காமராஜ் " நீங்க உட்காருங்க!" என்று சொல்லியவண்ணம் வந்த அமைச்சரையும் பக்கத்து இருக்கையில் அமரச் சொல்லிவிட்டார்.

பின்னர் அமைச்சரின் துறை சார்ந்த ஒரு திட்டம் பற்றி விவாதிப்பது போல பேசி " சரி, நல்லா பார்த்துக்கோங்க!" என்று சொல்லி அமைச்சரை அனுப்பிவிட்டார்.

அமைச்சர் சென்ற பின்பு, அந்த அதிகாரியை பார்த்து " இனி நீங்க போகலாம்... உங்களுக்குறிய மரியாதை இனி கிடைக்கும்" என்று அனுப்பிவைத்தார்.

அதுமுதல் அமைச்சரின் நடவடிக்கையில் மாற்றம்.

முதல்வர் எவ்வளவு நளினமாக நடந்துக்கொண்டு தங்கள் உள்ளக்குமுறலைத் தீர்த்து வைத்தார் என்பதையெண்ணி அதிகாரிகளனைவரும் வியந்தனர்.

## ஜீவாவின் துணைவியார் திரு. பத்மாவதி அம்மையாருக்கு ஒரு அரசு பணி தந்து ஆதரித்தார்

தாம்பரத்தில் ஒரு பள்ளித்திறப்பு விழாவுக்குச் சென்ற காமராஜ் அப்போது அங்கு வசித்த ஜீவாவையும் அழைத்துச் செல்லலாம் என நினைத்து அவரில்லம் சென்றபோது, ஜீவா வாழ்ந்த நிலை கண்டு அதிர்ந்து போனார். உடுத்த மாற்றுடை கூட இல்லாத நிலையில் துவைத்த ஆடையை உலர்த்திக் கொண்டிருந்தார் ஜீவா.

சொல்வேறு, செயல்வேறாக வாழும் தலைவர்களிடையில், ஜீவா தன் கொள்கையை உபதேசித்தபடியே வாழ்ந்த வைரக்கல்.

அவரது இல்லற ஓடத்தை ஓரளவேனும் இன்பம் ஏந்தி செல்லும் வகையில் ஜீவாவின் துணைவியார் திரு. பத்மாவதி அம்மையாருக்கு ஒரு அரசு பணி தந்து ஆதரித்தார்.

பொதுவுடமை நாடானா ரஷ்யா சென்று திருப்பிய சில நாட்களில் ஜீவா திடீரென சுகவீனமுற்றார்.

1963 ஆம் ஆண்டு ஜனவரி 17 ஆம் நாள் அவரை மருத்துவமனையில் சேர்ப்பதற்க்கு முன் சிம்மெனத் தமிழகம் முழுவதும் கர்ஜணை செய்த ஜீவா கடைசியாக பேசிய சொற்கள்

"பத்மாவதிக்கு தந்தி கொடு... காமராஜருக்கு டெலிபோனில் செய்தி சொல்" இவைமட்டுமே. மறுநாள் காலை 7:30 மணிக்கு அவர் உயிர் மூச்சு அடங்கியது.

## உங்கள் காணிக்கையை ஸ்ரீரங்க உண்டியலில் போட்டால்

தமிழ் நாட்டு மக்களுக்கு ஒரு பழக்கமிருந்தது, சபரிமலை அய்யப்பன் என்ற கேரள மாநிலக் கோயிலுக்கும், திருமலை வெங்கடேசப் பெருமாளுக்கும் தரும் முக்கியம் நமது தமிழகத் தெய்வங்களுக்கு தருவதில்லை.

இந்த பக்தி விசயம் தமிழகத்தை பொருளாராதரீதியாகவும் பாதித்து வருகிற ஒரு விஷயம். திருப்பதி ஏழுமலையானின் உண்டியல் வருமானம், பழனி திருக்கோயில் பெரும் வருமானத்தைவிட பல நூறு கோடிகள் அதிகம்.

காமராஜர் காலத்திலும் இதே நிலைதானிறுந்தது. திருமலைப் பிள்ளை வீதியில் வாழ்ந்த தலைவர் இதை எண்ணி ஆதங்கப்பட்டார். ஆன்மீகத் திருக் கூட்டம் தன்மீது வசை பொழிந்தாலும் பரவாயில்லை என்று ஒதுக்கிவிட்டு தன் மனதில் பட்டதை ஒளிவுமறைவின்றி பேசினார் " தமிழ் நாட்டு பக்தர்கள் மிக அதிக அளவில் காணிக்கையை திருப்பதி கோயில் உண்டியலில் கொண்டுபோய் செலுத்துகிறார்கள். நம் நாட்டு ஸ்ரீரங்கம் எந்த வகையில் திருப்பதிக்கு குறைந்தது கிடையாதே... உங்கள் காணிக்கையை ஸ்ரீரங்க உண்டியலில் போட்டால் நம் நாட்டுக்கு பெரிய பயனாக இருக்கும். மக்களுக்கு செய்ய வேண்டிய நல்ல காரியங்களுக்குப் பயன்படும். நம்ம சாமியும் பெரிய சாமிதான்" என்பதே காமராஜின் வேண்டுகோள்.

## நீ கக்கூசுக்கு இடம் வாங்க வேண்டும் என்று சொல்கிறாய். ஊரில் உள்ளவன், நான் பங்களா வாங்கிவிட்டதாக சொல்லுவான்

காமராஜ் முதல்வராக இருந்தபோது அவரது அன்னையாருக்கு செலவுக்கு மாதம் ரூ.120 கொடுத்துக் கொண்டிருந்தார். அது போதவில்லை என்பதற்கு அன்னையார், முருக தனுஷ்கோடியிடம் ஒரு காரணத்தைக் கூறினார்.

" அய்யா முதல் மந்திரியாக இருப்பதால், என்னைப் பார்க்க யார் யாரோ வருகிறார்கள். வடநாட்டைச் சேர்ந்தவர்களும் வருகிறார்கள். அவர்களுக்கு ஒரு சோடா, கலர் கொடுக்காமல் எப்படி அனுப்புவது? ஆகையால், அய்யாவிடம் சொல்லி, மாதம் 150 ரூபாய் கிடைக்க ஏற்பாடு செய்தால் நல்லது" என்று கேட்டுக் கொண்டார். முருக தனுஷ்கோடி சென்னை வந்ததும் காமராஜிடம் சொன்னார். ஆனால் அவரோ 120 ரூபாய்க்கு மேல் கொடுக்க மறுத்துவிட்டார். " யார் யாரோ வருவார்கள். உண்மைதான். அவர்கள் சோடா, கலர் கேட்கிறார்களா? அவர்களுக்கு ஒன்றும் கொடுக்க வேண்டாம். தவிர கையில் கொஞ்சம் ரூபாய் சேந்தால் அம்மா எங்காவது கோவில், குளம் என்று போய் விடுவார்கள். வயதான காலத்தில் வெளியூர் போவது நல்லதல்ல. எனவே இப்போது கொடுத்துவரும் 120 ரூபாயே போது" என்று சொல்லிவிட்டார்.

அதேபோல், அன்னையார் தமது மகள் நாகம்மாளின் மகன் ஜகவருக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்றும் வீட்டில் கக்கூஸ் அமைக்க பக்கத்தில் ஒரு இடம் ரூ.3000 த்துக்கு வாங்க வேண்டும் என்றும் முருக தனுஸ்கோடியிடம் கூறினார்.

ஒரு முதலமைச்சரின் வீட்டில் இந்த வசதி கூட இல்லாவிட்டால் எப்படி?

இதில் உள்ள நியாயத்தை உணர்ந்த தனுஷ்கோடி, காமராஜை சந்தித்துக் கூறினார். உடனே காமராஜ் " நீ கக்கூசுக்கு இடம் வாங்க வேண்டும் என்று சொல்கிறாய். ஊரில் உள்ளவன், நான் பங்களா வாங்கிவிட்டதாக சொல்லுவான். சிலர் பத்திரிக்கையில்கூட எழுதுவார்கள். அதெல்லாம் வேண்டாம். நீ போ" என்று கோபமாக பேசி அனுப்பினார்.

ஆனால் ஒரு தடவை " போர்வை வேண்டும்" என்று அன்னையார் எழுதிய கடிதத்தைப் பார்த்த காமராஜ், உடனே வாங்கி அனுப்ப எற்பாடு செய்தார். அதே போல் " டேபிள் பேன் வேண்டும்" என்று கடிதம் மூலம் கேட்டதும், அதையும் வாங்கி அனுப்பினார்.

அவர் வகித்த முதலமைச்சர் பதவி, அவரது வாழ்க்கை நிலையில் எந்த மாற்றத்தையும் எற்படுத்த அனுமதித்ததில்லை.

## .காமராஜர் சாலை

ராயபுரம் கடற்கரைக்குப் அடுத்த நிலையில் சென்னை மக்களின் மாலை நேர உல்லாசபுரியாக இருந்தது "ஹைகோர்ட் பீச்" என்றழைக்கப்பட்ட செயிண்ட் ஜார்ஜ் எதிரிலமைந்த பரந்த கடற்கரை. கடற்கரையில் வடபுறம் அமைந்த மக்கள் வாழ்பகுதியினர் அங்கு செல்ல, இடையில் வரும் இரயில்வே கிராசிங்கை கடந்தே போகவேண்டும். மின்சார தொடர்வண்டிகளின் அதிகமாக செல்கின்ற நிலையில், மக்களின் நடமாட்டமும், வாகன போக்குவரத்தும் ரயில்வே கதவடைப்பால் தடைபடும்.

இன்நிலையில்தான் ரிசர்வ் பேங்க் கட்டிடம் பிரமாண்டமான உருவில் சகல வசதிகளுடன் இப்போதிருக்கும் இடத்தில் கட்டப்பட்டுவிட்டது. இதனால் மாலை நேர கடற்கரைக் கூட்டத்துடன், வங்கி செயல்படும் நேரம் மக்கள் கூட்டம் ரயில்பாதையருகே கூடத்தொடங்கி போக்குவரத்து சிக்கலேற்ப்பட்டது.

இதிலிருந்து மக்களுக்கு வசதி செய்து தர வேண்டுமெனில், ஒன்று, அங்கு மேம்பாலம் அமைக்க வேண்டும், அல்லது தரை வழிப்பாலம் அமைக்க வேண்டும். வடபுறம் பாரிமுனை இருந்ததால் அங்கு மேம்பாலம் கட்ட சாத்தியமில்லை என

முடிவாயிற்று. அப்படியானால், தரைவழிப்பாலம் அமைத்து ரயில்வே பாதைக்கும், மக்களின் போக்குவரத்திற்க்கும் வழியமைக்க வேண்டும்.

இது குறித்து ஆய்வு செய்ய ரிசர்வ் வங்கி உயர்மட்ட குழுவினரும் தமிழக பொது வேலைத்துறையினரும் (PWD) ஆய்வு மேற்கொண்டனர்.

அவர்கள் ஆய்வின் முடிவுப்படி தரைப்பாலம் கட்டினால் 1) ரிசர்வ் பாங்க் கட்டிட அடித்தளம் பாதிக்கப்பட்டு கட்டிடத்தில் விரிசல் ஏற்படலாம். 2) அருகில் கடல் இருப்பதால் பாலத்தின் உட்புறம் ஊறிவரும் நீரூற்றை நிரந்தரமாக கட்டுப்படுத்த முடியாது. இந்த முடிவோடு முதலமைச்சர் காமராஜரை சந்திக்க சென்றனர்.

காமராஜ் கேட்டார், "என்ன முடிவெடுத்திருக்கீங்க ?" குழுவினர் சொன்னார்கள் " ஐயா! தரைவழிப்பாலம் கட்ட முடியாது என்றே நாங்கள் அபிப்ராயப்படுகிறோம்".

காமராஜ் புன்னகைத்தார், அடுத்து உறுதியான குரலில் சொன்னார்: " முடியாதுன்னு சொல்றதுக்காகவா டெல்லியிலிருந்து வந்தீங்க... தரை வழிப்பாலம் கட்டுறோம்... நீங்க சொல்ற எந்த குறைபாடும் வராமல் கட்டி முடிக்கிறோம். இந்த உலகத்திலே மனிதனால் செய்யமுடியாத்துன்னு எதுவுமே கிடையாது. நீங்க புறப்படலாம்" வந்தவர் சென்றனர்.

" இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து" அதற்க்குரிய வல்லுனர்களை அழைத்தார். பொறுப்பை ஒப்படைத்தார்.

இன்று நாள் தோறும் மக்கள் கடந்து செல்லும் "காமராஜர் சாலை" தரைவழிப் பாலம் உருவானது.



(காமராஜர்  குழந்தையாக இருந்தபோது படுத்த தொட்டில்)

## இப்படிப்பட்ட ஒரு மாமனிதர் இந்த நிலவுலகத்தில் ஊனோடும் உதிரத்தோடும் உலவினார் என்பதை வருங்காலச் சந்ததியினர் நம்பவே மறுப்பர்

குஜராத் பல்கலைக் கழகம் தனது பேரவையைக் கூட்டி, இந்தியாவிலேயே எந்த மாநில அரசும் நினைத்து பாராத அளவில் கல்வித் துறையில் செயற்கரிய சாதனைகள் செய்ததமைக்காக "டாக்டர்" பட்டம் தர தீர்மாணம் போட்டு காமராஜை தேடி வந்தார்கள். வந்தவர்களிடம் காமராஜ் என்ன சொன்னார் தெரியுமா?

" டாக்டர் பட்டமா? எனக்கா? நான் என்ன பெரிய சாதனை செஞ்சுட்டேன்னு இந்த முடிவெடுத்தீங்க. அதெல்லாம் வேண்டாம்... நாட்டில் எத்தனையோ விஞ்ஞானிகள், மேதாவிகள் இருக்கிறாங்க... அவுங்களை தேடிப்புடுச்சு இந்த பட்டத்தை குடுங்க. எனக்கு வேண்டாம்... நான் ஒத்துக்கொள்ளவே மாட்டேன்... போய்வாங்க" என்று சொல்லி அனுப்பிவிட்டார்.

டாக்டர். ஐன்ஸ்டீன் மகாத்மா மறைவின் போது விடுத்த செய்தி- " இப்படிப்பட்ட ஒரு மாமனிதர் இந்த நிலவுலகத்தில் ஊனோடும் உதிரத்தோடும் உலவினார் என்பதை வருங்காலச் சந்ததியினர் நம்பவே மறுப்பர்".

காமராஜரை பற்றி முற்றிலும் அறிந்தவர்களின் மனநிலையும் இதுவாகத்தான் இருக்கும்.

## .காமராஜ் ஆட்சியின் இறுதியில் தமிழகம் தொழில் வளத்தில் வடநாட்டு மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி இரண்டாம் இடத்தை பிடித்துவிட்டது

தொழில் துறைகளை வளர்பதைக் குறிக்கோளாகக் கொண்டு, பல்வேறு நடைமுறைகளை செயல்படுத்த தொடங்கியது காமராஜ் அரசு. காமராஜ் ஆட்சியின் இறுதியில் தமிழகம் தொழில் வளத்தில் வடநாட்டு மாநிலங்களை பின்னுக்குத் தள்ளி இரண்டாம் இடத்தை பிடித்துவிட்டது. அவரின் ஆட்சியில் தொழிதுறை வளர்ச்சியின் பகுதி...

பெரும் தொழில்கள்:
1. நெய்வேலி நிலக்கரித் திட்டம்
2. பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலை (I.C.F)
3. திருச்சி பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் (BHEL)
4. ஊட்டி கச்சா பிலிம் தொழிற்சாலை (HPL)
5. ஆவடி கனரக (டாங்க்) வாடன தொழிற்சாலை
6. கல்பாக்கம் அணுமின் நிலையம்
7. கிண்டி டெலிபிரிண்டர் தொழிற்சாலை
8. சங்ககிரி துர்கம் இந்தியா சிமெண்ட்ஸ்
9. மேட்டூர் காகிதத் தொழிற்சாலை
10. கிண்டி அறுவை சிகிச்சை கருவித் தொழிற்சாலை
11. துப்பாக்கி தொழிற்சாலை
12. நெய்வே நிலக்கரி சுரங்கம்
13. சேலம் இருப்பு உருக்காலை
14. பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலை
15. அரக்கோணம் இலகுரக ஸ்டீல்பிளாண்ட் தொழிற்சாலை

விவசாயம் சார்ந்த தொழில்கள்:
1. காமராஜ் பொருப்பேற்றபோது (1953) தமிழகத்தில் புகலூர், நெல்லிக்குப்பம், பாண்டியராஜபுரம் ஆகிய 3 சர்கரை ஆலைகள் இயங்கி வந்தது. 1963-ல் மொத்தம் 14 சர்கரை ஆலைகளாக உயர்ந்தது.
2. திருச்சியில் 20 லட்சம் சக்தி கொண்ட எரிசாராய உற்பத்தி தொழிற்சாலை துவக்கப்பட்டது.

பிற தொழில்கள்:
நூல் நூற்பு ஆலைகள் (159)
துணிநூற்பு பாவுகள் (Looms) (8000)
4 மிதிவண்டி தொழிற்சாலைகள்
6 உரத் தொழிற்சாலை
2 சோடா உற்பத்தி தொழிற்சாலை
21 தோல் பதனிடும் தொழிற்சாலை
ரப்பர் தொழிற்சாலை
காகித உற்பத்தி ஆலை
அலுமினிய உற்பத்தி ஆலை

தொழிற் பேட்டைகள்:
1. கிண்டி, விருதுநகர், அம்பத்தூர், ராணிப்பேட்டை, மதுரை, விருதுநகர், மார்த்தாண்டம், ஈரோடு, காட்பாடி, தஞ்சாவூர், திருச்சி உள்ளிட்ட 19 தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டன.
2. இது தவிர திண்டுக்கல், புதுக்கோட்டை, காரைக்குடி, கோவில்பட்டி, கிருஷ்ணகிரி, அரக்கோணம், தேனி, நாகர் கோயில், கும்பகோணம் மற்றும் சிவகங்கை ஆகிய இடங்களில் புதிய தொழிற்பேட்டைகள் துவங்க காமராஜ் அரசு முயற்சி மேற்கொண்டது.
3. மேலும் சென்னை, நெய்வேலி, தூத்துக்குடி, சேலம், கோவை, பொள்ளாச்சி, திருச்சி ஆகிய இடங்களில் தொழிற் குழுமங்கள் அமைக்கப்பட்டன.

காமராஜ் ஆட்சிக் காலத்தில் தமிழகம் தொழில் வளர்ச்சியில் புலிப் பாய்ச்சல் கண்டது என்பதை இதிலிருந்தே நாம் அறியலாம்.

## " அதென்ன... மனுசனுக்கு மனுசன் காலி விழுந்து கும்பிடறது"

தொண்டர்கள் யாராவது கதர் துண்டுகள், சால்வைகள் அணிவித்தால் தலை தாழ்த்தி ஏற்றுக் கொள்வார். ஆனால் பூமாலைகளை கோண்டுவந்தால் கையிலேயே வாங்கிக் கோள்வார். இது தொண்டர்களின் நெஞ்சில் ஆதங்கத்தை ஏற்படுத்தியது உண்டு.
தொண்டர்களின் அன்பு வெளிப்பாட்டை ஏற்பதில் ஏன் இந்த பாகுபாடு? இதற்கான விடையை ஒரு முறை திரு.வைரவன் விளக்கினார்.

காமராஜ் தனக்கு அணிவிக்கபடும் துண்டுகளனைத்தையும் பால மந்திர் எனும் அனாதைச் சிறுவர் பள்ளிக்கு அனுப்பி விடுவார். அவை அக்குழந்தைகளுக்கு

உடனடியாக பயன்படும். விலை உயர்ந்த சால்வைகள் விற்பனைக்கு பிறகே குழந்தைகளுக்கு சென்று சேரும் என்பதால் அவைகளை அதிகம் விரும்பமாட்டார்.

பூ மாலைகளை முதலில் வாங்கிக்கொண்டுதானிருந்தார். ஆனால் அவையனைத்தும் பயன்படாமல் தோட்டத்து எருக்குழிக்கே சென்று விடுவதால் மிகுந்த கவலையடைவார். மேலும் மலர்மாலைகளில் பூக்களினிடையே வாழும் புழுக்களின் கடிகளால் பலமுறை கழுத்து புண்ணாகிப் போயிருக்கிறார். ஜரிகை நூல் சுற்றிய மாலைகளால் பலமுறை அறுத்துக் கழுத்தில் கீறலகள் கண்டிருக்கிறார். நீரிழிவு நோய் தாக்கிய உடலாகையால், அப்புண்டளால் துன்பற்றிருக்கிறார். எனவே மலர் மாலைகளை விரும்ப மாட்டார்.

மேலும் தொண்டர்கள் அவர் காலில் விழுவதை விருப்பவே மாட்டார்.

" அதென்ன... மனுசனுக்கு மனுசன் காலி விழுந்து குப்பிடறது" என்று கூறுவார். சில வேளைகளில் காலில் விழுபவர்களை செல்லமாக அடித்தும் விடுவார்.

## .பள்ளிக்கூடம் போய்ட்டா எங்களுக்கு சொறு போடறது யாரு?

ஒருமுறை காரிலே பயணம் செய்துகொண்டிருந்த காமராஜ், ஒரு கிராமத்து ரோடு வழியாக சென்று கொண்டிருந்தார். அப்போது தூரத்தில் சிறுவர்கள் ஆடு மேய்த்துக்கொண்டிருப்பதை பார்த்ததும் காரை நிறுத்த சொன்னார். காரிலிருந்து இறங்கி ஆடு மேய்த்துக் கொண்டிருந்த சிறுவர்களை கூப்பிட்டார். ஆச்சர்யமடைந்த சிறுவர்கள் அவரை சூழ்ந்துக் கொண்டனர். காமராஜ் அவர்களோடு உரையாடத் தொடங்கினார்.

" என்னடா, தம்பிகளா, பள்ளிக்கூடம் போய்ப் படிக்காமல் ஆடு மேய்ச்சுக்கிட்டுக்கிறீங்க... ஏன் பள்ளிகூடம் லீவா?"
" பள்ளிக் கூடமா, அதெல்லாம் எங்க ஊரிலே கெடயாது" சிறுவர்கள் பதில்.
" அப்படியா? சரி ...உங்க ஊரில் பள்ளிக்கூடம் வச்சா, நீங்களெல்லாம் படிப்பீங்களா?"
" பள்ளிக்கூடம் போய்ட்டா எங்களுக்கு சொறு போடறது யாரு? ஆடு மேய்ச்சாலும் ஆட்டுக்கு சொந்தகாரர் சோறு போடுவார்... ஆடு குட்டி போட்டா ஒரு குட்டி ஆடு குடுப்பாறு".
" ஓஹோ ...இதுல இவ்வளவு விஷயம் இருக்கா? சரி, பள்ளிக்கூடம் கட்டி ஒரு வேளை சோறு போட்டா படிப்பீங்களா?"
" ஓ... படிப்போமே... எதுக்கும் எங்க அப்பாரை கேட்கனும்"

" சரி சரி ... நான் கேட்டுக்கிறேன், பள்ளிக்கூடம் உங்க ஊருக்கு வந்தா நீங்க எல்லாம் படிக்கப் போங்க!" என்று கூறிவிட்டு காரில் புறப்பட்டார்.

எல்லா மக்களையும் படிக்க வைக்க வெறும் பள்ளிக் கூடங்களை கட்டியும் ஆசிரியர்களை நியமித்தால் மட்டும் போதாது, அங்கு படிக்க வருகிறவர்களுக்கு நண்பகளில் உணவும் அளிக்க வேண்டிய நிலையிலேயே கிராமவாசிகள், பட்டணத்து ஏழைகள் நிலை இருக்கிறது என்பதை சிந்தித்தார்.

## .வேலு நல்லா இருக்கியா?

இன்னொரு நிகழ்ச்சி, அப்போது காமராஜ் முதலமைச்சராக இருந்தார். நெல்லை மாவட்ட சுற்றுப்பயணத்தில் இருந்த அவர், சிவகிரி பயணியர் விடுதியில் தங்கி இருந்தார். பொழுது புலர்ந்து கொண்டிருந்தது, கதவைத் திறந்து கொண்டு வெளியே வந்த காமராஜ், ஒரு காட்சியைக் கண்டார். " போய்யா... பொழுது விடிய நேரமில்லை. இப்பவே வந்துட்டீங்க தொந்தரவு கொடுக்க... அய்யா இன்னும் எழுந்திருக்கல. அப்புறமா வாங்க..." என்று உறத்த குரலில் போலீஸ்காரர் ஒருவர் கெடுபிடி செய்து கொண்டிருந்தார்.

விரட்டப்பட்ட அந்த நபரோ, " அய்யா... தயவு செய்யுங்க. நான் எந்த தொந்தரவும் செய்யமாட்டேன். இங்கணக்குள்ள் ஒரு ஓரமா நின்னுக்கிட்டிருக்கேன். தலைவர் வெளியே வரும் போது..." என்று கூறிக் கொண்டிருந்த போதே, அவரை மேலும் பேச விடாமல் போலீஸ்காரர் மறுபடியும் விரட்டினார். இதனைக் கண்ட காமராஜ், விரட்டப்படும் மனிதரின் முகத்தை உற்று கவனித்தார். திடீரென்று காமராஜின் முகத்தில் மலர்ச்சி. " இந்தாப்பா... அவரை ஏன் விரட்டுர... விடப்பா அவரை" என்ற காமராஜின் குரல் கேட்டு, போலீஸ்காரர் குரல் வந்த திசை நோக்கினார். அதற்குள் காமராஜரே அங்கு வந்துவிட்டார். " வேலு நல்லா இருக்கியா? வா... வா... உள்ளே போகலாம்" என்று கூறியபடியே, விரட்டப்பட்டவரின் தோளில் கையைப் போட்டு அழைத்துச் சென்றார். வேலுவின் உள்ளத்தில் திகைப்பும், மகிழ்ச்சியும் போட்டியிட்டன. எதிர்பாரத இந்த வரவேற்பு அவரை திக்கு முக்காட செய்துவிட்டது.

தன்னை காமராஜ் நினைவு வைத்திருந்தது, பார்த்தவுடன் " வேலு, வா வா" என்று அன்பு பொங்கிட அழைத்தது ஆகியவற்றால் தன்னை மறந்துவிட்ட அவர், காமராஜருடன் காப்பி அருந்தினார். கடந்த காலம் பற்றிய நினைவுகளை பரிமாரிக் கொண்டனர். ஆனால் காமராஜை சந்திக்க அந்த அதிகாலை நேரத்தில் எதற்காக வந்தாரோ, அந்த விஷயத்தைக் கூறவே மறந்துவிட்டார்.

காமராஜரோடு சுதந்திர போராட்ட காலத்தில் ஒரே கொட்டடியில் சிறை வாசம் அனுபவித்த உத்தம தேசத் தொண்டர் வேலு. காமரஜின் உபசரிப்பிலும்,

அன்பிலும் திளைத்த அவர், " அப்ப நான் போய் வர்ரேனுங்க " என்று கையெடுத்து கும்பிட்டுவிட்டு விடை பெற்றார். காமராஜரும், காலையில் எந்த கேட் அருகே போலீஸ்காரர் விரட்டி அடித்தாரோ, அந்த கேட் வரை வந்து வழியனுப்பினார்.

கேட்க வந்த விஷயத்தை வேலு மறந்துவிட்டார். கேட்காமலேயே ஊருக்குப் போய்விட்டார். வேலுவின் ஊரிலிருந்து தன்னை சந்திக்க வந்த காங்கிரஸ் நிர்வாகிகளிடம் வேலுவி குடும்ப நிலைமை, ஏழ்மையில் அவர்கள் குடும்பம் படும் கஷ்டங்கள் எல்லாம் விசாரித்து அறிந்து கொண்டார் காமராஜ். வேலு தம்மை சந்திக்க வந்த காரணத்தை தானே விசாரித்து புரிந்து கொண்டார். பிறகு சில நாட்களுக்குள்ளேயே, சின்னஞ்சிறு நிவாரணம் வேலுவின் வீடு தேடி சென்றது. மேலும் காமராஜ் முயற்சியில் ஒரு நல்ல இடத்தில் வேலுவுக்கும் வேலை கிடைத்தது. அதன் மூலம் ஒரு தொகை அவர் குடும்பத்துக்கும் கிடைக்க வழி பிறந்தது. வேலுவின் குடும்பத்தில் அதன் பிறகு துன்பம் இல்லை.

## 3 மைலுக்குள் பள்ளிக்கூடம்

அரசின் மொத்த வருவாய் குறைவாக இருந்தாலும், நாட்டின் நல்ல, பரந்த உள்ளம் படைத்த செல்வந்தர்களையும் கல்விப் பெருக்கத்திற்கு அழைத்துவர திட்டமிட்டு மாநிலம் முழுவதும் பள்ளி சீரமைப்பு மாநாடு நடந்த நேரமது.

அப்படி நடந்த பரமக்குடி கல்வி மாநாட்டில், கல்வியின் பெருமையையும், நாட்டோர் அதை பெருக்குவதில் ஆர்வங்கொள்ள வேண்டிய அவசியத்தையும் அழகுத் தமிழில் எழுதி, அச்சடித்து விநியோகம் செய்திருந்தார் துணை ஆய்வாளர் திரு. கந்தசாமி அவர்கள். மாநாட்டின் போது தன்னிடம் தந்த ஒரு அச்சுப் பிரதியை படித்த காமராஜ், சட்டமன்ற உறுப்பினரைக் கூப்பிட்டு அதைப் பத்தாயிரம் படிவங்களெடுத்து தொகுதி பூராவும் விநியோகிக்கும்படி கூறினார்.

மாநாடு முடித்து புறப்படும் போது, " எங்கே அந்த கல்வி அதிகாரித் தம்பி, அவரை கூப்பிடுங்க" என்றார். விரைந்து ஜீப் அருகே வந்த கந்தசாமியை " வாங்க தம்பி, காருலே ஏறுங்க... உங்ககிட்ட சில விவரங்கள் கேட்கணும்" என்றார்.

ஏற்கனவே முதல்வரின் பாதுகாப்பு அதிகாரி வண்டியின் முன்னிருக்கையில் அமர்ந்துவிட, இவர் சற்றே யோசித்தார்.

" இங்கே ...என் பக்கத்தில் உட்காருங்க" என்றழைக்க, இவர் ஒரு கணம் மலைத்துவிட்டார். நாட்டின் முதல்வருடன் அமர ஜீப் வண்டி புறப்பட்டது. போகும் போதே அவ்வட்டாரத்தில் இவரது சரகத்தில் உள்ள் பள்ளிகளைப் பற்றியும் கிராமங்கள் காட்டும் ஆர்வத்தையும் பற்றி விசாரித்துக் கொண்டே வந்தார். அப்பொது காட்டாற்றின் தரைப் பாலத்தை வண்டி தாண்டிக் கொண்டிருந்தது.

உடனே காமராஜ் வண்டியை நிறுத்த சொல்லி " ஆமா... இந்தக் காட்டாற்றில் தண்ணி போகும் போது இந்தப் பக்கத்து மாணவர்கள் எப்படிப் பள்ளிக் கூடத்துக்கு வருவாங்க?" என்று கேட்க.

" மழைக் காலத்தைல் வெள்ளம் போகும் போது மாணவர்களால் வர முடியாதையா" என்றார். அப்போது காமராஜ் "கல்வித்துறை உத்தரவுப்படி 3 மைலுக்குள்ள் பள்ளிக்கூடம் இருந்தா, பக்கத்தில் வேற பள்ளிக் கூடத்துக்கு அனுமதி கிடையாது. அப்படித்தானே. அப்போ நீங்க ஒன்னு செய்யுங்க. இந்த காட்டாற்றைக் காரணமாகக் காட்டி இந்தப் பக்கத்தில் ஒரு பள்ளிக் கூடத்துக்கு அனுமதி கேளுங்க... நானும் சொல்லி அதற்கு ஒப்புதல் தரச்சொல்லிடறேன்" என்றார்.

கல்வி அதிகாரி திரு. கந்தசாமி ஆச்சர்யத்தால் உறைந்து போனார்.

## இதில் கூட மேல் நாட்டுக்காரந்தானா நமக்கு வழிகாட்டி?

சென்னை நகரின் புறநகர் பகுதியில் குட்டி நகரங்களை மேலை நாட்டுப் பாணியில் திட்டமிட்டு அமைக்க நகர அபிவிருத்திக் கழக அதிகாரிகள் திட்டமிட்டனர். ஒரு குழுவினர் மேலை நாடுகள் சென்று அவர்கள் புதிதாகத் திட்டமிட்டுக் கட்டிய நகரங்களை நேரிலே பார்த்து வடிவமைப்புப் படங்கள் தாயாரித்து வந்து, அதை தமிழகத்தில் செயல்படுத்த கூடிப்பேசினர். துறைசார்ந்த அமைச்சரையும் நேரில் சந்தித்துக் கோப்பில் ஒப்புதலும் பெற்றுவிட்டனர்.

இனி முதலமைச்சரின் பார்வைக்கு அனுப்பி அவர் ஒப்புதல் பெற்றுவிட்டால் விமானத்தில் பறக்க வேண்டியத்துதான் பாக்கி.

காமராஜரிடம் வந்த கோப்பை பரிந்துரைத்தவர்கள் அக்கால ஐ.சி.எஸ் என்ற உயரிய அரசு பணிப்பட்டத்தை பெற்றவர்கள், லண்டணிலே படித்தவர்கள்.

அதே போல மேனாட்டுப் பயணத்துக்கு தயார் நிலையிலேயிருந்த அதிகாரிகளும் காமராஜர் நிச்சயம் இதில் கையெழுத்திட்டு விடுவார் என்றே நம்பினர். கோப்பை படித்து முடித்த காமராஜ் ஒரு கணம் சிந்தித்தார்.

ஒரு நகரை திட்டமிட்டு அமைத்த நிலை நமது தமிழ் நாட்டிலோ, இந்தியாவிலோ இல்லவே இல்லையா! இதில் கூட மேல் நாட்டுக்காரந்தானா நமக்கு வழிகாட்டி? இந்த அதிகாரிகள் சென்று பார்த்து வருவதாகச் சொல்லும் இடங்கள் நம் பண்பாட்டுக்கு ஒத்து வரக் கூடியவைதானா? நாமும் நாடு பூராவும் சுத்தி வந்திருக்கிறோமே. நம் மூதாதையர்கள் இந்த நகரமைபுக்கலையில் நம்மைப் பிற நாட்டைப் பார்த்து ஏங்க வைக்கவா செய்திருப்பார்கள்? மக்கள் ஒரு துட்டு ,

ரெண்டு துட்டாக கொடுத்த வரிப்பணத்தில் இந்த உலக சுற்றுலா தேவைதானா? என்று சிந்தித்தபோது, அவரது அவர் மனதிலே மதுரை மாநகர் தோன்றியது.

ஊரின் மையப்பகுதியில் மீனாட்சி சுந்தரேஸ்வரர் கோவில், சுற்றிலும் தேரோடும் ரதவீதிகள், அடுத்த சுற்றில் அளவெடுத்து அமைத்தாற்போல நான்கு மாட வீதிகள், அதற்கடுத்து ஆவண வீதிகள், இடையில் இவைகளை இணைக்கும் சாலைகள். அக்காலத்திலேயே எவ்வளவு தொலைநோக்கோடு நகரை அமைத்திருக்கிறார்கள் நம்முன்னோர். இந்த அமைப்புக்கு மேல் திட்டமிடல் என்ன இருக்கிறது? என்று சிந்தித்தவுடன் கோப்பிலே எழுதினார். " இதற்காக மேலை நாட்டுப்பயணம் தெவையில்லை, எக்காலத்துக்கும் ஏற்றாற்போல அமைக்கப்பட்டிருக்கும் நம் மதுரை நகரைச் சென்று கண்டு ஆய்வு செய்து வாருங்கள்" என்று குறிப்பெழுதிக் கையெழுத்திட்டு சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு அனுப்பினார்.

## .பேச்சு முன்னே மாலை பின்னே

காமராஜரின் குணம் அவரின் பேச்சு, செயல் எல்லாவற்றிலுமே வெளிப்படும்.

வெளியூர் பொதுக்கூட்டம் ஒன்றில் முதலமைச்சர் காமராஜ் வருவதற்காகத் திரளான மக்கள் கூட்டம் காத்துக்கொண்டிருந்தது. மலர் மாலைகளோடு தொண்டர்களும், பிரமுகர்களும் இருப்பதை பார்த்த காமராஜ், " பேச்சு முன்னே மாலை பின்னே" என்று கூறிவிட்டார்.

அதற்க்கு காமராஜ் ஒரு காரணமும் சொன்னார். " பொதுமக்கள் நம் பேச்சை கேட்பதற்காகதான் காத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் முதலில் அவர்கள் நன்மைக்கானன விஷயங்களைப் பேசிவிட்டு பிறகு மாலை மரியாதையை ஏற்றுக் கொள்ளலாம் என்றார் பெருந்தன்மையோடு.

அதே போன்று மேடையில் அதிக வெளிச்சம், பொதுமக்கள் இருக்கும் பகுதியில் வெளிச்சம் குறைவாகவும் இருந்தால் கடிந்து கொள்வார். " மக்களை பார்க்கத்தான் வந்தேன். அவர்களது முக உணர்ச்சிகளைப் பார்த்தால்தான் நாம் செய்வது சரியா தவறா என்று தெரியவரும். எனவே விளக்குகளை அவர்களை பார்த்துத் திருப்புங்கள்" என்பார்.

நீங்கள் அதிகம் பேசி விட்டீர்கள்

சென்னை நகர சபைக்குத் தேர்தல் நடந்த சமயம். திருவல்லிக்கேணி பார்த்தசாரதி நாயுடு தெருவில் காங்கிரஸ் தேர்தல் பிரசாரக் கூட்டம். காமராஜ் மேடையில் அமர்ந்திருந்தார்.

" காமராஜர் திருமணம் ஆகாதவர். குடும்பம் இல்லை. குடும்பம் இல்லாதவருக்கு கஷ்ட நஷ்டம் எப்படித் தெரியும்? என்ன பொறுப்பு இருக்கும்? பொறுப்பு இல்லாதவருக்கு எப்படி ஆட்சியை சரிவர நடத்த முடியும்? என்று ஒரு தலைவர் குறை கூறியிருந்தார். அதற்க்கு பதிலளிக்க எழுந்த ஒரு பேச்சாளர் அந்த தலைவரை முன்னிலைப்படுத்தி பதில் கூற முயன்றார். பேச்சின் தரம் வசமாக மாறத் தொடங்கியது.

அதுவரைக் கேட்டுக் கொண்டிருந்த காமராஜ் தாங்க முடியாமல் கோபத்துடன் எழுந்து " நீங்கள் அதிகம் பேசி விட்டீர்கள். போதும் அமருங்கள், அடுத்தவர் பேசட்டும்" என்று கூறி வரம்பு மீறி பேச முயன்றவரை தடுத்தார்.

தனக்கு துன்பம் வரும்படி பேசியவர் கூட மனம் நோகக்கூடாது என்று நினைக்கக் கூடிய உயர்ந்த பண்பினை பெற்றவர் காமராஜ்.

சட்டத்தை மீறி யார் நடந்தாலும் அது தப்புதான்

திருநெல்வேலி மாவட்டத்தில் காங்கிரஸ் கட்சி பிரமுகர் ஒருவர் திரைப் பட அரங்கம் ஒன்றை கட்டியிருந்தார். ஆனால் அதை திறப்பதற்க்கு மாவட்ட ஆட்சியரின் அனுமதி கிடைக்காமலேயே இருந்தது. அம்மாவட்டத்தில் காமராஜ் சுற்றுப்பயணம் போகிறார் என்பதை அறிந்து கொண்ட அந்த பிரமுகர், காமராஜரை அணுகி திரையரங்கை திறக்க ஒரு தேதி வாங்கி விட்டார். அதற்க்கு பயந்து கலெக்டர் அனுமதி தந்துவிடுவார் என்பது அவரின் எண்ணம்.

குறிப்பிட்ட நாள் வந்தது. காமராஜரும் அந்த திரையரங்கத்திற்க்கு வந்து சேர்ந்தார். அது வரையிலும் அனுமதி கிடைக்காததால் " எல்லா ஏற்பாடுகளும் ரெடி, ஆனா கலெக்டர் மட்டும் இன்னும் லைசென்சு கொடுக்கவில்லை" என்று காமராஜிடம் புகார் செய்தார்.

சுற்றுப்பயணத்தில் தன்னோடு இருந்த கலெக்டரிடம் விவரம் கேட்டார் காமராஜ். " இந்த திரையரங்கை கட்டியதி சில விதிமுறைகள் மீறப்பட்டிருக்கின்றன. அதனால்தான் அனுமதி கொடுக்கத் தாமதமாகிறது. இப்போது நீங்கள் விரும்பினால் உடனே அனுமதி கொடுத்து விடுகிறேன்." என்றார் கலெக்டர். உடனே காமராஜர் " அய்யய்யோ வேண்டாம் சட்டத்தை மீறி யார் நடந்தாலும் அது தப்புதான். உங்களுக்கு திருப்தி ஏற்பட்ட பிறகே அனுமதி கொடுங்கள்" என்று கலெக்டரிடம் சொல்லிவிட்டு திரையரங்கை திறக்காமலேயே சென்றுவிட்டார்.

பயிர்களை சுமந்து நிற்க்கும் போது நிலம் அழகு பெறுகிறது.
தாமரையை சுமந்து நிற்க்கும் போது குளம் அழகு பெறுகிறது.
நேர்மையை சுமந்து நிற்க்கும் போது தலைவன் அழகு பெறுகிறார்.

## .நம்பிக்கையின் நாயகமாக திகழ்ந்தவர் காமராஜ்

நம்பிக்கையின் நாயகமாக திகழ்ந்தவர் காமராஜ். அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் சென்னை பூவிருந்தவல்லிக்கு அருகில் ஒரு பார்வையற்றோர் பள்ளி ஒன்று இயங்கி வந்தது. தனியார் அறக்கட்டளையை சார்ந்த பள்ளி, அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டது. பல ஏக்கர் பரப்பை கொண்டிருந்த அந்தப் பள்ளியின் வளாகம், அமைச்சர் ஒருவரின் பார்வையில் பட்டுவிட்டது. அந்த பள்ளியை வேறு ஒரு இடத்துக்கு மாற்றிவிட்டால், அந்த இடத்தை வேறு ஒரு காரியத்திற்க்கு பயன்படுத்தலாம் என்று அவர் திட்டமிட்டார். இதை அறிந்ததும் காமராஜ் கொதித்துப் போய்விட்டார். மாற்றும் முயற்சியை தடுத்து நிறுத்தினார்.

அப்போது அவர் கூறினார் " மற்றவர்கள் மேல் நம்பிக்கை வைக்காமல் நம்மிடம் நம்பிக்கையோடு கொடுத்து விட்டுப் போயிருக்கிறார்கள். இந்தப் பள்ளியை நடத்தாமல் போனால் மட்டும் நம்பிக்கை துரோகமல்ல, இந்த இடத்தை மாற்றினாலே நம்பிக்கை துரோகம்தான். அரசிடம் ஒப்படைக்கப்பட்ட அறக்கட்டளையே சரியா நடக்கவில்லை என்றால் மற்றவர்கள் எந்த நம்பிக்கையோடு அறக்கட்டளைகளை நிறுவ முன்வருவார்கள். சாமர்த்தியமான பேச்சு நப்பிக்கையை காப்பாற்றாது. நாணயமாக நடந்துக்கணும், அப்போதுதான் நாலுபேர் நம்புவார்கள்."

## .காமராஜர் கீழே இறங்கி காரை தள்ளினார்

காமராஜரின் குரு சத்யமூர்த்தி. அவரின் புதல்வி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி, காமராஜ் பற்றி கூறியுள்ள நிகழ்வுகளில் ஒன்று.....

காமராஜ் தன்னை பற்றியோ, தன் வீட்டைப் பற்றியோ சிந்திப்பதே கிடையாது. இதற்கு ஒரு சம்பவத்தை என்னால் கூற முடியும்.

அவர் எங்கள் குடும்பம் மீது அளவு கடந்த அன்பும் பாசமும் வைத்திருந்தார். முதலைமைச்சராக இருந்த போது அவரும், நாங்களும் திருப்பதி கோயிலுக்கு சென்றிருந்தோம். திருப்பி வரும் போது ரேணிகுண்டாவில் புதைமணலில் காரின் டயர்கள் சிக்கிக் கொண்டது. கார் நகரவில்லை.

காரில் இருந்த காமராஜர் கீழே இறங்கி காரை தள்ளினார். முதல் அமைச்சராக இருந்த அவர் எந்தவித கவுரவமும் பார்க்காமல் காரை தள்ளியது எங்களுக்கு ஆச்சரியமாக இருந்தது.

எங்கள் தந்தையை குருவாக மதித்து அந்த குருவுக்கு பெருமையும் புகழும் சேர்த்த முதன்மை சிஷ்யராகவே காமராஜர் வாழ்ந்து மறைந்தார்.

## தாயார் சிவகாமி அம்மையார் சுகவீனமாய் இருப்பதாக தகவல் வந்தது

1969-ம் ஆண்டு ஜனவரி 8-ம் தேதி நாகர்கோவில் இடைத்தேர்தல் நடந்தது. அப்பச்சி அப்பச்சி என குமரி மக்கள் காமரஜரை அன்போடு அழைத்தனர். ஒரு லட்சத்து 28 ஆயிரத்து 201 ஓட்டுகள் வித்யாசத்தில் காமராஜரை வெற்றி பெற வைத்தனர். நாகர்கோவிலின் நாயகனாகி, குமரி மக்களின் அப்பச்சி ஆனார் காமராஜர்.

தாயார் சிவகாமி அம்மையார் சுகவீனமாய் இருப்பதாக தகவல் வந்தது. விருதுநகர் வீட்டுக்கு சென்ற காமராஜ் மயங்கிய நிலையில் இருந்த அன்னையின் அருகில் அமர்ந்தார். அன்னையாரின் முகத்தில் எவ்வித பதட்டமோ, பரபரப்போ காணப்படவில்லை. கண் விழித்துப் பார்த்த அன்னையில் விழிகளில் நீர் வழிந்தது. எவ்வித சலனமுமின்றி தாயின் உணவு மற்றும் மருந்து பற்றி காமராஜ் விசாரித்தார்.

" ஒரு வாய் சாப்பிட்ட்டு விட்டுப் போ" என்று அன்னை சிவகாமி கூறினார். காமராஜரும் அவசர அவசரமாக சாப்பிட்டுவிட்டு "அப்போ நான் வரட்டுமா என கை கூப்பினார்". " மகராசனாய் போய்ட்டு வா" என்று தாய் விடை கொடுத்தார். வீட்டில் சாப்பிட்டு எவ்வளவு நாளானது? என்று உடன் இருந்தவர்கள் கேட்டார்கள். " ஒரு 25 அல்லது 30 வருடம் இருக்கும்" என்றார் காமராஜ். அனைவரும் திகைத்தனர். மரண படுக்கையில் இருந்த தாயின் கடைசி ஆசையை நிறைவேற்றிய காமராஜ் உடனே நாட்டைப் பற்றி பேச ஆரம்பித்தார்.

## அய்யா...! பரிட்சைக்கு பணம் கட்டியாச்சுங்க

காமராஜர் இல்லம், காலை நேரம். ஒரு சிறுவனும் சிறுமியும் காமராஜரின் வீட்டுகுள் நுழைய முயல்வதும் ஊழியர் ஒருவர் அவர்களை "உள்ளே வரக்கூடாது" என விரட்டுவதுமாக இருந்தார். குழந்தைகள் இருவரும் நம்பிக்கை இழந்து தெருவை நோக்கி நடக்க ஆரம்பித்தார்கள். அப்போது எதற்காகவோ வெளியே வந்த காமராஜ், ஊழியர் இரு குழந்தைகளை கைகளை ஓங்கி அடிப்பதுபோல் மிரட்டி விரட்டிக்கொண்டிருந்ததை பார்த்துவிட்டார். உடனே குழந்தைகளை அழைத்தார். " என்ன? ...யாரை பார்க்க வந்தீங்க?" என்று அன்புடன் விசாரித்தார். குழந்தைகள் " எங்க அண்ணாவுக்குப் பரிட்சைக்குப் பணம் கட்ட அம்மாவுக்கு

வசதியில்லே. உங்களை பார்தா... ." என்று சிறுமி சொல்லி முடிக்குமுன்னே குறுக்கிட்ட காமராஜ், சிறுமியின் தொள்களில் தட்டிக்கொடுத்தபடியே " அம்மாதான் அனுப்பி விட்டாரா?" என கேட்டார்.

" இல்லை, நாங்களாகவேதான் வந்தோம். அம்மா, தினம் அப்பளம் போட்டு, வீடு வீடாகக் கொண்டுபோய் வித்துட்டு வருவாங்க. அதில வர்ற வருமானத்தை வைச்சுதான் எங்களை படிக்க வைக்கிறாங்க". காமராஜருக்கு இதற்க்கு மேலும் அந்தக் குழந்தைகளின் குடும்பம் படும்பாட்டைக் கேட்க மனம் பொறுக்கவில்லை. சில காலமாக, காமராஜரால் மடிப்படிகளில் ஏறி இறங்க முடியவில்லை. அதனால், வீட்டின் முன் பகுதியிலுள்ள ஓர் அறையிலேயே அமர்ந்து, தேடி வருபவர்களிடம் பேசுவதையே வழக்கமாக கொண்டிருந்தார். எனினும், தம்மிடம் உதவி கேட்டு வந்திருந்த இந்த இரு பெரிய மனிதர்களுக்காக மாடிப் படியேறினார். இறங்கி வரும் போது அவரது கையில் ஒரு புத்தம் புதிய கவர் இருந்தது. அந்த கவரில் சில பத்து ரூபாய் நோட்டுக்கள் இருந்தன. குழந்தைகளை அழைத்து, சிறுமியின் கையில் கவரைக் கொடுத்த காமராஜ் " அண்ணாவுக்கு பரிட்சைக்கு பணம் கட்ட இதை வச்சுக்கோங்க, அம்மா பேச்சை கேட்டு படிச்சு, நல்ல புள்ளைங்களா நடக்கணும்... தெரியுதா..?" என்று அன்புடன் சொன்னவர், அவர்களை முதிகில் தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

மறுநாள், அதே குழந்தைகள் காமராஜரை தேடி வந்தனர். " அய்யா...! பரிட்சைக்கு பணம் கட்டியாச்சுங்க. இந்த ரசீதை அம்மா உங்களிடம் காட்டிட்டு வரச் சொன்னாங்க" என்றபோது, காமராஜ் மனம் நெகிழ்ந்து போனார். அந்தக் குழந்தைகள் காமராஜரின் கால்களில் விழுந்து நமஸ்காரம் சொன்னபோது, அவருக்கு மகிழ்ச்சி ஒரு பக்கம், நெகிழ்ச்சி மற்றொரு பக்கம்.

அருகிலிருந்த நவசக்தி நிருபர் அம்பியிடம் " ஏழைக் குழந்தைகள்.. பொய் சொல்ல மாட்டார்கள் என்று நினைத்தேன். பொறுப்போடு வந்து ரசீதைக் காட்டி விட்டுப் போகின்றனர்... நல்ல பிள்ளைகள்" என்றார் உள்ளம் நெகிழ்ந்த நிலையில்.

## .மின்னல் வேகத்தில் எடை போட்டு விடுவார்

காமராஜரின் நிர்வாக திறமை பற்றியும், அவர் பிரச்சனைகளை அணுகும்முறை பற்றி, அவர் கீழ் பணியாற்றிய தலைமை செயலாளர் டபிள்யூ. ஆர். எஸ். சத்தியநாதன் கூறியுள்ளதை கீழ் காணலாம்.

" சென்னை அரசாங்கத்தின் தலைமைச் செயலாளராகக் காமராஜர் ஆட்சிக் காலத்தில் ஐந்தாண்டுகள் மகிழ்ச்சியுடன் பணியாற்றினேன். நான் அவர்முன்

எவ்வளவு பெரிய பிரச்சனையை வைத்தாலும், அது எத்தனை சிக்கல் வாய்ந்ததாக இருப்பினும் ஒரு நொடியில் முடிவுக்கு வந்து விடுவார். பிரச்சனைகளை அவர் அனுகும்முறை நேராடியாக இருக்கும். அவருடைய தீர்ப்பு மிகத் தெளிவாக இருக்கும். நாங்கள் வார்த்தை சிலம்பாடி வாக்குவாதத்தில் ஈடுபட்டதே கிடையாது. எதையும் விளக்கிச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டதே இல்லை. வியக்கத்தக்க வேகத்தில் பிரச்சனையைக் கண்டுபிடித்து விடுவார். அதேபோல் தம்மிடம் பிரச்சனைகளைச் சொல்ல சொல்ல வருவர்களுடைய குணத்தை மின்னல் வேகத்தில் எடை போட்டு விடுவார். அவருடைய ஆலோசனைக்கு நான் எழுதி வைக்கும் பைல் முழுவதையும் மிகக் கவனமாக படிப்பார். நன்றாக ஐயமறப் புரிந்துகொள்வார். அதன் பின்பே தீர்மானிப்பார்" என்று பெருமிதத்தோடு கூறியுல்ளது உற்று நோக்கத்தக்க தாகும்.

தமிழகத்தை மின்மயமாக்குவதில் காமராஜ் அரசு

தமிழகத்தை மின்மயமாக்குவதில் காமராஜ் அரசு மிகப் பெரும் சாதனை படைத்தது. மின்மயமாக்குதலுக்கு அளிக்கப்பட்ட நிதியிலிருந்து இத்தகைய சாதனையை செய்வது என்பது நினைத்துப் பார்க்க முடியாத் ஒன்றாக இருந்தது. ஏனெனில் எல்லா மாநிலங்களிலும் ஒரு கிராம மின்மயமாக்குதலுக்கென திட்டமிட்டு செய்யப்பட்ட செலவுத் தொகை ரூ. 80,000. இந்த அளவு தொகையை கொண்டு உறுதியாக மிகப்பெரிய எண்ணிக்கையில் கிராமப்புற மின்மயமாக்குதலை மேற்கொள்ள இயலாது என்பதை உணர்ந்த காமராஜ் அரசு, கிராமபுற மின்மயமாக்கலுக்கு விரைந்து, குறைந்த செலவில் மெற்கொள்ள எளிய திட்டத்தை ஏற்படுத்தியது. அதன்படி, மின்மயமாக்கலுக்கு உள்ளூர் பொருட்களே பெரும்பாலும் பயன்படுத்த திட்டமிடப்பட்டது. திட்டத்தின் படி தமிழக் மின்சார வாரியமே, சொந்த பணி மனைகளை மாநிலத்தின் பல இடங்களில் பரவலாக ஏற்படுத்தி பொருட்களை வடிவமைத்துக் கொண்டது.

இதன் காரணமாக, கிராம மின்மயமாக்குதல் செலவுத் தொகை வெகுவாக குறைக்கப்பட்டு, பல மடங்கு அதிகமான கிராமங்கள் மின்மயமாக்கப்பட்டன. தமிழகத்தின் இந்த செயல்பாடுகளை அறிந்த மத்திய அரசின் திட்டக்குழு, ஓர் ஆய்வுக்குழுவை நியமித்து முழுமையான ஆய்வினை மேற்கொண்டது. அந்த ஆய்வு அறிக்கையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்ட அதே முறையை பின்பற்றுமாறு அனைத்து மாநிலங்களுக்கும் மத்திய அரசு ஆணையிட்டது.

## .மின்மயமாக்குதலில் தமிழ்நாடு மிகப் பெரிய சாதனை

காமராஜ் அரசு செயல்படுத்திய பல்வேறு மின் உற்பத்தி திட்டங்களை முன்பு பார்த்தோம்.

குறிப்பாக பெரியாறு மின் திட்டம், குந்தா நீர் மின் திட்டம் முதலிய அதிக மின் உற்பத்தி திறன் கொண்ட திட்டங்களை நிறைவேற்றி முடித்ததனால், காமராஜ் அரசு கிராமப்புறங்களை விரைந்து மின்மயமாக்க முடிந்தது.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், கிராமப்புற மின்மயமாக்குதலில் தமிழ்நாடு மிகப் பெரிய சாதனை செய்திருந்தது. 1963-ம் ஆண்டு இந்தியா முழுவதும் மின்மயமாக்கப்பட்ட 5000 மக்கள் தொகை கொண்ட கிராமங்கள், நகரங்களின் மொத்த எண்ணிக்கை 32,500. இதில் தமிழகத்தில் மட்டும் இந்த 5000 மக்கள்தொக அடிப்படையில் 657 நகரங்களும் 6777 கிராமங்களும் மின்மயமாக்கப்பட்டிருந்தது. மற்ற மாநிலங்களின் 1963 மார்ச் எண்ணிக்கை கீழ்வருமாறு:

| மாநிலங்கள் | நகரங்கள் | கிராமங்கள் |
|---|---|---|
| ஆந்திரப் பிரதேசம் | 392 | 2712 |
| அஸ்ஸாம் | 20 | 72 |
| பீகார் | 186 | 2244 |
| குஜராத் | 182 | 954 |
| கேரளா | 467 | 1316 |
| மத்திய பிரதேசம் | 129 | 477 |

| | | |
|---|---|---|
| <u>**சென்னை**</u> | <u>657</u> | <u>6777</u> |
| மகாராஷ்ரா | 259 | 1352 |
| மைசூர்)கர்நாடகா( | 192 | 2889 |
| ஒரிசா | 38 | 177 |
| பஞ்சாப் | 199 | 4225 |
| ராஜஸ்தான் | 113 | 145 |
| உத்திரப்பிரதேசம் | 300 | 4388 |
| மேற்கு வங்காளம் | 124 | 382 |

மேலும் இதே எண்ணிக்கை இரண்டாம் ஐந்தாண்டு திட்ட கால முடிவில், 1966 வாக்கில் 22,103 கிராமங்கள் மின் இணைப்பை அனுபவித்தன. இதில் குறிப்பிடத்தக்கது, முதல் ஐந்தாண்டு திட்டம் தொடங்கிய காலத்தில், 813 கிராமங்கள் மட்டுமே மின் இணைப்பை பெற்றிருந்தன. இவ்வளவு வீரியமான

கிராமிய மின்மயமாக்கலுக்கு காரணம் இத்துறையில் காமராஜ் அரசின் சீரிய செயல்பாடே. இந்த கிராமிய மின் இணைப்பு, கிணற்று மற்றும் பம்பு செட்டு பாசன பெருக்கத்திற்க்கு பெரு துணையாக அமைந்தது.

## நீர்மின் திட்டங்கள்:

காமராஜ் அரசு மின் உற்பத்தியை பெருக்கவதிலும், கிராமப் பகுதிகளை மின்மயபாக்குவதிலும் அதிக சிரமம் எடுத்துக் கொண்டது. காமராஜ் ஆட்சியேற்ற போது, தமிழகத்தில் மேட்டூர், பைக்கரா, பாபநாசம் எனும் மூன்று மின்னுற்பத்தி தலங்களை மட்டுமே இருந்தது.

காமராஜ் பதவியேற்றதும், முதல்/இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில் நான்கு பெரிய மற்றும் சிறிய நீர்மின் திட்டங்களை செயல்படுத்த தொடங்கியது. ஆனால் அரசின் வருமானமோ வெறும் 45 கோடி, முதலாம் ஐந்தாண்டு திட்டத்தில் சென்னை மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட தொகையோ 95 கோடி.

நீர்மின் திட்டங்கள்:
1. குந்தா நீர் மின் திட்டம் ( 26 கோடி )
2. பெரியாறு மின் திட்டம் ( 10 கோடி) - இது திருவாங்கூர்-கொச்சி அரசோடு பரஸ்பர ஒப்பந்தம் செய்து கொண்டது.
3. கும்பார்-அமராவதி மின் திட்டம் ( 8 கோடி )
4. மேட்டூர் கீழ்நிலை திட்டம் (12 கோடி )
5. மோயாறு நீர்மின் திட்டம்
6. கூடலூர் நீர்மின் திட்டம்

அனல்மின் திட்டங்கள்:
1. நெய்வேலி அனல்மின் திட்டம்
2. சமயநல்லூர் அனல்மின் நிலையம்
3. சென்னை அனல்மின் நிலையம் (மூன்றாவது மின் உற்பத்தி பிரிவு)

அணுமின் திட்டங்கள்:
1. கல்பாக்கம் அணுமின் திட்டம்.

குறிப்பாக பெரியாறு மின் திட்டம், குந்தா நீர் மின் திட்டம் முதலிய அதிக மின் உற்பத்தி திறன் கொண்ட திட்டங்களை நிறைவேற்றி முடித்ததனால், காமராஜ் அரசு கிராமப்புறங்களை விரைந்து மின்மயமாக்க முடிந்தது.

மின் உற்பத்தி, விநியோகம், பராமரிப்பு ஆகியவற்றைச் சீராகவும் செம்மையாகவும் செயல்படுத்த காமராஜ் அரசு, மின் வாரியத்தை ஏற்படுத்தியது குறிப்பிடத்தக்க

நடவடிக்கையாகும். மின்சாரத்தை வணிக நோக்கில் லாபகரமாக விநியோகிக்கவும், அன்றாட நடைமுறைகள கவனிக்கவும் அரசின் கட்டுப்பாட்டில் செயல்படும் வகையில் மின் வாரியம் அமைக்கப்பட்டது. இத்திட்டங்களால், சென்னை மாநில அரசு, காமராஜ் ஆட்சி காலத்தில், மின்சாரத்தை விவசாயத்திற்கு பயன்படுத்துவதில் இந்தியாவில் முதல் மாநிலமாக விளங்கியது, நீர் மின் உற்பத்தி திறனில் இரண்டாவது இடத்தை கைப்பற்றியது.

இவையனைத்தையும் தன் முதிர்ந்த அனுபவக் கூட்டாளியான திருவாளர்கள் பக்த்வத்சலம், சுப்பிரமணியம், வெங்கட் ராமன் துணையுடன் நிறைவேற்றினார் காமராஜ்.

மேலும் காமராஜ் பதவி விலகிய 1963-ம் ஆண்டு நிறைவேற்றுப்பட்டு கொண்டிருந்த திட்டங்களில் குறிப்பிடக் கூடியவை - சாண்டிய நல்லூர் நீர்மின் திட்டம், குந்தா திட்டத்தின் மூன்றாவது பிரிவு, பெரியர் நீர்மின் திட்ட இரண்டாவது பிரிவு, பரம்பிக்குளம் நீர்மின் திட்டத்தின் பல பகுதிகள். இவை மட்டுமின்றி ஒகேனக்கல், பாண்டியாறு, புன்னம்புழா, மேல் தாமிரபரணி, சுருளியாறு, பரலியாறு ஆகிய நீர்மின் திட்டங்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு, செயல்படுத்தக் கூடிய நிலையை காமராஜ் அரசு ஏற்படுத்தியது.

இந்த வகையில் தமிழ் நாட்டில் நிறுவப்பட்ட மின் திட்டங்கள் மூலமாக, மின்சக்தி திறன் 1963 ஏப்ரல் 1-ஆம் தேதியன்று 6,30,700 கிலோவாட்டாக உயர்ந்தது. காமராஜ் பொறுப்பேற்ற போது 156 மெகாவாட்டாக இருந்த மின் உற்பத்தி, 571 மெகாவாட்டாக உயர்ந்தது.

## .பெரிய அணைகள், நீர் தேக்க ஏரிகள்

இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் பெரிய அணைகள், நீர் தேக்க ஏரிகள் சார்ந்த பணிகளை செய்தது காமராஜ் அரசு. காமராஜர் ஆட்சியின் ஒன்பது ஆண்டுகளில் பெரிய அணைத் திட்டங்களால் மட்டும் ஏறக்க்குறைய 3,73,436 ஏக்கர் நிலங்கள் புதிதாக பாசன வசதி பெற்றது.

மூன்றாம் ஐந்தாண்டு திட்டத்தில் சிறிய நீர் பாசண திட்டங்களை செம்மைபடுத்த தொடங்கியது.

நீர் பாசனத்திற்க்கு பயன்பட்டு வந்த குளங்களை செம்மை படுத்தியது; தூர் வாரி ஆழப்ப்டுத்தியது; சிதைந்த குளங்களை மீட்டு பயன்பாட்டுக்கு கொண்டு வந்தது. வானம் பார்த்த பூமியில் இந்த சிறிய நீர் பாசன திட்டங்கள் விவசாய உற்பத்தியை பெருக்குவதற்க்கு பெரிதும் உதவின. இத்திட்டத்தின் கீழ், வடிகால் நீர் கசிவுக் குட்டைகள் ஏற்படுத்தப்பட்டன.

விவசாயிகளுக்கு கிணறு வெட்ட 25% மானியத்துடன் நீண்ட கால தவணைக் கடன் வழங்கப்பட்டது. பாசனத்திற்க்கு பயன்படும் ஆயில் என்ஜின்களும், மின் பம்பு செட்டுகளும் தவணை முறைக் கடனில் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டது. காமராஜின் ஆட்சியில் தமிழ் நாட்டின் நிலப்பரப்பளவில் விவசாயம் செய்யப்பட்ட 150 லட்சம் ஏக்கரில், 56 லட்சம் ஏக்கர் நிரந்தர நீர்பாசண வசதியை பெற்றது. இதன் மூலம், தானிய உற்பத்தியில் தன்னிறைவு அடைந்தது.

சென்னை மாநிலத்தின் பல கிராமங்கள், நீர்ப்பாசனத்திற்க்கு பயன்படும் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பை பெற்றன. காமராஜ் ஆட்சி காலத்தில் தொடங்கிய மின் பம்ப் செட் இணைப்புகள், முதல் ஐந்தாண்டு திட்ட முடிவில் 14,626 ஆகவும், இரண்டாவது ஐந்தாண்டு திட்ட முடிவில் 75,193 ஆகவும், மூன்றாவது ஐந்தாண்டு திட்ட முடிவில், 1966-ல் 2,60,000 ஆகவும் அதிகரித்தன. இதனால் கிணற்றுப் பாசன வசதி பெருகி, காமராஜ் பதவி விலகிய 1963-ம் ஆண்டிலேயே, விவசாய உற்பத்தி அதிகரித்துச் சென்னை மாநிலம் "மிகு தானிய உற்பத்தி நிலையை" கண்டது.

## .பரம்பிக்குளம்-ஆழியார் திட்டம்

தமிழகத்தின் மேற்க்கெல்லையில் அமைந்த சிற்றூர் ஆனைமலை. உயர்ந்து செல்லும் மலைப் பகுதியில் சென்றால் கரிமலை, ஒரு கொம்பன்மலை, சுங்கமலை, பரம்பிக்குளம் மலை இவற்றிடையே பொழியும் மழை நீர் பரம்பிக்குளம் ஏரியாக உருவெடுத்து நில அமைப்பு காரணமாக கிழக்கிலிருந்து மேற்காக ஓடி கேரளாவில் புகுந்து கடலில் கலந்து கொண்டிருந்தது.

தமிழகத்து நீர், நிலவமைப்பின் காரணமாக மேற்கே ஓடி வீணாகக் கூடாது. இந்த நீர் முழுமையும் தமிழகத்துக்கே திருப்பிவிடப்பட வேண்டும் என்று அத்துறை நிபுணர்களை திட்டமிடச்சொன்னார் காமராஜ். அன்றைய கேரள அரசோடும் சகோதரத்துவ உணர்வோடு பேச்சுவார்த்தை நடத்தினார், வெற்றி பெற்றார்.

மலைமுகடுகளின் அமைப்பை ஆய்ந்தனர். மலையைக் குடைந்து மேற்கே ஓடும் நீரைக் கிழக்கு முகமாகத் திருப்பிவிடலாம். ஆனால் வரும் நீருக்கு கொள்ளிடம் வேண்டும். அதையும் கண்டுபிடித்தனர். பொள்ளாச்சி நகருக்கு தென்பால் வால்பாறை மலையில் அடிவாரத்தில் இயற்கையன்னை அமைத்திருந்த ஆழியாற்றிலே நீரை சங்கமித்துவிடச் செய்துவிடலாமென முடிவெடுத்தனர்.

பரம்பிக்குளம்-ஆழியார் திட்டம் உருவம் பெற்றது. இதைக் காணும் மேனாட்டு நீர் வழித்துறை அறிஞர்களனைவரும் இது அரும் சாதனை என வியக்கின்றனர்.

அவருக்குப் பின் வந்த முதல்வர்களெல்லாம் செய்யும் சின்னஞ்சிறு திட்டங்களுக்கெல்லாம் மலையளவு விளம்பரம் செய்தார்கள், செய்கிறார்கள்.

ஆனால் மலையயே குடைந்து அனைவரையும் மலைக்க செய்த காமராஜ் சிறுகுன்று மணியளவு கூடத் தன் தோளை உயர்திக்காட்டவில்லை.

## .நீலகிரி மலை மீது

நீலகிரி மலை மீது திட்டமிடப்பட்ட குந்தா மின் திட்டம் நிறைவேற்ற முப்பது கோடி தேவைப்பட்டது. ஆனாலும் நிதியமைச்சர் திரு சி.எஸ் மலைக்கவில்லை. முதல்வர் ராஜாஜியின் அனுமதியோடு மத்திய அரசின் நிதி அமைச்சர் திரு. தேஷ்முக்கின் உதவியை நாடினார்.

கிழக்காசிய நாடுகளின் முன்னேற்றத்திற்க்கு செல்வந்த நாடுகள் மானியங்கள் தந்து உதவ வேண்டுமென்ற கொளும்பு திட்ட அடிப்படையில் கனடா நாட்டின் உதவியை திரு. தேஷ்முக் பெற்றுத்தந்தார். குந்தா திட்டத்திற்க்கு அடிக்கல் நாட்டப்பட்டு வேலைகள் துவங்கிவிட்டன.

ஆனால் நாட்டிலேற்பட்ட அரசியல் நிகழ்ச்சிகளில் சில மாற்றங்களேற்பட்டன. சென்னை மாகாண முதல்வராக இருந்த ராஜாஜி பதவி விலக காமராஜ் முதல்வரானார். 1956ல் நேரு அரசு எடுத்த அவசர முடிவான பம்பாய் நகரத்தை மராட்டியத்துடன் இணைக்காமல் குஜராத் மாநிலத்துக்கு தருவது என்பதில் மனமொப்பாது திரு. தேஷ்முக் அமைச்சர் பொறுப்பிலிருந்து விலகிவிட்டார்.

ஆனால் அவரது முயற்சியின் நன்கொடையால் குந்தா திட்டம் நாளும் வளர்ந்து முற்றுப்பெற்றுவிட்டது.

இப்பொது அதை யார் திறந்து வைப்பது என்ற கேள்வி எழுந்தது. நாட்டின் முதல்வர் காமராஜர். திட்டத்துக்கு உதவியவரோ தேஷ்முக். வேறு யாராக இருந்தாலும் அந்த பெருமை தனக்கே கிடைக்க வேண்டும் என்று விருப்புவர்.

ஆனால் காமராஜரோ தேஷ்முக் அவர்கள் பதவியில் இல்லாவிட்டாலும் அவரே திறக்க வேண்டுமென்பதில் பிடிவாதமாக இருந்தார். சம்மதிக்க மறுத்த் தேஷ்முக்கையும் திரு.சி.எஸ் மூலம் சம்மதிக்க வைத்துப்பின் 1956 ஆம் ஆண்டு தேஷ்முக் திறந்தார்.

## .மதிய உணவுத் திட்டத்திற்கு காமராஜரின் விளக்கம்:

மதிய உணவு அளிப்பதால், பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்தது என்பதை உறுதி செய்தவுடன், ஏழை குழ்ந்தைகளுகள் கல்விக்கு அதுவே வழி செய்திடுமென்பதை காமராஜர் பின்வருமாறு கூறினார்.

" அத்தனைபேரும் படிக்கணும், வயிற்றிலே ஈரமில்லாதவன் எப்படி படிப்பான்? அவனுந்தானே நம் இந்தியாவிற்க்கு சொந்தக்காரன். ஏழைகக் குழ்ந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்திலேயே சோறு போட்டு படிக்க வைக்கணும். இதை தள்ளி போட முடியுமா என்ன? இது மிக முக்கியம் என்பதால் உடனடியாக தொடங்கி விடனும். பணத்திற்க்கு எங்கே போவது? இப்படிக் கேட்பீர்கள். வழி இருக்குது, தேவைப்பட்டால், பகல் உண்விற்கென்று தனியாக வரி போடத் தயங்க மாட்டேன். எப்படியும் எல்லா ஏழைகளும் ப்டிக்கனும். அவர்களுக்குந்தான் தேசம்"

முழுக்க முழுக்க தன்னார்வத் திட்டமாக துவக்கபட்ட மதிய உணவு திட்டத்தை, ஓராண்டு காலம் நடைமுறையில் சீர்தூக்கி பார்த்த பின்னர், 1957-ம் ஆண்டு நவம்பர் மாதம், தமிழக அரசின் நிதி உதவியுடன் செயல்படக்கூடிய, அதே சமயம் சமுதாய பங்கேற்புடன் கூடிய திட்டமாக் மாநிலத்தில உள்ள எல்லா பள்ளிகளிலும் நடைமுறைபடுத்த அறிவிப்பு வெளியிடப்பட்டது. தேவையான செலவினங்களில் 60% அரசும், 40% உள்ளூர் சமுதாயமும் என்ற அளவில் பங்கேற்பு இருந்திடும்.

இலவச மதிய உணவுக் குழுக்களுக்கு அனுமதி அளிப்பதற்க்கு எளிய நடைமுறைகள், அரசின் நிதியுதவி ஆகியவை உள்ளூர் மக்களின் மேற்பார்வையில் நடைமுறைபடுத்தபட்டதால், மிக விரைவாக எல்லாப் பள்ளிகளிலும் செயல்படுத்தக்கூடிய திட்டமாக இத்திட்டம் உருப்பெற்றது.

மதிய உணவு திட்டத்தின் மகத்தான வெற்றியை கீழ்கண்ட பட்டியல் தெளிவாக விளக்கும்:

| Year | Total Schools | School offered Mid-day meal | Total students benefited |
|---|---|---|---|
| 1957-58 | 22,220 | 8,270 | 2.20 lakhs |
| 1958-59 | 23,449 | 11,552 | 7.00 lakhs |
| 1959-60 | 24,580 | 23,136 | 7.75 lakhs |

| | | | | |
|---|---|---|---|---|
| 1960–61 | 25,149 | 24,586 | 8.86 lakhs | |
| 1961–62 | 27,135 | 26,406 | 11.8 lakhs | |
| 1962–63 | 28,005 | 27,256 | 11.65 lakhs | |
| | | | | |

## .காமராஜின் தொலை நோக்கு பார்வையுடன் கூடிய திட்டமிடும் திறனுக்கு ஒரு சான்று

காமராஜ் ஆட்சியில் தமிழ் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட திட்ட முன்னுரிமை வரிசையானது, நாட்டின் பிற மாநிலங்களில் இருந்து மாறுபட்டது.

பிற மாநிலங்கள்:
திட்ட ஒதுக்கீடை பொறுத்தவரை - விவசாயம்/நீர்பாசனம் 41%, சம்தாய நலனிற்கு 27%, மின்சாரத்திற்கு 4% ஒதுக்கப்பட்டது.

தமிழ்நாடு:
திட்ட ஒதுகீடு - மின் வளர்ச்சிக்கு 40%, விவ்சாயம்/நீர்பாசனம் 29%, சமுதாய நலனுக்கு 22%, தொழிற்சாலைக்கு 5%, போக்குவரத்திற்கு 4%.

புதிய முறை விவசாயத்திற்க்கும், தொழில் வளர்ச்சிக்கும் மட்டுமின்றி, சமுதாயதின் பிற தேவைகளுக்கும் மின்சாரம் இன்றியமையாத ஒன்றாக இருந்தது. எனவே, மின்சார திட்ட செலவினங்களுக்கு முன்னுனிமை அளிக்கப்பட்டது.

சமுதாய நலப்பணிகளில் பெரும்பாலான திட்டங்களை மக்கள் பங்கேற்போடு செய்ய திட்டமிட்டதால், பிற மாநிலங்களை விட சமுதாய பணிகளுக்கு குறைந்த அளவிலேயே திட்ட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

மின் திட்ட முன்னுரிமை காரணமாகத்தான், மின் வளர்ச்சியில் இந்தியாவிலேயே முதலிடத்தையும், தொழில் வளர்ச்சியில் இந்தியாவிலேயே இரண்டாவது இடத்தையும் தமிழகம் எட்டுவதற்கு காரணமாக இருந்தது.

இதுவும் படிக்காத முதல்வர் காமராஜின் தொலை நோக்கு பார்வையுடன் கூடிய திட்டமிடும் திறனுக்கு ஒரு சான்று.

## .கூட்டுறவு சங்கங்கள் இல்லாத கிராமமே இல்லை

1958 பஞ்சாயத்து சட்டம் மூலம் அதிகாரம் பரவலாக்கப் பட்டாலும், மக்களிடம் முதலீடு செய்யக்க் கூடிய சக்தி என்பது குறைந்தே இருந்தது. மாநில அரசிடம் போதிய நிதி வசதி இல்லை என்ற சூழ்நிலையில், அவர் அவர்களுக்கு இருக்கும் சக்திக்கு ஏற்ற அளவில் பங்கேற்று, கூட்டுறவு மூலம் உயர்வு காண்பது தமிழகத்திற்கு ஏற்றதாக இருக்குமென்று உணர்ந்திருந்தார் காமராஜ். எனவே காமராஜ் ஆட்சி பொறுப்பை ஏற்ற பின்பு, கூட்டுறவு சங்கங்களின் வளர்ச்சிக்கு அதிக முன்னுரிமை அளிக்கப்பட்டது. கூட்டுறவுச் சங்கங்களில் அரசும் குறிப்பிட்ட அளவு பங்குகளை ஏற்றுக்கொண்டு உறுதுணையாக இருந்தது. மாநிலத்தில் கூட்டுறவு சங்கங்கள் இல்லாத கிராமமே இல்லை என்ற நிலையை காமராஜ் ஆட்சி உருவாக்கியது. மக்களில் 84 விழுக்காட்டினர் கிராமக் கூட்டுறவு சங்கங்க்ளில் பங்கேற்று இருந்தனர்.

11,366 சிக்கன கடன் கூட்டுறவு சங்கங்கள், 322 வேளாண்மை வங்கிகள், 22 கிராமபுற வங்கிகள், 102 தொடக்க நிலை அடமான வங்கிகள், 15 மத்திய கூட்டுறவு வழங்குதல் மற்றும் விற்பனை சங்கங்கள், 288 விவசாய சங்கங்கள், 1396 பால் உற்பத்தியாளர் சங்கங்கள், 275 வீடு கட்டும் சங்கஙகள், ஒரு கூட்டுறவு நகரியம், 1401 தொடக்கநிலை பொருள் சங்கங்கள், 14 கூட்டுறவு அச்சக சாலைகள், 7 சுகாதார கூட்டுறவு சங்கங்கள், 5 கூட்டுறவு லாண்டரிகள், 2 முடிதிருத்தும் சங்கங்கள் போன்ற கூட்டுறவு சங்கஙள் ஏற்படுத்தபட்டு செயல்பட்டு வந்தன. கிராமப்புற வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்ககூடிய வகையில், கிராம கூட்டுறவு வங்கிகளை ஏற்படுத்த திட்டமிட்டு, அதே ஆண்டில் 15 வங்கிளை காமராஜ் அரசு ஏற்படுத்தியது. 1963-ம் ஆண்டு மொத்தம் 19,164 கூட்டுறவு சங்கஙக்ள் தமிழகத்தில் செயல்பட்டு வந்தன. இதன் வழியாக, மனிதனின் எல்லா செயல்பாட்டுக்கும் சிந்தனைக்கும் ஏற்ப கூட்டுறவு சங்கங்கள் த்மிழகத்தில் இருந்தன.

## .பஞ்சாயத்து யூனியன்கள் உருவாக்கப்பட்டன

காமராஜ் ஆட்சியில் "தமிழ் நாடு பஞ்சாயத்து சட்டம்" 1958-ல் கொண்டு வரப்பட்டது. பஞ்சாயத்து ஆட்சி ஆரம்பமாகும் விழாவாக காந்தி ஜெயந்தி கொண்டாடப்பட்டது. 1960-ல் கொண்டாடபட்ட காந்தி ஜெயந்தியின் போது முதன் முதலாக 75 பஞ்சாயத்து யூனியன்கள் ஆரம்பமாயின. அதை அடுத்து தமிழ் புத்தாண்டு தினத்தில் 129 பஞ்சாயது யூனியன்கள் உருவாயின. 1961 காந்தி ஜெயந்தியன்று 169 பஞ்சாயத்து யூனியன்கள் உருவாக்கப்பட்டன. தமிழ் நாடு

முழுவதும் காம்ராஜ் ஆட்சியில் 373 பஞ்சாயத்து யூனியன்களும், 12,000 பஞ்சாய்த்துகளும் செயல்பட ஆரம்பித்தன.
இவ்வாறு புதிய பஞ்சாயத்து முறை ஆட்சியை படிபடியாக மூன்று கட்டங்களாக, குறுகிய காலத்தி உருவாக்கி, அனைத்து அடிப்படை வசதிகளுடன் நிறைவேற்றிய சாதனை காமராஜ் ஆட்சியில்தான் நடந்தது.

புதிய பஞ்சாயத்து ஆட்சி, தமிழ் நாட்டில் ந்ன்கு வேரூன்றி செயல்பட்டது. கிராம நல வேளைகளை பஞ்சாயத்துகளே ஏற்று நடத்தும் சந்தர்பம் ஏற்பட்டது. விவசாயம், சாலை வசதி, கைத்தொழில், மாதர் நலம், சுகாதாரம், கால்நடை ம்ருத்துவ மனைகள் கட்டுவது, ஆரம்ப ப்ள்ளிகள் போன்ற பொறுப்புகளை பஞ்சாய்த்துகளும், பஞ்சாயத்து யூனியன்களுமே மேற்கொண்டு சிறபபாக செயல்பட்டன. உள்ளூர் தேவைகளுக்கு ஏற்ப திட்டங்கள் முடிவு செய்து செய்ல்படுத்திகொள்ள புதிய அதிகார பரவல் முறை 1958-ம் ஆண்டு ப்ஞ்சாயத்து சட்டம் மூலமாக நடைமுறைப் படுத்தபட்டது.

## .தமிழகத்தை தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக்க

இந்தியாவிலேயே தமிழகத்தை தொழில் வளர்ச்சியில் முதன்மை மாநிலமாக்க வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருந்த காமராஜ் தொழில் வளர்ச்சி விரைந்து நாடைபெற எளிய தெளிவான நடைமுறைகளை மேற்கொண்டதற்க்கு "மணலி சுத்திகரிப்பு" ஆலையே ஒரு நல்ல எடுத்துக்காட்டு.
தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப் பெரிய திட்டமாக மணலி சுத்திகரிப்பு ஆலை திட்டமிடப்பட்டிருந்தது. ஆலைக்கென் மிகப்பெரிய நிலம் கையப்படுத்துதல் மேற்கொள்ள வேண்டிய நிலை இருந்தது. என்வே நிலம் கையகபடுத்துவதில் ஏற்படும் பொதுவான கால விரயத்தை தவிர்த்திட காமராஜ் விரும்பினார். ஆலைக்கு கையப்படுத்த இருந்த நிலப்பரப்பில் 600 ஏக்கர் நிலம் மணலி ராமகிருஷ்ண முதலியாருக்கு உரிமையாக் இருந்ததது. எனவே ராமகிருஷ்ண முதலியாரை நேரடியாக வரவழைத்து திட்டத்தினுடைய நன்மையை பற்றியும் அவர்கள் அளிக்க கூடிய நிலப்பகுதியினுடைய தேவை பற்றியும் முதல்வர் காமராஜ் எடுத்துரைத்தார். ராமகிருஷ்ண முதலியாருடைய குடும்பத்தோடு இணைந்துவிட்ட மணலி ஊரில் இருக்ககூடிய நிலங்களையும், சொத்துக்களையும் இழப்பதில் தங்களுக்கு இருக்ககூடிய மனச்ச்ங்கடங்களையெல்லாம் முதல்வர் காமராஜிடம் ராமகிருஷ்ண முதலியார் எடுத்துரைத்தார். மணலி நிலத்தை தவிர வேறு எந்த நிலத்தை தருவதற்க்கும் தாங்கள் தயாராக இருப்பதாகவும் தங்களுடைய மனதோடு ஒன்றிவிட்ட மணலி நிலத்தை மட்டும் தருவதற்க்கு தங்களுக்கு இருக்கும் தயக்கத்தை தயங்கி, தயங்கி காமராஜிடம் எடுத்துரைத்தார் ராமகிருஷ்ண முதலியார். ஆனால் காமராஜரோ, இந்த இடம்தான் சரியானா இடம், இந்த இடம் இல்லையென்றால் சுத்திகரிப்பு ஆலை தமிழ்நாட்டுக்கு வராது, வேறு மாநிலத்திற்க்கு சென்றுவிடும். இத்தகைய நிலையில் செண்டிமென்ட் ஆக பார்பது சரியாக வராது. தமிழ்நாட்டிற்கு பெரிய ஆலை வரும் என்பது மட்டு மனதில் தெளிவாக வையுங்கள் என்று தெளிவாக கூறினாலும் அவருக்கே உரிய பாணியில்

பரவாயில்லை பார்க்கலாம் என்று கூறினார். உடனே சுத்திகரிப்பு ஆலை அமைப்பதற்கான் தன்னுடைய நிலங்களை தருவதற்க்கு ராமகிருஷ்ண முதலியார் தன்னுடைய சம்மதத்தை முதலமைச்சர் காமராஜிடம் தெரிவித்தார்.

## .பாகல்மேடு மாநாடு...

மக்களாட்சி வரலாற்றில் மேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சியாக 1957-ம் ஆண்டு மே மாதம் நடைபெற்ற பாகல்மேடு மாநாட்டை கூறலாம். சமுதாய வளர்ச்சித்துறையை தன்னிடம் எடுத்துக்கொண்ட பின்னர், காமராஜிடம் எழுந்த எண்ணம்தான் பாகல்மேடு மாநாடு.

மக்களுக்கும் அரசுக்கும் எல்லா மட்டத்திலும் தொடர்பு இருக்க வேண்டுமென விருப்பிய காமராஜ், மக்களின் பங்களிப்பு இல்லாமல் சமுதாய மேம்பாடு இருந்திட முடியாது எனக் கருதினார். அது போல, அரசு அதிகாரிகள் மக்களோடு ஒன்றினைந்து, எல்லா வகையிலும் மக்களுக்கு உதவி புரிய இருப்பதைக் காட்டிக்கொள்ளவில்லை என்றால், மக்களின் பங்களிப்பை முழுமையாக எதிர்பார்க்க முடியாது என்பதையும் காம்ராஜ் உணர்ந்திருந்தார். சிகப்பு நாடா முறைகள் ஒழிக்கப்பட வேண்டும் அதிலும் குறிப்பாக சமுதாய மேம்பாடு திட்ட செயல்பாடுகளில் விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட காமராஜ் விரும்பினார்.

எனவே, ஆட்சியாளர்களும் மக்களும் ஒரே இடத்தில் கூடி, கலந்துரையாடி, பிரச்சனைகளுக்கு அதே இடத்தில் தீர்வு காணப்பட்டால்தான் விருப்புகிற, எதிர்பார்க்கிற வகையில் சமுதாய மேம்பாட்டுப் பணிகள் நடந்தேற வாய்ப்புண்டு என காமராஜ் கருதினார். அந்த வகையில் ஏற்பாடு செய்யப்பட்டதுதான் செங்கள்பட்டு மாவட்டம், ஊத்துக்கோட்டை பகுதி, பாகல்மேடு பிர்கா மாநாடு. பிர்கா என்பது கிராம பஞ்ச்சாயத்திற்கும் மாவாட்ட பஞ்சாயத்திற்கும் இடைபட்ட ஐந்தாறு கிராமங்களை உள்ளடக்கிய 1958ம் ஆண்டு பஞ்சாயத்து சட்டத்திற்கு முன்பு செயல்ப்ட்டு வந்தது.

பாகல்மேடு பிர்கா கிராமங்களை சேர்ந்த பொது மக்கள் இந்த மாநாட்டிற்க்கு அழைக்கப்பட்டிருந்தனர். தமிழக் முதல்வர் காமராஜ் கலந்து கொள்ளும் இந்த மாநாட்டில், பொது மக்களால் முன் வைக்கபடும் சமுதாய மேம்பாட்டுப் பிரச்சனைகளுக்கு உடனடியாக அங்கேயே தீர்வு காணப்படுமெனவும் அறிவிக்கபட்டிருந்தது.

முதல்வர் காமராஜ், தலைமைச் செயளர், சமுதாய மேம்பாட்டுத்துறை இயக்குனர், மாவட்ட ஆட்சி தலைவர், கீழ்நிலை அதிகாரிகள் உடன் பாகல்மேடு மற்றும் பிர்கா கிராமங்களை சேர்ந்த ஆயிரக்கணக்கான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

மாநாட்டின் தொடக்கமாக, அரசின் பல்வேறு திட்டங்களை விளக்கும் கண்காட்சியைத் தமிழக முதல்வர் காமராஜ் திறந்து வைத்தார்.

மாநாட்டின் அடிப்படையை முதல்வர் காமராஜ் முதலில் விளக்கினார். நேரிடையாக மக்கள் பிரச்சனைகளை அறிந்து, இயன்றவரை உடனடி தீர்வு காண தான் வந்திருப்பதாகவும் கூறிய காமராஜ், அரசு மீதான மக்கள் நம்பிக்கையை எற்படுத்தவும் தன்னுடைய அரசு மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் அரசு என்பதை மக்கள் உணர்ந்திட வேண்டுமெனவும் கூறினார். சுற்றுபுற கிராமத்தில் உள்ளவர்கள் ஒன்றுகூடி சமுதாய தேவைகளைக் குறித்து கலந்துரையாடுவதன் மூலமாக, சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களை எல்ல கிராமங்களுக்கும் பகிர்ந்தளிக்க முடியுமென்றும் காமராஜ் கூறினார்.

மேலும், குழுமியிருந்த அரசு அதிகாரிகளைப் பார்த்து, மக்களுடைய நம்பிக்கையைப் பெறுவதுதான் அவர்களுடைய முதன்மையான பணியாக இருந்திட வேண்டும், அப்படி நம்பிக்கையைப் பெறுவதில் வெற்றி அடைவதன் மூலமே மிகப்பெரிய செயல்களை எளிமையாக் அதிகாரிகளால் நிறைவேற்ற இயலும் என்பதையும் காமராஜ் எடுத்துரைத்தார்.

அதன்பின்னர், பிரச்சனகளைப் பற்றி பேச பொதுமக்கள் அழைக்கப்பட்டனர். தங்கள் கிராமத்தில் ஒருவர் கூட படித்தவர் இல்லையென்றும், தங்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் வேண்டுமென்றும் ஒரு கிராமவாசி கூறி, தங்கள் கிராமத்தை சேர்ந்த 36 பேர்களுடைய பெருவிரல் ரேகை இட்ட மனுவை காமராஜரிடம் அளித்தார். முழுமையாக அரசு செலவிலேயே தங்கள் கிராமத்துக்கு சாலை வசதி அமைத்து தர வேண்டுமென்று இன்னொறு கிராமவாசி கூறினார். நெடுந்தொலைவிலுள்ள மருத்துவமனைக்கு செல்லும் வழியில், வயல் வெளியில் தங்கள் கிராமத்தை சார்ந்த பெண் குழந்தை பெற்றதாகவும் அதனால் தங்கள் கிராமத்திற்க்கு மருத்துவ மனை வேணுமென்று மற்றொரு கிராமவாசி கூறினார். பக்கத்து ஊர் பள்ளிக்கு செல்லும் வழியில் ஆற்றைக் கடக்க முயன்ற சிறுவன் வெள்ளத்தில் மூழ்கிப் போய்விட்டான் எனக்கூறி, தங்கள் கிராமத்திலேயே பள்ளிக்கூடம் வேண்டுமென்று ஒரு கிராமவாசி கூறினார். கிராம தொழிகளில் தங்களுக்கு பயிற்ச்சி அளிக்கப்பட வேண்டுமென பெண்கள் கோரிக்கை விடுத்தனர். தங்களுடைய குடியிருப்புகளில் குடிநீர் கிணறுகளும் பள்ளிகளும் வேண்டுமென்வும் தங்களுக்கு வீட்டு மனைகள் வழங்கப்பட வேண்டுமென்று தாழ்த்தப்பட்டோர் சார்பாக பேசியவர் கோரிக்கை வைத்தார்.

இப்படி இரண்டு பெண்கள் உள்பட ஐம்பது கிராமவாசிகள் தங்கள் குறைகளை முதல்வர் காமரஜரிடம் நேரிடையாக எடுத்துரைத்தனர். அதன் முடிவில், தலைமைச் செயளர், மாவட்ட ஆட்சித்தலைவர் பிற அதிகாரிகளுடன் முதல்வர் காமராஜ் ஆலோசனை மேற்கொண்டார். ஏழு கிராம சாலைகள் அமைக்கவும், ஐந்து கிண்றுகள் தோண்டவும், மூன்று பள்ளிகள் திறக்கவும் அந்த இடத்திலேயே முடிவு

செய்து அறிவிக்கப்பட்டது. மேலும் நிலுவையில் உள்ள பல திட்டங்கள் முழுமைப் பெற காலக்கெடு வரையறை செய்யப்பட்டது.

மக்களின் மனதில் நம்பிக்கை தீபத்தை ஏற்றி வைத்த இந்த பாகல்மேடு மாநாடு முறையில் மக்கள் குறைகளுக்கு தீர்வு காணுப் முயற்சி தழிழ் நாட்டின் பல பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டது. பாகல் மேடு பாணி மக்களிடையே பலத்த வரவேற்பை கண்ட திராவிட முன்னேற்ற கழக தலைவர் அண்ணாத்துரை இதற்காக காமராஜ் அரசை பாராட்டியதோடு மட்டுமின்றி, தன்னுடைய தொகுதியிலும் பாகல்மேடு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று சட்ட மன்றத்தில் வழியுறுத்தினார்.

எந்த ஜனநாயக நாட்டிலும் மேற்கொள்ளப்படாத புதிய முயற்சியாக் பாகல்மேடு முயற்சியை காமராஜ் அறிமுகப் படுத்தினார். இப்படி, அரசுக்கும் மக்க்ளுக்கும் இடைவெளி இல்லாத நிலையை காமராஜ் மேற்கொண்டதால்தான், அவருடைய அரசு மக்கள் அரசாக விளங்கியது என்பது உறுதி.

------------------------------

## .நேரு ராஜபாளைய்த்திற்கு வந்திருந்தார்

முன்னால் முதல்வர் குமாரசாமிராசாவின் திருவுருவப்படத்தை திறப்பதற்காக பாரத பிரதமர் நேரு ராஜபாளைய்த்திற்கு வந்திருந்தார். முதவர் காமராஜரும் உடன் வந்திருந்தார். நேருவுக்கு மிகப்பெரிய அளவில் வரவேற்ப்பு தரபட்டது. யார் யார் நேருவுக்கு மாலை அணிவிப்பது என பட்டியளிட்டு மாவாட்ட ஆட்சித்தலைவரால் அதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது.
விடுதலை போராட்ட வீரர் ஏ.கே.பெருமாள்ராஜா என்ற பேச்சி ராஜா அவர்கள் வழியாகவும் பிரதமர் நேரு போவதாக பயணத்தில் இருந்தது. எனவே, தன் தெருவிற்க்கு வருகின்ற நேருவுக்கு மாலை அணிவித்து வரவேற்பு கொடுக்க தியாகி ஏ.கே.பெருமாள் ராஜா விரும்பினார். ஆனால் அதற்கான முன் அனுமதியை அவர் பெற்றிருக்கவில்லை. எனவே, தியாகியாக இருந்தாலும் , பிரதம்ர் நேருவுக்கு மாலை அணிவிக்க முடியுமா? என்ற சந்தேகம் இருந்து கொண்டிருந்தது. அவருடன் இருந்தவர்களும், "அனுமதி இல்லை, எனவே மாலை அணிவித்து மாட்டிக்கொள்ள வேண்டாம்" என அவரை எச்சரிக்கை செய்து கொண்டிருந்தனர். விடுதலைக்காக பாடுபட்ட அந்த தியாகி கட்டாயம் மாலை அணிவித்தே ஆகவேண்டுமென உறுதி கொண்டிருந்தார். அதற்க்கான் எச்சரிக்கைகளையும் அவர் பொருட்படுத்தவில்லை.
பாரத பிரதமர் நேரு, முதல்வர் காமராசர் இருவரும் ஊர்வலமாக் வந்து கொண்டிருந்தனர். தொலைவிலிருந்தே தியாகி பெருமாள்ராஜா தனது வீட்டில் மாலையுடன் காத்திருப்பதை காமராஜ் பார்த்துவிட்டார். உடனடியாக தாங்கள் வந்த வாகனத்தை தியாகி பெருமாள் ராஜா வீட்டருகே கொண்டு செல்ல கட்டளையிட்டார். பெருமாள்ராஜாவை கூப்பிட்டு பிரதமர் நேருவுக்கு அறிமுகம்

செய்துவைத்தார். பெருமாள் ராஜாவும் மிகுந்த மகிழ்ச்சியோடு நேருவிற்க்கு மாலை அணிவித்தார். இதன் வழியாக நாட்டிற்க்கு பாடுபட்ட ஒரு தியாகிக்கு நேர்ந்திருக்க கூடிய கசப்பான உணர்வுகளை தவிர்து விட்டார்.
இதற்க்கு அடிப்படை காரணம், மாட மாளிகையில் இருந்து ஆட்சி செய்யாமல் மக்களோடு மக்களாக இருந்த காரணத்தால் அவர்களுடைய உண்ர்வுகளை புரிந்துகொண்டு செயல்படக்கூடிய தன்மையை காமராஜ் பெற்றிருந்தார்

## அய்யா இதற்கு மேல் கார் செல்லாது

1955ம் வருடம் டிசம்பர் மாதம் காமராஜ் முதல்வராய் இருந்த காலம் தென் மாவட்டங்களில் திடீரென்று புயலும் பேய் மழையும் தாக்கின. வானம் பார்த்த சீமை எனப்படும் ராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கால் பலர் வீடிழந்தனர். தங்கள் உடமைகளை எல்லாம் இழந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் தேவையில் துடித்தனர். அப்போது முதல்வர் காமராஜ் பாதிக்கபட்ட பகுதிகளை பார்வையிடவும், பாதிக்கபட்டவர்களுக்கு ஆறுதல் கூறவும் வந்தார். ஒரு கிராமத்தை முற்றிலும் நீர் சூழ்ந்து கொண்டது, வெளி தொடர்பே அற்றுப்போனது. உணவுக்கு கூட வழியில்லாமல் மக்கள் பட்டினியால் தவித்தனர். அதைக் கேள்விபட்ட காமராஜ், அவர்களுக்கு நிவாரணம் வழங்க அதிகாரிகளோடு புறப்பட்டார். ஆனால் ஊசாலிடிக் கொண்டிருந்த பாலமும் உடைந்து போனது. அதிகாரிகள் காமரஜிடம் "அய்யா இதற்கு மேல் கார் செல்லாது, அந்த மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பணிகளை நாங்கள் சில பேர் கவனித்துக் கொள்கிறோம். நீங்கள் வேறு இடத்துக்கு செல்லுங்கள்" என்றார்கள். ஆனால் காமராஜ் "அதிகாரிகளே எல்லாத்தையும் கவனிக்கச் சொல்லி கோட்டையிலிருந்தே நான் உத்தரவு போடலாமே. மக்கள் கஷ்டத்தை நான் நேரடியாப் பாக்கணும். தேவையானா நிவாரணத்துக்கு உடனே ஏற்பாடு செய்யனும். அவங்களுக்கு ஆறுதல் சொல்லணும். அதனால்தான் நானே வந்தேன்" என்று சொலியபடியே வேட்டியை மடித்துக் கட்டி கொண்டு தலையில் முண்டாசு கட்டிக் கொண்டு தண்ணீரில் இறங்கிவிட்டார். சாரக் கயிரை பிடித்துக் கொண்டு மார்பளவு நீரில் கால்வாயைக் கடந்து மறு கரைக்கு சென்றார். முதல்வரே தணணீரில் இறங்கி விட்டதால், அதிகாரிகளும் வேறு வழியின்றி அவரைப் பின் தொடர வேண்டியதாயிற்று. மறுநாளும் காமராஜ் திட்டமிட்டபடியே செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

பெருந்தலைவரின் இந்த சேவையைப் பாராட்டி பேரறிஞர் அண்ணா திராவிட நாடு இதழில் ஒரு கடிதம் எழுதியிருந்தார்.
"சேரிகள் பாட்டாளிகளின் குடிசைக்கள், உழவர் உழன்று கிடக்கும் குச்சுகள். இவை யாவும் நாசமாகிவிட்டன. வீடில்லை, வயலில்லை, உள்ளத்தில் திகைப்பின்றி வேறில்லை. ஆனால் தம்பி, நமது முதலமைச்சர் காமராசர் அந்த

மக்கள் மத்தியில் இருக்கிறார். பெருநாசதுக்கு ஆளான மக்களின் கண்ணீரைத் துடைத்திடும் காரியத்தில் தீவிரமாக் ஈடுபட்டிருக்கிறார் என்பதை என்னும் போது இதோ எமக்கு ஆறுதல் அளிக்க எமது முதலமைச்சர் வந்துள்ளார். எமது கண்ணீரை காணுகிறார். தமது கண்ணீரை சிந்துகிறார். ஆறுதலை அள்ளித் தருகிறார். கோட்டையிலே அமர்ந்து கொண்டு உத்தரவுகள் போடும் முதலமைச்சர் அல்ல இவர். மக்களை நேரில் சந்திக்கும் தலைவர் என்று மக்கள் வாழ்த்துகின்றனர். தம்பி! சொல்லித்தானே ஆக வேண்டும் முதலமைச்சர் காமராசரின் பொறுப்புணர்ச்சி கண்டு நாம் பெருமைப்படுகிறோம்."

## .மக்களுக்காகத்தான் சட்டமே தவிர, சட்டத்திற்காக மக்களல்ல

ஒரு கிராமப் பஞ்சாயத்தில் உள்ள பெரிய குளத்தில், மீன்பிடிக்கும் உரிமையை யாருக்கு கொடுப்பது என்று முடிவு செய்வதற்க்கு உரிய கோப்பு ஒன்னு, முதல்வர் காமராஜ் பார்வைக்கு வந்தது. சம்பந்தப்பட்ட துறை சார்ந்த செயலரிடம் இது குறித்து பேசிய காமராஜ், "இந்த குளத்தில் மீன் பிடிக்கும் உரிமையை தனிபட்ட நபருக்கு கொடுத்தால், அதில் வரக்கூடிய லாபம் முழுவதும் அவருக்கே போய்ச் சேரும். அதேபோல் 10 பேருக்குச் சேர்த்துக் கொடுத்தால், லாபம் முழுவதும் அந்த 10 பேருக்குத்தான் போகும். ஒரு கூட்டுறவு சங்கத்துக்கு அந்த உரிமையை வழங்கினால், அந்த லாபம் அனைத்தும் அந்த கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு மட்டுமே போய் சேரும். இப்படியெல்லாம் செய்யாமல், அந்த கிராம பஞ்சாயத்து ஏற்று நடத்தினால், அதில் வரக்கூடிய லாபம் முழுவதும் அந்தக் கிராமத்திலுள்ள அனைத்து மக்களுக்கும் போய்ச் சேரும். இதில் எது நல்லது" என்று கேட்டார். "தாங்கள் சொன்னபடி, கிராம பஞ்சாயத்து ஏற்று நடத்துவதுதான் நல்லது. ஆனால், அதற்க்கு சட்டத்தில் இடமில்லையே" என்று அந்த அதிகாரி கூறினார். உடனே முதல்வருக்கு கோபம் வந்து விட்டது. "எது நல்லது என்று நீங்களே கூறினீர்கள். அதை நிறைவேற்றச் சட்டவிதிகள் இடம் தரவில்லையெனில், அதை உடனே மாற்றி உத்தரவு போடுங்கள். மக்களுக்காகத்தான் சட்டமே தவிர, சட்டத்திற்காக மக்களல்ல" என்று உறுதியுடன் தெளிவாக கூறினார்.

## ."உனக்கு எவ்வளவு நாளா என்னைத் தெரியும்?"

அது ரேசன் காலம், ஒரு சிற்றூரில் பொதுக்கூட்டம் ஏற்பாடாகி இருந்தது. அந்த ஊரில் உள்ள முக்கியப் புள்ளி ஒருவர் வீட்டுக்கு சென்றுவிட்டு, அவரது உபசரிப்பை காமராஜ் ஏற்றார். அதன் பிறகு, எட்டரை மணிக்கு கூட்டம் தொடங்கியது. கூட்டத்தில் பெட்ரோமாக்ஸ் விளக்குதான் எரிந்தது; மைக் கூட கிடையாது. நல்ல இருட்டு, காமராஜ் பேச தொடங்கியதும், ஒரு மூலையில் இருந்து ஒரு குரல் எழுந்தது. பெரிய புள்ளியின் வீட்டு உபசரிப்பை காமராஜ் ஏற்றதற்கு கண்டனக் குரல் அது. "கருப்பு சந்தை ஒழிக" என்று அந்த குரல் ஒழித்தது. காமராஜ் பேச்சை நிறுத்தினார். கூட்டத்தின் மூலையில் இருந்த உருவத்தைப் பார்த்து

"உனக்கு எவ்வளவு நாளா என்னைத் தெரியும்?" என்று கேட்டார். "முப்பது வருசமா" என்று பதில் வந்தது. " அப்புறம் என்னாண்ணேன்? உட்காரு" என்றார். காமராஜ் சொன்னபடி அந்த உருவமும் உட்கார்ந்தது. பிறகு காமராஜ் பேசினார். கூட்டம் முடிந்தது. கூட்டத்தில் குரலெழுப்பிய நபருக்கு காமராஜ் ஒரு பதிலும் சொல்லவில்லை.

சென்னை நோக்கி காரில் திரும்பிக் கொண்டிருந்த போது, காமராஜை ஒருவர் கேட்டார் " நீங்கள் வந்து...". "கூட்டத்தில் சத்தம் போட்ட ஆளுக்கு பதில் சொல்லலேயே என்று கேட்கிறீங்களா? ஆமாம், அந்த ஆள் சத்தம் போட்டது நியாயம்தானே!" என்ற காமராஜ் விவ்ரமாக் சொன்னார்.

"அந்த ஆள் ஒரு தியாகி. சுதந்திரப் போராட்டத்தில் சிறைக்கு சென்றவர். எனக்கு 30 வருஷமாக தெரியும். நம்மை இந்த ஊரில் வரவேற்ற பெரிய புள்ளி, நெல்லை ஒழுங்கா ரேஷனுக்கு கொடுப்பதில்லை. அந்த ஆளுக்கும் இந்த தியாகிக்கும் ஆகாது. இந்த தியாகியை விலைக்கு வாங்க அந்தப் புள்ளியால் முடியவில்லை; முடியாது! இந்த தியாகி ஏதோ கடை வைத்துக்கொண்டு இருக்கிறார்.'அப்புறம் ஏன் அந்தப் பெரிய புள்ளியின் வரவேற்பை நாம ஏற்றுக்கொள்ளணும்னு' கேட்கிறீங்களா? நாம இங்கே வர்றோம்ணு இந்தத் தியாகிக்கு தெரிஞ்சா, கடன் வாங்கியாவது செலவு செய்வார். அப்போ அந்த பெரிய புள்ளியிகிட்ட போய்த்தான் கடன் வாங்குவார். இந்த தியாகி கடன்பட்டுத் தவிக்கிறதை நான் விரும்பலே! அதே நேரத்தில இவரோட தொண்டுக்கு நான் என்னைக்கும் மதிப்பு தர்றவன்! அது தியாகிக்கே தெரியும். இன்னும் மூனு நாள்ள, அங்கே நம்மை வந்து பார்பார், பாருங்க" என்று சொல்லி பேச்சை முடித்தார்.

காமராஜ் சொன்னபடியே மூன்றாவது நாள், காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்துக்கு அந்தா தியாகி வந்துவிட்டார். காமராஜ், தியாகிகளை மதிக்கும் பண்பு நலம் உள்ளவர்;

## .. வயிற்றிலே ஈரமில்லாதவன் எப்படிப் படிப்பான்?

மதிய உணவு அளிப்பதால், பள்ளிகளில் மாணவர்களின் வருகை அதிகரித்தது என்பதை உறுதி செய்தவுடன், எழைக் குழந்தைகள் கல்விக்கு அதுவே வழி செய்திடும் என்பதை கமராஜ் பின்வருமாறு கூறினார்.
" அத்தனைபேரும் படிக்கணும். வயிற்றிலே ஈரமில்லாதவன் எப்படிப் படிப்பான்? அவனுந்தானே நம் இந்தியாவுக்குச் சொந்தக்காரன். ஏழைக்குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடத்திலேயே சோறு போட்டு படிக்க வைக்கணும். இதைத் தள்ளிப்போட முடியுமா என்ன? இது மிக முக்கியம் என்பதால் உடனடியாகத் தொடங்கி விடணும். பணத்திற்க்கு எங்கே போவது? இப்படிக் கேட்பீர்கள். வழி இருக்குது,

தேவைப்பட்டால், பகல் உணவிற்க்கென்று, தனியாக வரி போடத் தயங்க மாட்டேன். எப்படியும் எல்லா ஏழைகளும் படிக்கனும். அவர்களுக்கும்தான் தேசம்."

## .காமரஜின் ஒரு மேடைப் பேச்சு - நவசக்தி 13.7.68

" ஏழைகள் மானம் மரியாதையுடன் வாழ்வதைப் பணத் திமிங்கலங்கள் விரும்பவில்லை. எழைகள் என்றும் அடிமைகளாகவேதான் இருக்க வேண்டும் என்று அவர்கள் விரும்புக்றவர்கள். ஏழை மக்கள் இந்தப் பணக்காரர்களை பற்றிக் கவலைப் படக்கூடாது.

நம்மைச் சாதிட்ச் சண்டையில் திருப்பி விடுகிறார்கள். என் ஜாதிக் காரர்களுக்கு மந்திரி பதவி வேண்டும் என்க்றார்கள். யார் மந்திரியாக இருப்பது பிரச்சனையல்ல. மக்களுக்கு யார் நன்மைகள் செய்கிறார்கள் என்பதுதான் பிரச்சனை.

நான் கூடப் பது ஆண்டுகளாகப் பெரிய மந்திரியாக இருந்தேன். நான் மந்திரியாக இருந்தேன் என்பதற்காக நாடார்களெல்லாம் "நாடார் மந்திரியாக இருக்கிறார்; நாங்கள் எல்லாம் உழைக்க மாட்டோம், உட்கார்ந்து கொண்டே சாப்பிடுவோம்' என்று சொன்னால் முடியுமா என்ன?

நான் மந்திரியாக் இருந்தேன், எனக்கு அரசாங்கத்தில் வீடும் காரும் கொடுத்தார்கள். இதனால் மற்ற நாடார்களுக்கு என்ன லாபம்? ஆகையால் ஜாதியை சொல்லி ஏமாற்றுகிறவர்களிடம் நீங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், பலியாகி விடக் கூடாது.

நான் தேர்தலில் தோல்வி அடைந்தவன், ஏன் மீண்டும் மக்களை சந்திக்கிறேன்? யார் தயவும் எனக்குத் தேவையில்லை. நான் மக்கள் வாழ வேண்டும் என்று விரும்புகிறேன். இதனால்தான் பணக்காரர்கள் என்னைத் தோற்கடித்தார்கள்.

நான் இனித் தூங்கப் போவதில்லை. மக்கள் இப்போது விழித்துக் கொண்டார்கள். நான் எத்தனை தடவை தேர்தலில் தோல்வி அடைந்தாலும் மக்களை சந்திக்க தவற மாட்டேன். வெற்றி, தோல்வியைக் கண்டு கவலைப்படாதவன்."

- நவசக்தி 13.7.68

## .நெய்வேலி நிலக்கரி சுரங்கம்

நெய்வேலி நிலக்கரி சுரங்கம் அமைப்பதற்க்குத் தேவையான கனரக எந்திரங்கள் சோவியத் நாட்டிலிருந்து வரவிருந்தன. அந்த எந்திரங்களை சென்னை துறைமுகத்திலிருந்து நெய்வேலிக்கு எப்படி எடுத்து செல்வது என்பதில் பெரிய சிக்கல் ஏற்பட்டது. சென்னையில் இருந்து சாலை வழியாக எப்படி எடுத்து செல்ல

முடியும்? மிகவும் பளுவான் எந்திரங்கள் அவை. வழியில் உள்ள பாலங்கள் அவற்றை எடுத்துச் செல்ல ஏற்றவைதானா? என்பதுதான் சிக்கல். இந்தச் சிக்கல் ஓராண்டு காலத்துக்குமேல் தீர்க்க முடியாததாகவே இருந்து வந்தது. அப்போது மத்திய அரசில் வர்த்தக அமைச்சராக இருந்த டி.டி.கிருஷ்னமாசசாரியும், சென்னை மாநிலத்தில் தொழில் அமைச்சராக ஆர். வெங்கட்ராமனும் இருந்தனர்.

இந்த சிக்கலை ஒரு முடிவுக்கு கொண்டுவர தொழில் அமைச்சர் ஆர்.வெங்கட்ராமன் கூட்டிய ஆலோசனைக் கூட்டத்தில் கலந்து கொண்ட பொதுப்பணித் துறையினரும் பிறரும், சென்னைத் துறைமுகத்திலிருந்து எந்திரங்களை நெய்வேலிக்கு கொண்டு செல்வதில் ஏற்படக்கூடிய பிரச்சனைகள் குறித்துப் பெரும் ஐயப்பாடுகளை எழுப்பிய வண்ணம் இருந்தனர். இடையில், கடலூர் துறைமுகத்துக்கு அந்த இயந்திரங்களை கொண்டுசென்று, அங்கிருந்து நெய்வேலிக்கு எடுத்து செல்ல முடியுமா என்றும் ஆலோசித்தனர். கடலூர் துறைமுகத்தில் கரையிலிருந்து நெடுந்தொலைவில் கப்பலை நிறுத்திவிட்டு, எந்திரங்களை இறக்கி வர இயலாது என்று முடிவுசெய்யப்பட்டு அந்த முயற்சி கைவிடப்பட்டது.

மத்திய வர்தக துறை அமைச்சரோ "இதை விரைவில் முடிவு செய்யுங்கள்" என்று அடிக்கடி வலியுறுத்திக் கொண்டிருந்தார். இது முதலமைச்சர் காமராஜ் கவனத்திற்க்கு கொண்டு செல்லப்பட்டது. காமராஜ் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்ய சொன்னார். டி.டி.கே-யும் வந்து கலந்து பேசுவதாக் தெரிவித்தார். டி.டி.கே வருவதற்க்கு முன்பாகவே இக்கூட்டத்திற்க்கு ஏற்பாடு செய்யப்பட்டது. " முடிந்தால் நாம் செய்வோம், முடியாவிட்டால், வேறு எந்த மாநிலதுக்கு பயன்படுமோ, அந்த மாநிலத்திற்க்கு எந்திரங்களை அனுப்ப சொல்லி விடுவோம்" என்ற முடிவுடந்தான் முதலமைச்சர் காமராஜ் கூட்டத்திற்க்கு வந்தார். கூட்டம் தொடங்கியது. " ஏன் சோவியத் நாட்டு எந்திரங்களை நமது சாலை வழியாக எடுத்து செல்ல முடியாது என்பதை எஞ்சினியர்கள் காமரஜிடம் விளக்க முயன்றார்கள்.

நிதானமாக கேட்டு முடித்த காமராஜ், "அவைகளை எப்படி எடுத்து செல்ல முடியும் என்பதற்கான யோசனைகளை சொல்லுங்க ... நம்ம எஞ்சினியர்களுக்கு இல்லாத திறமை வேறு யாரிடம், எங்கே இருக்கு? நாமதான், நம்மைவிட மற்றவர்களைக் கெட்டிக்காரர்கள் என்று நினைச்சு ஏமாந்துகிட்டுருக்கோம். நம்ம எஞ்சினியர்கள் நினைத்தா எதையும் சாதிப்பாங்க... இப்ப என்ன செஞ்சா, அந்த எந்திரங்களை நெய்வேலிக்கு கொண்டுசெல்ல முடியும்ணு சொல்லுங்கக் " என்றார்.

ஒருவர் எழுந்து நெய்வேலிக்கு செல்லும் சாலையில் அமைந்துள்ள பாலங்களை வலுப்படுத்த என்னென்ன செய்ய வேண்டுமென்று விளக்க முய்ன்றார். மற்றொருவர், " நான்கு நாட்கள் டயம் கொடுங்க, எல்லாவற்றையும் விவரமாகத் தருகிறோம்" என்றார். முதலைமச்சர் காமராஜ் " நான்கு நாள் என்ன? பதினைந்து நாள் எடுத்துக்குங்க! இவ்வளவு நாள் காத்திருக்கலியா? நான் டி.டி.கே-யை

இரண்டு வாரம் கழிச்சே வரச்சொல்றேன். அதற்குள் தயார் பண்ணி கொடுங்க்க" என்று சொன்னார்.

காமராஜ் சொன்ன மாதிரியே திட்டம் தயாரிக்கப்பட்டு, நெய்வேலி வரை பாலங்கள் வ்லுப்படுத்தப்பட்டுச் சாலைகள் அகலப்படுத்தப்பட்டன. நம்மவர் இசைவு கொடுத்த பிறகு, சோவியத் நாட்டிலிருந்து எந்திரங் கள் எடுத்து வரப்பட்டு, நெய்வேலிக்கு கொண்டு செல்லப்பட்டன. ஓராண்டு காலமாக தீர்வு காண முடியாமல் இருந்ததை எளிமையாக தீர்த்து வைத்தார் முதலமைச்சர் காமராஜ்.

## .கோவையில் மருத்துவக் கல்லூரி

ஒரு நாள் காமராஜரைச் சந்திக்க வந்த செல்வந்தர் ஒருவர், கோவையில் மருத்துவக் கல்லூரி ஒன்று அமைக்க ரூ.20 லட்சம் தருவதாக கூறினார். அந்த திட்டத்திற்க்கு 1 கோடி செலவாகும் என்றும், மீதி 80 லட்சத்தை அரசு முதலீடு செய்ய வேண்டும் என்றும் அந்தச் செல்வந்தர் கேட்டுக்கொண்டார். அந்த மருத்துவக்க் கல்லூரி, தனியார் நிர்வாகத்தில் இருகுமென்றும் கூறினார். இதற்குச் சம்பந்தப்பட்ட சுகாதரத்துறை அமைச்சரின் ஆதரவும் ஆமோதிப்பும் இருத்தது.

சிறிது காலத்திற்க்குப் பிறகு, இத்திட்டம் சம்பந்தமான கோப்பு அனுமத்க்காகக் காமராஜரின் பார்வைக்கு வந்தது. சம்பந்தபட்ட அமைச்சரைக் காமராஜர் அழைத்து, "80 லட்சம் ரூபாயை ஒரு தனியாரிடம் கொடுத்து மருத்துவக் கல்லூரி தொடங்குவதைவிட, இன்னும் 20 லட்சத்தைப் போட்டு அரசாங்கமே மருத்துவக் கல்லூரியை தொடங்களாமே? தனியாரை மருத்துவக் கல்லூரி தொடங்க அனுமதித்தால், அவர்கள் அதைத் தொழிலாக்கிவிடுவார்கள். லாபம் சம்பாதிப்பதுதான் அவர்கள் நோக்கமாக இருக்கும். சேவை மனப்பான்மை இருக்காது" என்றார். சம்பந்தப்பட்ட அமைச்சர் பதில் ஏதும் சொல்ல முடியாமல் திக்கு முக்காடிப் போனார்.

கோவையில் தனியார் மருத்துவக் கல்லூரியைத் தொடங்க அனுமதி மறுத்த காமராஜ், தஞ்சாவூர் போர்டு, ரயில்வே செஸ் வரியாக வசூலித்த தொகையில் ரூ 1.30 கோடி இருப்பதை கேள்விப்பட்டு, அதை மருத்துவக் கல்லூரி தொடங்க செலவழிப்பதற்கு அனுமதி அளித்தார். மேற்கொண்டு பணம் தேவைப்பட்டாலும் அரசு கொடுக்கத் தயாராக இருப்பதாகவும் கூறினார். இவ்வாறு தஞ்சையில் 1 கோடிக்குமேல் செலவு செய்து அரசு மருத்துவக் கல்லூரி அமைந்திட ஆதரவும், ஊக்கமும் அளித்தார்.

இன்று தஞ்சையில் சிறப்பாக செயல்பட்டு வரும் மருத்துவக்கல்லூரி, காமராஜரின் முயற்சியினால் உருவானது என்கிற உண்மை பலருக்குத் தெரியாமல் போனதில் வியப்பில்லை.

## .விருதுநகர் நாடார் உறவின் முறை சங்கம்

காமராஜ் ஆட்சி பொறுப்பை ஏற்ற நேரத்தில் வட சென்னையில் விருதுநகர் நாடார் உறவின் முறை சங்கம் செயல்பட்டு வந்தது. அந்த சங்கத்தில் மகமை நிதியாக கொஞ்சம் தொகையும் இருந்தது. அந்த மகமை நிதியிலிருந்து ஏதாவது ஒரு உயர்வுக்கு வழிவகை செய்ய வேண்டும் என அச் சங்கக்ம் முடிவு செய்து, ஓர் உயர் நிலை பள்ளி துவங்க திட்டமிட்டு, அதற்கான் அனுமதி வேண்டி பொதுக்கல்வி இயக்குனருக்கு விண்ணப்பம் செய்தார்கள். உயர் நிலை பள்ளி துவங்குவதற்கு என்று சில விதிமுறைகள் இருந்தன. தேவையான இடம், விளையாட்டு மைதானம், ஆய்வகம், நூலகம் இப்படி சில. இப்படிப்பட்ட அடிப்படை தேவைகளை நிறைவேற்றாமல் சங்கமும் உயர் நிலை பள்ளி தொடங்க அனுமதி கேட்டது. பொது கல்வி இயக்ககமும் அனுமதி குறித்த எந்த பதிலையும் அளிக்காமல் இருந்தது.

இந்தச் சூழ்நிலையில் முதல்வர் காமராஜிடம் சென்று சங்க பொறுப்பாளர்கள் முறையிட்டனர். பொது கல்வி இயக்குனரோடு காமராஜ் தொடர்பு கொண்டு, இது பற்றி பேசுவதற்க்கு சம்பந்தபட்ட துணை இயக்குனரை அனுப்பு வைக்குமாறு கேட்டுக் கொண்டார். தானே வருவதாக இயக்குனர் தெரிவிக்க, இந்த அனுமதி குறித்து என்ன முடிவு எடுத்துள்ளீகள் என் தெரிந்தெள கொள்ள மட்டுமே வேண்டும், எனவே இந்த சிறிய தகவலுக்காக இயக்குனர் வர வேண்டியதில்லை, துணை இயக்குனரை அனுப்பி வைத்தால் போதும் என்று காமராஜ் கூறிவிட்டார்.

குறிபிட்ட நாளில் துணை இயக்குனராக இருந்த நெ.து.சுந்தரவடிவேலு தலைமை செயலகம் சென்று காமராஜரை சந்தித்தார். முதலில் விதிமுறைகளை பற்றி கேட்டு தெரிந்து கொண்ட காமராஜ், சங்கத்தினர் விதிமுறைகளில் எவற்றையெல்லாம் நிறைவேற்றி விட்டார்கள், எவற்றையெல்லாம் நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டார். முதலமைச்சர் காமராஜர் விரும்புகிறபடி ஆணையிடுவதாக இயக்குனர் கூற சொன்னதாக் நெ.து.சுந்தர வடிவேலு பதிலளித்தார்.

உடனே, "இத்தகையவற்றை நான் விரும்புகிறேனா இல்லையா என்று பாராமல், விதிமுறைகளின் அடிப்படையில் முடிவு செய்வதே நிர்வாகதிற்கு நல்லது. உயர்நிலைப் பள்ளிக்கு, என்று, பொருத்தமான தனிக்கட்டிடம் இல்லாத நிலையில் சாதாரணமாகா என்ன அனுமதி கொடுப்பீர்கள்?" என்று காமராஜ் கேட்டார். பதிலுக்கு சுந்தர வடிவேலுவும் "புதிய கட்டடம் கட்டுவதை எதிர்பார்த்து முதல் மூன்று படிவங்களை தற்காலிகமாக அனுமதிப்போம், கட்டட வேலை முடிந்த பிறகு ஒன்பது, பத்து, பதினோறாவது வகுப்புகளை அனுபதிப்போம்" என்றார்.

காமராஜரும் அதை ஆமோதிக்கும் விதமாக, "சரியான போக்கே, வாக்குறிதியை நம்பி மட்டும் எடுத்த எடுப்பிலேயே, கேட்டதை எல்லாம் கொடுத்து விட்டால், அப்புறம் செயற்குழு உறுப்பினர்கள் அவரவர் சொந்த தொழிலை கவனிக்க போய்விடக்கூடும். அடியோடு அனுமதி மறுத்தால், ஊரார் மகமைப் பணத்தை

செலவிட முடியாது. இதுவரை பின்பற்றும் நடைமுறை இனியும் தொடரலாம்" என்று ஆணையிட்டார். சுந்தரவடிவேலுவோ பணிவான குரலில்...
"தாங்கள் விருப்பினால் அவரகள் கேட்டுள்ள முதல் நான்கு படிவங்களையும் கொடுப்பதாக, இயக்குனர் என்னிடம் கூறி அனுப்பினார்" என்றார். ஆனால் காமராஜ் உறுதியோடு, "இந்த பள்ளிகூடம் தொடங்க போகிறவர்கள் எனக்கு வேண்டிய்வரகள்தான். அவரகள், அரசின் விதிமுறைக்கு கட்டுபட்டல்தான் மற்றவர்களை கட்டுபடுத்த முடியும், மூன்று படிவங்கள் கொடுத்தாலே போது என்று இயக்குனரிடம் சொல்லுங்கள்" என்பதோடு முடித்துக் கொண்டார்.

விதிமுறைகள் யாருக்காகவும் தளர்த்தப்படக்கூடாது, அப்படி நல்ல செயல்களுக்காக தளர்த்தப்பட்டாலும் கூட அது பொதுவாக அனைவருக்கும் பொருந்தக் கூடிய வகையிலே இருக்க வேண்டும். உயர்ந்த இடத்தில் இருப்பவர்கள் தங்களுக்கு கீழே பணிபுரியக் கூடியவர்கள் வளைந்து கொடுக்க விருபினாலும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. அப்படி ஏற்றுக் கொண்டால் பொதுவான தன்மை இல்லாமல் போய்விடும் என்பதையும்தான் காமராஜருடைய உறுதியான மனப்போக்கு வெளிப்படுத்துகிறது.

## .ஏண்டா பள்ளிக்கூடம் பள்ளிக்கூடம் போகவில்லை

காமராஜ் முதலமைச்சராக பொறுப்பேற்ற நேரத்தில், ஒருபுறம் பஞ்சத்தின் கொடுமை, பசி பட்டினி அவலங்கள், மற்றொருபுறம் கல்வியின்மையும், வேலையில்லா திண்டாட்டமும் தாண்டவமாடியது. எனவே பசியற்ற நிலையை உருவாக்குவதே நமது நோக்கம் என்றார்.

"நம்முடைய நோக்கம் என்ன? யாரும் இந்த நாட்டிலே சாப்பாட்டுக்கு இல்லையே என்று இருக்க கூடாது. இது நியாயம்தானே. ஏன் உலகத்திலேயே சாப்பாட்டுக்கு இல்லையே என்று யாரும் இருக்க கூடாது. நம்முடைய நாடு சாப்பாட்டுக்கு கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டாமா? இதை மாற்ற வேண்டியது நம்முடைய அடிப்படையான தேவையல்லவா?"

சாதாரண ஏழை எளிய மக்களின் வாழ்கைத் தரத்தை உயர்த்துவதுதான் தம்முடைய ஆட்சியின் கொள்கை என்பதை தனக்கே உரிய முறையில் காமராஜ் கீழ்கண்டவாறு கூறினார்.

"நான் வரும்போது கிராமத்தில் ஒரு பையன் குச்சியை வைத்துக் கொண்டு மாடு மேய்க்க போய்க் கொண்டிருந்தான். நான் கேட்டேன், ஏண்டா பள்ளிக்கூடம் பள்ளிக்கூடம் போகவில்லையென்று. கஞ்சித் தண்ணிக்கே வழியில்லை என்கிறான். அவனுக்கு சாப்பாடு இருந்தால், அவன் பள்ளிக்கூடம் போட மாட்டானா என்ன? அவன் அப்பன், அம்மாவுக்கு தன் பையனை பள்ளிகூடத்திற்கு

அனுப்பி படிக்க வைக்க வேண்டுமென்ற ஆசையிருக்காதா என்ன?. நான் கேட்டேன், சம்பளம் நீ கொடுக்க வேண்டியதில்லை, மதியானம் சோறு வேறு போடுகிறோம், நீ ஏன் பள்ளிக்கூடத்திற்க்கு போக கூடாதென்று? அவன் சொல்லுகிறான், சட்டை இல்லை. சட்டை வாங்க பணமில்லை என்கிறான். சட்டை போடாமல் போனால் அங்கே சின்னப் பையன்களெல்லாம் கேலி செய்வார்களாம். ஒரு சட்டை வாங்க பணமில்லை அவனுக்குத்தான் பண்மில்லையே என்று அப்படியே விட்டுவிடலாம் இல்லையா? அவனுக்கு ஏதாவது வழி பண்ண வேண்டாமா? இல்லையா? இல்லை அப்படியே விட்டுவிடலாமா?

நீ மாடு மேய்க்கத்தான் பிறந்தாய், உன் தலையெலுத்து அப்படித்தான் இருக்கிறது என்னு சொல்லி விட்டுவிடலாமா? இது எப்படி நியாமென்று கேட்கிறேன். அது அப்படித்தான் என்றால், அவன் பெரியவன் ஆனதும் என்ன சம்பாதித்து விடுவான்? காலமெல்லாம் மாடு மேய்ப்பான் , காட்டுக்கு காவல் போவான், கையிலே கம்பு வைத்துக் கொண்டு உடம்பிலே கொஞ்சம் வழுவிருந்தால் வம்புச் சண்டைக்கு போவான்.

ரோடிலே போகிறவன், வருகிறவன், மண்டையெல்லாம் உடைப்பான், இப்படி மண்டையை உடைத்து மிரட்டியே பணம் சம்பாதிப்பான். அப்படி ஆள் இருக்காங்க சண்டிட்தனம் பண்ணி மிரட்டி சம்பாதிக்கிறது தான் அவர்கள் வேலை. நம்க்கும் இரண்டு ஆள் வேண்டியிருக்கிறதில்லை? அவனை வையவிட? இவனை வையவிட? இப்படியே அவன் வளர்ந்து விடுகிறான். இது ஆபத்து இல்லே? ஊரிலே சண்டித்தனம் பெருத்திட்டா ரொடிலே போக முடியுமா என்ன? தடிக்கம்பை கையில் எடுத்துக்கொண்டு கலகம் பண்ணுவான். இதனாலே சமுதாயம் கெட்டுப்போகிறது.

அது மாதிரி நிலைமைக்கு போக விடாமல் நல்ல முறையில் படிக்க வைக்க வேண்டாமா? அவனை தொழில் பண்ண சொல்லி, விவசாயம் பண்ணச் சொல்லி உத்தியோகத்திற்குப் போக சொல்லி, வியாபாரம் பண்ணச் சொல்லி செய்தால் தான் நடக்கும். ' மகாத்மா காந்தி என்ன சொன்னார். இந்த ஏழை மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னார். இதற்கான் வழிகளைத் தானே நாங்கள் செய்கிறோம்."

இந்த கூற்றிலிருந்தே காமராஜரின் தூய எண்ணங்கள், செயல்பட்டுகள் நமக்கு எளிதில் விளங்குகிறது.

## .தமிழகத்தில் ஆறுகளுக்கு பஞ்சமில்லை

தமிழகத்தில் ஆறுகளுக்கு பஞ்சமில்லை. சேர நாடும், எறுமை நாடும் (கன்னட நாடும்) தமிழ் நாடாக இருந்த பழங்காலத்திலேயே காவேரி, தென்பெண்ணை, பாலாறு, வைகை, பொருணை நதி என ஆறு பல ஓடியது. ஆனால் கரிகாலன் என்ற

சோழமன்னன் காவிரியின் குறுக்கே கட்டியது கல்லணை. அதன் பின் 1932-ல் பைகரா, அடுத்து 1937-ல் மேட்டுர், 1946-ல் பாபநாசம் நீர்மின் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டன.1952-ல் ராஜாஜி, சி.எஸ்,தேஷ்முக் முயற்சியில் கனடா நாட்டு உதவியால் நீலகிரி-குந்தா அணை பெறப்பட்டது.
அதனை தொடர்ந்து தமிழகத்தில் உள்ள அனைத்து அணைகளும் கட்டப்பட்டவை காமராஜரின் ஆட்சிக்காலத்தில் தான். மறக்க(டிக்க)ப்பட்ட அந்த நெடிய் பட்டிட்யலை பாருங்கள். (இதில், கால்வாய் மற்றும் ஏரி திட்டங்களையும் சேர்த்து தந்துள்ளேன்):

1. ரூ 5 கோடியில் மலம்புழா அணை - 46,000 ஏக்கர் பாசன வசதி
2. தாமிரபரணி குறுக்கே மணிமுத்தாறு அணை - 20,000 கூடுதல் பாசன வசதி
3. ரூ 3 கோடியில் அமராவதி அணை - 47,000 ஏக்கர் பாசன வசதி
4. ரூ 2.5 கோடியில் சாத்தனூர் அணை - 20,000 ஏக்கர் பாசன வசதி
5. ரூ 2.5 கோடியில் வைகை அணை - 20,000 ஏக்கர் பாசன வசதி
6. ரூ 1 கோடியில் வாலையார் அணை - 6,500 ஏக்கர் பாசன வசதி
7. ரூ 50 லட்சத்தில் மங்கலம் அணை - 6,000 ஏக்கர் பாசன வசதி
8. ரூ 1 கோடியில் ஆரணியாறு அணை - 1,100 ஏக்கர் பாசன வசதி
9. ரூ 2 கோடியில் கிருஷ்ணகிரி அணை - 7,500 ஏக்கர் பாசன வசதி
10. வீடுர் அணை.
11. (*) பரம்பிக்குளம் - ஆழியாறு அணைகள்.
12. ரூ 2.5 கோடியில் மேட்டூர் பாசன கால்வாய் - 45,000 ஏக்கர் பாசன வசதி
13. ரூ 30 லட்சத்தில் புதுபிக்கப்பட்ட காவிரி டெல்டா கால்வாய்கள்
14. ரூ 10 கோடியில் கீழ் பவானி திட்டம் - 2,00,000 ஏக்கர் பாசன வசதி
15. ரூ 1.5 கோடியில் மேல் கட்டளை கால்வாய் திட்டம் - 36,000 ஏக்கர் பாசன வசதி
16. ரூ 1.5 கோடியில் புள்ளம்பாடி திட்டம் - 22,000 ஏக்கர் பாசன வசதி
17. ரூ 1.5 கோடியில் மீனக்கரை ஏரித்திட்டம் - 4,000 ஏக்கர் பாசன வசதி
18. ரூ 75 லட்சத்தில் மணிமுக்தா நதித்திட்டம் - 4,000 ஏக்கர் பாசன வசதி
10. ரூ 75 லட்சத்தில் கோமுகி ஆற்றுத்திட்டம் - 8,000 ஏக்கர் பாசன வசதி
20. ரூ 75 லட்சத்தில் தோப்பியார் ஏரி - 2,500 ஏக்கர் பாசன வசதி

(*) அனைத்து அணைகளின் மணிமகுடம் பரம்பிக்குளம் - ஆழியாறு அணை

## நீங்க சி.எம்-கிட்ட ஒரு வார்த்தை சொன்னீங்கனா

தலைவர் (காமராஜ்) வழக்கம் போல தனது முன்அறையில் அமர்ந்து வந்தோரோடு அளவளாவியும், அனுப்பிக்கொண்டும் இருந்தார். நாங்கள் நால்வரும் (அரு.சங்கர், தனுஷ்கோடி, டி.எஸ்.டி.ராஜா, டி.ஏ.எம்.ஏ.மாரிமுத்து)முன்னேறி அறையில் இடம் பிடித்து விட்டோம்.அப்போது நாங்கள் சற்றும் எதிபாராத நிலையில் பதினெட்டு வயது இளைஞன் ஒருவன், மிக உரிமையுடன் தலைவர் முன் வந்து

நின்றான்.அவன் கையில் ஒரு அச்சடிக்கப்பட்ட வெள்ளைதாளிருந்தது. "என்னடா கனகவேல், என்னா விஷயம்?...என்னது காகிதம்" கேட்டபடியே வாங்கி படித்தார்.இளைஞன் பேச ஆரம்பித்தான், "தாத்தா, எம்.பி.பி.எஸ்-க்கு அப்ளிகேசன் போட்டேன், இன்டர்வி நடந்திருச்சு, நீங்க சி.எம்-கிட்ட ஒரு வார்த்தை சொன்னீங்கனா இடம் கிடைச்சுரும், லிஸ்ட் போடுறதுக்குள்ள சொல்லுங்க தாத்தா, எங்க குடும்பத்துல நான் ஒருத்தனாவது படுச்சி டாக்டராகி விடுவேன்" என கெஞ்சுகிறான்.தலைவரின் பக்கவாட்டில் மிக அருகில் நின்றிருந்த எனக்கு தலைவரின் கையில் இருந்த அந்த தாளின் சில வாசகங்கள் சில தெளிவாக தெரிந்தன. அதில்...

C/O THIRU. K. KAMARAJ
ALL INDIA CONGRESS COMITTEE PRESIDENT
8,THIRUMALAI PILAI ST
MADRAS-17

என ஒரு கேள்விக்கு பதிலாக எழுதி இருந்தது. தலைவரின் அடுத்த கேள்வியும் அது பற்றியதாகவே இருந்தது..."ஆமா, என் பேரை எதுக்கு எழுதினே?""இல்ல தாத்தா, என் மெட்ராஸ் அட்ரஸ் கேட்டிருந்தாங்க, எனக்கு உங்களை தவிர இங்கே வேறுயாரையும் தெரியாதே...இன்டர்வியூவலயும் கேட்டாங்க...தாத்தான்னு சொன்னேன்". அந்த இளைஞன் யாரென்பது இப்போதுதான் எனக்கு புரிந்தது. காமராஜரின் ஒரே தங்கை திருமதி. நாகம்மாளின் மகள் வழி பேரன்."கனகவேலு, இந்த டாக்டர் படிப்பு, இன்ஞினியர் படிப்புக்கெல்லாம் அரசாங்கம் ஒரு கமிட்டி போட்டிருக்கும். அவுங்க தேர்ந்தெடுக்கிறவங்களுக்குத் தான் இடம் கிடைக்கும். எல்லாறுக்கும் பொதுவா கமிட்டியை போட்டுட்டு, பிறகு இவனுக்கு சீட் குடு, அவனக்கு சீட் குடுன்னு சிபாரிசு பண்றதுன்னா பிறகு அதுக்கு கமிட்டியே போட வேண்டியதில்லையே... நீ நல்லா பதில் சொல்லி இருந்தீன்னா உனக்கு கிடைக்கும். கிடைக்கலேன்னா பேசாம கோயமுத்தூரில் பி.எஸ்.சி அக்ரிகல்சர்னு ஒரு பாடம் இருக்கு, அதிலே சேர்ந்து படி.... அந்த படிப்புக்கு நல்ல எதிர் காலம் இருக்கும். என்னால் சிபாரிசு பண்ண முடியாது" என்று சொல்லி அவன் தந்த தாளையும் அவனிடம் தந்து அனுப்பிவிட்டார். அவனை அனைவரும் அனுதாபத்தோடு பார்த்தனர். அந்த வருடம் அவனுக்கு மருத்துவ படிப்புக்கு அனுமதி கிடைக்கவில்லை.

## .பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL)

கனரக கொதிகலன் தொழிற்சாலை என்ற மிகுமின் அழுத்த சக்தி மூலம் செயல்படும் ஒரு மாபெரும் தொழிற்சாலையை இந்தியாவில் நிர்மாணித்து தர ஒரு செக் நாட்டு நிறுவனம் முன்வந்தது. இதை தமிழகத்தில் தொடங்க, மத்திய அரசிடம் ஒப்புதல் வாங்கி வந்தார் காமராஜ். மத்திய அரசு துறை அதிகாரிகளும், செக்நாட்டு

தொழில் முனைவர்களும் இணைந்து தமிழகத்தில் பொருத்தமான இடம் தேடி வலம் வந்தனர்.

பரந்த வெளி, தூய்மையான நீர், தேவையான மின்சக்தி, போக்குவரத்துக்கான தொடர்வண்டி வசதி இத்தனையும் கூடிய ஓர் இடத்தைத் தமிழக அதிகாரிகளால் காட்டமுடியவில்லை. அலைந்து சோர்ந்து போன செக் நாட்டு தொழில் முனைவர்கள் அத்தொழில்கூடமமைக்க தமிழகத்தில் தக்க இடமில்லை என்ற முடிவெடுத்துக் கிளம்பத் தயாரானார்கள். இதைக் கேள்வியுற்ற காமராஜ் அவர்களையும் உடன் சென்றாய்ந்த நம்மவர்களையும் அழைத்தார். அமைதியாக விசாரித்தார். அதிகாரிகள் சுட்டி காட்டிய இடங்களையும் உடன் விசாரித்தார். அதிகாரிகள் சென்று காட்டிய இடங்களைப் பட்டியலிட்டனர். அவர்கள் கேட்க்கும் வசதிகள் ஒரு சேர அமைந்த இடத்தைக் காட்ட முடியவில்லை என்றனர்.

ஆனால் தமிழகத்தின் ஒவ்வொரு மாவட்டத்தின் மூலை முடுக்குகளையெல்லாம் தமது சுற்றுபயணங்கள் மூலம் நன்கறிந்திருந்த காமராஜ் ஒரு கணம் சிந்தித்து விட்டுக் "காவிரியாற்றங்கரையில் திருவெறும்பூர் என்ற ஊர் இருக்கிறதே, அந்த இடத்தைக் காட்டினீர்களா?", அதிகாரிகள் இல்லையென்று தலையாட்டினார்கள்.

"ஏன்?... இவங்க கேட்டிற எல்லா வசதிகளும் அங்கே இருக்கே, போய் முதல்ல அந்த இடத்தை காட்டிட்டு எங்கிட்ட வாங்க" என்றார்.

என்ன ஆச்சர்யம்! அந்த இடத்தைப் பார்வையிட்ட செக் நாட்டு வல்லுனர்களுக்கு அந்த இடம் எல்லா வகைகளிலும் பொருத்தமான இடமாக தொன்றியது.

அங்கு உருவாகி இன்று உலக நாடுகளுக்கு தன் செய்பொருளை ஏற்றுமதி செய்யும் "பெல்" என்றழைக்கப்படும் பாரத் ஹெவி எலக்ட்ரிக்கல்ஸ் லிமிடெட் (BHEL) என்ற பெருமைவாய்ந்த நிறுவனமே அது.

காமராஜ் ஆட்சிப் பொறுப்பேற்ற சில ஆண்டுகள் வரை எதிர்கட்சி மேடைகளில் அவர் உயர்நிலைப் படிப்பைக் கூட முடிக்காதவர், இவருக்கு ஆளும் ஆற்றல் எப்படியிருக்கும் என்று கிண்டல் வார்த்தைகளை வீசியதுண்டு.

அப்போது காமராஜ் மிக அடக்கமாக கூறினார், "பூகோளம் என்பது நதிகள், மலைகள், பயிர் வகைகள், மக்கள் வாழ்க்கை என்பதைக் பற்றிக் கூறும் கல்வி என்றால் பலரைவிட நான் நன்கறிவேன். புத்தகப் படிப்புதான் பூகோளம் என்றால் அது எனக்குத் தெரியாது, அது எனக்குத் தேவையும்மில்லை".

## ."அது என்னையா சத்தம்?"

1954-ம் ஆண்டு தமிழ் புத்தாண்டு நாளன்று முதல்வர் பொறுப்பையேற்கப் புறப்பட்டார் காமராஜ். திருமலைப் பிள்ளை வீதி திமிலோகப்பட்டது. அனைவரிடமிருந்தும் விடைப் பெற்று வெளியே வந்து 2727 என்ற காரில் ஏறினார்.

திடீரென முன்னாலிருந்த காவலர் வண்டியிலிருந்து "சைரன்" என்ற மிகுவொலி எழுந்தது. புறப்பட்ட காரை நிறுத்தச் சொன்னார். முன்னாலிருந்த வண்டியிலிருந்த காவல் துறை அதிகாரியை அழைத்தார். "அது என்னையா சத்தம்?" காமராஜ்.

"ஐயா, இது முதலமைச்சர் செல்லும் போது போகுவரத்தை உஷார்படுத்த எழுப்பப்படும் ஒலி. முன்னால் முதல்வர்கள் பிரகாசம் ஐயா, ஓமந்தாரையா, குமாரசாமிராஜா ஐயா, ராஜாஜி ஐயா எல்லோர் காலத்திலுமிருந்து வருகிற சம்பிரதாயம்" என்றார் காவல்துறை அதிகாரி. "இதோ பாருங்க... இதுக்கு முன்னால இந்த சம்பிரதாயமெல்லாம் இருந்திருக்கலாம்... எனக்கு இதெல்லாம் வேண்டாம்னேன். சத்தம் போடாமப் போங்க" என்று கூறிவிட்டுப் புறப்பட்டார்.

அடுத்த கோடம்பாக்கம் பெருவீதி - நுங்கம்பாக்கம் பெரு வீதி சந்திப்பில் போக்குவரத்தைச் சீர் செய்து கொண்டிருந்த காவலர் இவர் சென்ற வண்டியை நிறுத்தி பின் இவரது வண்டி செல்ல அனுமதியளித்தார். ஆனால் அவர் காருக்கு முன் நின்ற காவல்துறை மேலதிகாரிகளின் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன். ஆனால் காமராஜரோ அந்த நடுத்தெருக் காவாலரின் கடமையாற்றலைக் கண்டு உள்ளம் புளகித்தார்.

காவலரைத் தாண்டி இவரது கார் செல்லும் போதுதான் காவலருக்கு விஷயமே புரிந்தது. நடு நடுங்கிப் போனார். முதல்வர் காரையே நிறுத்திவிட்டோமெ என்று பத்றிப்போனார். காவல்துறை மேலதிகாரிகளின் சினத்துக்கு ஆளாகி விட்டோமே என கலங்கினார்.

அன்று மாலை காமராஜர் வீடு திருப்பியபோது கலவரத்துடன் வாசலில் காத்து நின்று மன்னிப்புக் கேட்ட காவலரை தட்டிக்கொடுத்த காமராஜ் அவரது கடமை உணர்வை பாரட்டியபோது தான் காவலரின் உள்ளம் சாந்தியுற்றது.

காமராஜ் முதலமைச்சராக இருந்தவரை அவருக்கு பாதுகாப்பாகச் சென்ற காவல்துறை வண்டிகள் ஒலி எழுப்பியதே இல்லை. தன்னை தலைவராக எண்ணிக்கொள்ளாமல் மக்களில் ஒருவராகவே தன்னைப் பாவித்துக் கொண்டார்.

## >>>>>> இலவச கல்வி: <<<<<<<<

முதலில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த எல்லா இலவச கல்வி சலுகையும், பின்பு மிகவும் பின் தங்கிய மாணவர்களுக்கும், அதேபோல் தாழ்த்தப்பட்டவராக இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறியவர்களுக்கும் அளித்து 1957- 58-ல் காமராஜ் அரசு ஆணையிடப்பட்டது. இதனால் மேலும் பலர் இலவச கல்வி உட்பட ஏனைய பல சலுகைகள் பெற்றனர். பின்பு ஆண்டு வருமானப் ரூ.1200 க்கு உள் இருக்கக்க்கூடிய குடும்ப மாணவர்களுக்கு உயர் கல்வி வரை இலவசக் கல்வி அளித்து 1960-ல் காமராஜ் அரசு ஆனை பிறப்பித்தது. அதுவே 1962-ல் அனைவருக்கும் உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி வழங்கப்பட்டது.

## >>>>>> கட்டாயக் கல்வி: <<<<<<<<

1960-ல் மாநிலத்தின் 3-ல் 1-பகுதியில் 6- 11 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கட்டாய கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. 1961-ல் நிலத்தின் இன்னோறு 3-ல் ஒரு பகுதியில் கட்டய கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இறுதியாக 1962-ல் மீதமிருந்த ஒரு பகுதியிலும் கட்டாய் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

>>>>>> <<<<<<<<

1960 முதல் கல்வித்துறை மூலகாகவே சீருடை வழங்க ஏற்பாடு செய்தார். பொது மக்கள் நல்லுதவியுடன் செயல்பட்ட சீருடைத்திட்டம் 5 ஆண்டுகளில் மும்மடங்காகியது. இதன் மூலம் பள்ளிப் பிள்ளைகளிடையே காணப்பட்ட ஏழை பணக்காரன் என்கிற ஏற்றத்தாழ்வை ஒழித்து சமதர்ம சமுதாயம் உருவாக வழி வகுத்தார்.

## >>>>>> கல்வி மேம்பாடு: <<<<<<<<

காமராஜ் ஆட்சிப் பொறுப்பேற்ற 1954-ல் 6 வயதிலிருந்து 11 வயது வரையிலான பள்ளி பிள்ளைகளில் 45% மட்டுமே பள்ளிக்கு சென்றனர். ஆனால் 1963-ல் அதே வயது பிரிவை சேர்ந்த 80% குழந்தைகள் பள்ளிக்கு சென்றனர். இந்தியா விடுதலை பெற்ற போது அப்போதைய ஒருங்கினைந்த சென்னை மாநிலத்தில் இருந்த தொடக்கப் பள்ளிகள் எண்ணிக்கை 15,303. அதுவே தனி மாநிலமாக அமைந்த பின்னர் 1963-ல் மொத்தமாக 30,020 தொடக்கப்பள்ளிகளாக வள்ர்ச்சிப்பெற்றது. 1954-ல் 18 லட்சம் சிறுவர் மட்டுமே பள்ளிக்கு சென்றனர் என்ற நிலை மாறி 1963-ல்

பள்ளிக்கு சென்ற சிறுவர்களின் எண்ணிக்கை 47 லட்சமாக (47,44,091) உயர்ந்தது. இடைநிலை கல்வியை பொறுத்த வரை 1954-ல் 1006 பள்ளிகளில் மொத்தம் 4,89,115 மாணவர்கள் பயின்றனர். இது காமராஜின் ஆட்சியில் ஏறக்குறைய இரண்டு மடங்காகியது. இரண்டு பல்கலைகழகங்கலுடன் 39 கலை, அறிவியல் கல்லூரிகளை 1954-ல் கொண்டிருந்த தமிழ்நாடு 1963-ல் அதே இரண்டு பல்கலைகழகங்கலுடன் மொத்தம் 63 கலை, அறிவியல் கல்லூரிகளுடன் உயர்ந்து இருந்தது. 1954-ல் இருந்த 141 ஆசிரியர் பயிற்ச்சிப் பள்ளிகள் காமரஜின் ஒன்பது கால ஆண்டு ஆட்சியில் 209-ஆக உயர்ந்தது.

கல்வித் துறையில் காமராஜ் செய்த புரட்சி, தமிழ் நாட்டு மக்களிடையே கல்வி கற்பதில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தமிழகத்தில் 'ஆரம்ப பள்ளிகள் இல்லாத கிராமமே இல்லை" என்கிற நிலை காமராஜ் காலத்தில் உருவாயிற்று. தேவையான அளவு உயர் நிலை நவீன வசதிகளுடன் கூடிய உயர்நிலைப் பள்ளிகள், ஐந்து மைல் தூரத்திற்கு ஒன்றாக அமைந்தன.

## >>>>>> ஆசிரியர் நலன்: <<<<<<<

மாணவர் நலன்களில் அக்கரை உணர்வுப்பூர்வமாக இருக்க வேண்டுமெனில், கற்றுதரும் ஆசிரியர்களின் மன நிறைவு முக்கியப். அதற்காக அவர்களின் நலன் காத்திட பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டன. முக்கியமாக ஆசிரியர்களுக்கான் மூன்று நலன் திட்டம் - (i)நிரந்தர வைப்பு நிதி, (ii)ஓய்வு கால ஊதியம் மற்றும் (iii)ஆயுள் காப்பீடு. ஆசியாக் கண்டத்திலேயே, காமராஜ் ஆட்சியில் தான் ஆசிரியர் சமுதாயத்திற்க்கு இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மேலும் சம்பள உயர்வு மற்றும் ஓய்வு பெறும் வயது 55-ல் இருந்து 58-ஆக உயர்த்தப்பட்டது.

## >>>>>> பொது நூலக இயக்கம்: <<<<<<<

ஒரு விழிப்புற்ற சமுதாயத்தின் முன்னேற்ற வேகம் என்பது அந்த சமுதாயத்தின் வெற்றிக்கு வழிகோலாகும். இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்திருந்த காமராஜ் அரசு, தொடக்க கல்விக்கு அளித்த முன்னுரிமையை நூலக இயக்கத்திற்கும் அளித்தது. தங்கள் ஊர்களில் நூலகம் அமைத்து செயல்பட, நூலகத்திற்க்கு இடம், கட்டிடம், நூல்கல், பொருட்கள், ஆகியவற்றை தருவதற்க்கு பொதுமக்கள் உற்சாகப்படுத்தப்பட்டனர். இதன் காரணமாக, நூலகங்கள் இல்லாமல் இருந்த தமிழ்நாட்டில் 638 பொது நூலகங்களும், 12 மாவட்ட மைய நூலகங்களும் திறக்கப்பட்டன. இது தவிர நூல்களை நேரடியாகத் தரும் நோக்கில் 644 நூல் நிலையங்களும் செயல்பட்டன.

## .பள்ளி வளர்ச்சித் திட்ட மக்கள் இயக்கம்:

>>>>>> பள்ளி வளர்ச்சித் திட்ட மக்கள் இயக்கம்: <<<<<<<<

பள்ளிக்கூடம் திறந்தால் போதாது, பள்ளிக்கூடத்திற்க்கு நிலையான சொத்துக்கள் ஏற்படுத்தபட வேண்டும், அதுதான் பள்ளிக்கூடம் தொடர்ந்து எவ்வித சிக்கலும் இல்லாமல் செயல்பட வழிவகுக்கும் என்பதை காமராஜ் உணர்ந்தார். ஆனால், அரசிடம் போதிய நிதி இல்லை என்ற நிலை. ஆனால் கல்விகு நிதி ஒரு பொருட்டு அல்ல என்பதை நன்கு உணர்ந்திருந்த காமராஜ், சமுதாய பங்கேற்ப்பை ஊக்குவிக்கும் மாநாடுகளை தமிழ் நாடெங்கும் நடை பெற்றிட ஆணையிட்டார். பள்ளிக்கூடங்களின் அடிப்படைத் தேவைகள் எவையென்று பட்டியலகள் தாயாரிக்கப்பட்டன.

தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல், உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல் என்று மூன்று பட்டியல்கள் உருவாயின. தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கு, என்னென்ன வசதிகள் இல்லை என்பது கிராம மக்களுக்கு தெரிவிக்ககப்பட்டு, உதவும்மாறு கேட்டுக்கொள்ளப் பட்டனர். கிராம மக்கள் உற்சாகத்துடன் உதவினர். இந்த அனுபவத்தின் அடிப்படையில் பள்ளிக்கூடங்களின் மேம்பாட்டிற்காக விரிவான் மக்கள் இயக்கமாக ஆக்குவது என முடிவு செய்யப்பட்டது.

"பள்ளிகளை கட்டுவது, பகல் உணவு அளிப்பது, ஆசிரியர்களை நியமிப்பது என்பவை எல்லாம் அரசாங்கத்தின் வேலை" என்பது போல் இருந்த மக்களிடையே, காமராஜ் ஒரு புரட்சி இயக்கத்தை துவக்கி வைத்தார். ஒவ்வொரு மனிதனும் "கல்வி என் பொறுப்பு ! கல்வி வளர்ச்சிக்கு நான் பாடுபட வேண்டும் !" என எண்ணி செயல்படுவதற்க்கு அந்த இயக்கம் காரணமாயிற்று. 'பள்ளி வளர்ச்சித் திட்ட மக்கள் இயக்கம்' என்பதை உறுவாக்கி, மக்ககளை கல்வி வளர்ச்சிக்கு உதவ முன் வரச் செய்தார்.

இத்திட்டம் 1958-ல் செங்கற்பட்டு மாவட்டம் கடம்பத்தூரில் துவங்கியது. இம்முதல் முயற்சி வெற்றிகரமாக செயல்பட்டதால், தமிழ் நாட்டில் மேலும் 159 பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டது. இந்த இயக்கத்தை தொடங்கிய 25 மாதங்களில், தமிழகமெங்கும் 133 மாநாடுகளை நடத்தி 4 கோடி ரூபாய் பணத்தையும், 2.47 கோடி பெறுமானமுள்ள பொருள்கள் நன்கொடையாகப் பெற்றார்.

07/1958-ல் திசையன்விளை மாநாட்டில் முதல் அமைச்சர் கலந்து கோண்டார். இந்த மாநாட்டில் 102 பள்ளிகள் பங்கேற்றன. மாநாட்டில் முன் வைக்கப்பட்ட திட்டங்களின் மதிப்பு ரூபாய் 1,38,000 ஆகும். மாநாட்டின் மூலம் பெறப்பட்ட

நிதிகளின் மொத்த மதிப்பு 1,36,000 ரூபாய். முதல் அமைச்சர் காமராஜ் கலந்து கொண்ட இத்தகைய ஒரு மாநாடு 11/1958-ல் செங்கற்பட்டு நகரத்தில் நடைபெற்றது. இதில் இந்திய கல்வி அமைச்சர் சி.கே.பந்த் கலந்து கொண்டர். 826 பள்ளிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் ரூபாய் 23 லட்சத்திற்க்கு திட்டம் வைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டன. அம்மாநாட்டில் திரு.சி.கே.பந்த் உரையாற்றும் போது, "பிற மாநிலங்களில் முளைக்காத, நல்ல மேம்பாட்டு திட்டங்கள், சென்னை மாகாணத்தில் மட்டும் பயிராவது வியப்பானது." என்று கூறினார். கூறியது மட்டுமின்றி, டெல்லி சென்றவுடன், பிரதமர் நேருவிடம் இம்மாநாடுகளை பற்றி வியந்து கூறியுள்ளார். அதன் பின்பு 01/1959-ல் காரைகுடியில் உள்ள ஆ.தெக்கூரில் நடந்த பள்ளி சீரமைப்பு மாநாட்டில் பிரந்தமர் நேரு கலந்து கொண்டார்.அடுத்த நாள் திருநெல்வேலில் உள்ள அடைக்கல்ப்புர மாநாட்டிலும் நேரு கலந்து கொண்டார். இதனை தொடர்ந்து, கல்வி மேம்பாட்டு திட்டங்களில் தமிழகத்தின் வழியில் செயல்படுமாறு அனைத்து மாநில முதல் அமைச்சர்களுக்கும் நேரு கடிதம் எழுதினார். 1963-ம் ஆண்டு வரை நடைபெற்ற மாநாடுகள் மூலம் கோடிக்கனக்கான ரூபாய் பெறுமானமுல்ல நன்கொடைகள் இந்த இயக்கத்தின் மூலம் குவிந்தன, பள்ளி மாணவர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவது சாத்தியமாயிற்று. கல்வியில் தமிழகம் வழிகாட்டடியது. இந்த புதுமை திட்டத்தை அறிமுகப்படுத்தியவரை உலகமே பாரட்டியது.

மேலும் இதே முறையில் எழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகம், எழுதும் பலகை ஆகியவற்றை வழங்க ஏற்பாடு செய்தார். மதிய உணவுத் திட்டத்திற்கு பயன்படும் வகையில் பொருள்களையும் பணத்தையும் கொடுத்த உள்ளூர் மக்கள், பள்ளிக்கு கட்டிடம் கட்ட நிலத்தையும், கட்டுமானப் பணிக்கு உரிய பொருள்களும், பள்ளிக்குத் தேவையான பொருள்களும் கொடுத்து உதவினர்.

இத்திட்டத்தை தொடர்ச்சியாக செயல் படுத்தப்பட்டதால் மொத்தமாக 167 பள்ளி சீரமைப்பு மாநாடுகள், 24,565 பள்ளிகள் தன்னிறைவு பெற்றன. தொடக்க கல்வி அளவில் சுமார் 763 கோடி ரூபாய் அளவுக்கு பொதுமக்கள் பள்ளிகளுக்கு நன்கொடை வழங்கி பள்ளி மேம்பாட்டுக்கு உதவினார்கள்.

## .பகல் உணவுத் திட்டம்:

காமராஜ் சிந்தனையிலே தோன்றிய பகல் உணவுத் திட்டம் (இன்றைய சத்துணவு), அமைச்சரவையின் ஆய்விற்கு வந்தது. முதலைமச்சரோ, கல்வி அமைச்சரோ வாய் திறப்பதற்க்கு முன்பே, வருவாய் துறை செயலர் "அரிஜனப் பள்ளியில் போட்ட பகல் உணவால், கான்ட்ராக்டர்கலள் பிழைத்தர், ஆசிரியர்கள் பிழைத்தர், சிறுவர் சிறுமியர்க்குக் கிடைத்த பலன் அளவில் மிகக் குறைவே. ஒராயிரம் பள்ளிகளில்

விரயமாவதைப் போல பதினைந்தாயிரம் பள்ளிகளுக்கு விரிவு படுத்த வேண்டாமென்று சொல்ல வேண்டியது எனது கடமை. இத்திட்டத்தை கைவிட்டு விடுவதே நல்லது" என்று சொல்லி முடித்தார். ஒரு நொடியில் காமராஜ் மிகவும் சாதாரணமாக சிரித்தபடியே அதற்குப் பதில் கூறினார், அது எல்லாறுக்கும் இடப்பட்ட கட்டளைப் இருந்தது. "இயக்குனர் இதை குறித்துக் கொள்ளட்டும், விரிவான ஆணை பிறப்பிக்கையில், மறந்து விடாமல், இதையும் ஆணையில் சேருங்கள். 'பள்ளி பகல் உணவுத் திட்டத்தைக் காண்ட்ராக்ட் முறையில் நடத்தக் கூடாது.', வேறு எந்த முறையில் நடத்தலாம் என யோசித்து சொல்லுங்கள்" என்று கூறினார். முதல் அமைச்சர் இவ்வாறு ஆணை பிறப்பித்த பிறகும் செயலர் குறுக்கிட்டு "மாணவர்களுக்கு சமைக்கும் சாப்பாட்டை ஆசிரியர்கள் சாப்பிட்டு விடுவார்கள், அவர்கள் வீட்டுக்கும் அனுப்பிவிடுவார்கள். மாணவர்களுக்கு அரை வயிற்றுக்கே கிடைக்கும்" என்றார். மீண்டும் முதல் அமைச்சர் எவ்விதத் தயக்கமும் இன்றி சிரித்த முகத்தோடு "திட்டத்தில் உங்கள் ஞாபகமாக ஒரு விதியை சேர்த்து விடுங்கள். 'பகல் உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஆசிரியர்களும், பிள்ளைகளோடு சேர்ந்து சாப்பிடலாம்.' அந்த கூடுதல் சாப்பாட்டுச் செலவு, நியாயமானது என்று ஏற்றுக் கொள்ளப்படும்" என்று பதில் கூறினார். அப்புறம் யாரும் குறுக்கிடவில்லை, பகல் உணவுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

பகல் உணவுத் திட்டத்தை அரசு திட்டமாக நிறைவேற்றுவதற்கு முன்பே, பல ஊர்களில் பொதுமக்கள் காமரஜின் வேண்டுகோளை ஏற்று தங்கள் சொந்த பொறுப்பில் நிறைவேற்றிட முனைந்தனர். பகல் உணவுத் திட்டத்தை முதலில் பாரதியின் எட்டயபுரத்தில் தொடங்கினர். பகல் உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய காமராஜ் பேசினார், அதில் சில "...நாம் பெறத் தவறிவிட்ட படிப்பை, வரும் தலைமுறையாவது பெற்று, வளர்ந்து வாழட்டும். அன்னதானம் நமக்கு புதியது அல்ல. இதுவரை வீட்டுக்கு வந்தவர்களுக்குப் போட்டோம். இப்போது, பள்ளிக் கூடத்தை தேடிப்போய் போடச்சொல்கிறோம். அப்படி செய்தால் உயிர் காத்த புண்ணியம், படிப்பு கொடுக்கும் புண்ணியம் இரண்டும் சேரும்.......என் மனதில், எல்லோர்க்கும் கல்விக் கண்ணைத் திறப்பதை விட முக்கியமான வேலை இப்பொதைக்கு இல்லை. நான் இதையே எல்லாவற்றிலும் முக்கியமானதாகக் கருதுகிறேன். எனவே மற்ற வேலைகளையும் ஒதுக்கி வைத்து விட்டு, ஊர் ஊராக வந்து, பகல் உணவுத் திட்டத்திற்க்குப் பிச்சையெடுக்கச் சித்தமாக இருக்கிறேன்" என்று பேசினார்.

மதிய உணவு திட்டத்தை ஒரு வாழ்க்கை தத்துவமாக கருதி தம் சக அமைச்சர்களோடும், அதிகாரிகளோடும் இணைந்து முனைப்பான இறைப் பணியாகச் செய்தார். தமிழ்நாட்டின் செல்வந்தர்களும், வள்ளன்மை குணம் படைத்தோரும் பொருளுதவி செய்தனர். காமராஜின் மதிய உணவு திட்டம் பள்ளிகளுக்கு புதிய வரவுகளை உருவாக்கியது.

குழந்தைகளின் பசியைப் போக்கி எழுத்தறிவிக்கக் காமராஜ் செயல்படுத்திய மதிய உணவு திட்டம், மக்களிடையே அறிவை மட்டும் வளர்க்கவில்லை, பல்வேறு இனத்தை சேர்ந்த பிள்ளைகளை ஒன்றாக அமர்ந்து உணவு அருந்த செய்தது. அதனால் அக்காலத்தில் நிலவி வந்த ஜாதிப்பாகுபாடுகள் மலிந்தன.

## கல்வித் துறையில் ஆற்றிய கடமைகள்:

தமிழினத்திற்க்கு, மக்களால் தெர்ந்தெடுக்கப்பட்ட காமராஜ், கல்வித் துறையில் ஆற்றிய கடமைகள்:

(1) பள்ளிகள்: இந்தியா விடுதலை பெற்ற போது அப்போதைய ஒருங்கினைந்த சென்னை மாநிலத்தில் இருந்த தொடக்கப் பள்ளிகள் எண்ணிக்கை 15,303. பின்பு 6000 பள்ளிகள் மூடப்பட்டன. அதுவே தனி மாநிலமாக அமைந்த பின்பு, காமராஜ் ஆட்சியின் இறுதியில் 1963-ல் மொத்தமாக 30,020 தொடக்கப்பள்ளிகளாக வள்ர்ச்சிப்பெற்றது. இடைநிலை கல்வியை பொறுத்த வரை 1954-ல் 1006 பள்ளிகளில் மொத்தம் 4,89,115 மாணவர்கள் பயின்றனர். இது காமராஜின் ஆட்சியில் ஏறக்குறைய இரண்டு மடங்காகியது.

(2) கல்வி மேம்பாடு: காமராஜ் ஆட்சிப் பொறுப்பேற்ற 1954-ல் 6 வயதிலிருந்து 11 வயது வரையிலான பள்ளி பிள்ளைகளிள் 45% மட்டுமே பள்ளிக்கு சென்றனர். ஆனால் 1963-ல் அதே வயது பிரிவை சேர்ந்த 80% குழந்தைகள் பள்ளிக்கு சென்றனர். 1954-ல் 18 லட்சம் சிறுவர் மட்டுமே பள்ளிக்கு சென்றனர் என்ற நிலை மாறி 1963-ல் பள்ளிக்கு சென்ற சிறுவர்களின் எண்ணிக்கை 47 லட்சமாக (47,44,091) உயர்ந்தது. கல்வித் துறையில் காமராஜ் செய்த புரட்சி, தமிழ் நாட்டு மக்களிடையே கல்வி கற்பதில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தமிழகத்தில் 'ஆரம்ப பள்ளிகள் இல்லாத கிராமமே இல்லை" என்கிற நிலை காமராஜ் காலத்தில் உருவாயிற்று.

(3) மதிய உணவுத் திட்டம்: குழந்தைகளின் பசியைப் போக்கி எழுத்தறிவிக்கக் காமராஜ் செயல்படுத்திய மதிய உணவு திட்டம் (இன்றைய சத்துணவு).

(4) பள்ளி வளர்ச்சித் திட்ட மக்கள் இயக்கம்: 'பள்ளி வளர்ச்சித் திட்ட மக்கள் இயக்கம்' என்பதை உறுவாக்கி, மக்ககளை கல்வி வளர்ச்சிக்கு உதவ முன் வரச் செய்தார். இந்த இயக்கத்தை தொடங்கிய 25 மாதங்களில், தமிழகமெங்கும் 133 மாநாடுகளை நடத்தி 4 கோடி ரூபாய் பணத்தையும், 2.47 கோடி பெறுமானமுள்ள பொருள்கள் நன்கொடையாகப் பெற்றார். மொத்தமாக 167 பள்ளி சீரமைப்பு மாநாடுகள் நடத்தி 24,565 பள்ளிகள் தன்னிறைவுப் பெறச்செய்தார்.

(5) உயர்நிலைக் கல்வி: தேவையான அளவு நவீன வசதிகளுடன் கூடிய உயர்நிலைப் பள்ளிகள், ஐந்து மைல் தூரத்திற்கு ஒன்றாக அமைக்கப்பட்டன.

உயர்நிலைப் பள்ளி அளவிலேயே, ஏட்டுக் கல்வியோடு தொழி துறை சார்ந்த கல்வியை கற்பிக்க "தொழில்சார் கல்விமுறை" அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த புதிய கல்வித் திட்டத்தால் உயர்நிலைப் பள்ளி அளவிலேயே - எஞ்னியரிங், அக்ரிகல்ச்சர், செக்ரடேரியல் கோர்ஸ், டெக்ஸ்டைல் டெக்னாலஜி முதலான தொழில் சார் கல்வி கற்க வழி வகுத்தார்.

(6) கட்டாய / இலகசக் கல்வி: தமிழகம் முழுவதும் 6- 11 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கட்டாய கல்வி, மற்றும் அனைவருக்கும் உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி வழங்கப்பட்டது. மேலும் கல்வித்துறை மூலமாகவே சீருடை வழங்க ஏற்பாடு செய்தார்.

(7) கல்லூரிகள்: இரண்டு பல்கலைகழகங்கலுடன் 39 கலை, அறிவியல் கல்லூரிகளை 1954-ல் கொண்டிருந்த தமிழ்நாடு 1963-ல் அதே இரண்டு பல்கலைகழகங்கலுடன் மொத்தம் 63 கலை, அறிவியல் கல்லூரிகளுடன் உயர்ந்து இருந்தது. 1954-ல் இருந்த 141 ஆசிரியர் பயிற்ச்சிப் பள்ளிகள் காமரஜின் ஒன்பது ஆண்டு கால ஆட்சியில் 209-ஆக உயர்ந்தது.

(8) நூலகங்கள்: நூலகங்கள் இல்லாமல் இருந்த தமிழ்நாட்டில் 638 பொது நூலகங்களும், 12 மாவட்ட மைய நூலகங்களும் திறக்கப்பட்டன.

>>>>>> இனி சற்று விரிவாக ... <<<<<<<<

மனிதகுல முன்னேற்றத்திற்க்கு முக்கிய சொத்தாக இருக்கின்ற அறிவுக்கு தமிழகத்தில் அடித்தளமிட்டு, தமிழனின் வாழ்வுக்கு அச்சாரம் இட்டவர் காமராஜ். கல்வியில் சிறந்தது தமிழ் நாடு, அதை தமிழனுக்குச் சிறந்த, உரிய முறையில் அளித்தவர் காமராஜ்.

காமராஜ் பொறுப்பேற்ற ஆண்டில், கல்வி கல்வி அமைச்சர் சட்ட சபை கூற்றுப் படி "குறைந்த பட்ச தொடக்க கல்விக்கே 10- 12 கோடி ரூபாய் புதிய பள்ளிகளுக்கும், 6 கோடி ரூபாய் ஆசிரியர்களுக்கும் தேவை. மாகானத்தின் தற்போதைய நிதி வசதிவளை கொண்டு இவ்வளவு பெரிய நிதிச்சுமையை சமாளிக்க முடியுமா என சபை ஆராய வேண்டும்" என்பதே. ஆனால் அது மட்டும் பிரச்சனையாக இருக்கவில்லை, பள்ளிக்கு குழந்தைகள் வருகை, வந்தாலும் குறைந்தபட்ச ஆரம்ப கல்வி வரையிலாவது நீடிப்பது, பள்ளி செல்ல குழந்தைகள் செல்ல வேண்டிய நீண்ட தூரம், பள்ளி கூடங்களில் நிலவிய ஏற்றத் தாழ்வுகள் என இப்படியும் பிரச்சனைகள். கல்வி மேம்பாடு என்பது ஒரு இரவில் நடைபெறக் கூடிய செயலல்ல.

1954-ல் தொடக்க கல்வின் நிலையறிய அரசு ஒரு குழுவை டாக்டர்.அழகப்ப செட்டியார் தலைமையில் நியமித்தது. அக்குழுவின் பரிந்துரைக்குபின் கல்வி திட்டங்கள் தீட்டலாமென்று எண்ணாமல், காமராஜ் முதலமைச்சராக பொறுப்பேற்ற அதே கல்வி ஆண்டில் இயன்ற அளவு தொடக்க பள்ளிகள் திறந்திட அனைத்து முயற்சியுகளும் மேற்கொள்ளப்பட்டன. ராஜாஜி கொண்டுவந்த குலக் கல்வித் திட்டத்தை தற்கொலைத் திட்டமாகக் கருதி கல்லறை கட்டினார், ராஜாஜி இழுத்து மூடிய 6000 ஆரம்பப் பள்ளிகளை மீண்டும் திறக்க உத்தரவு பிறப்பித்தார். பள்ளி தொடங்க நடைமுறைகள் எளிமை படுத்தப்பட்டன(1954- 55). பள்ளிகள் திறப்பதற்கு யாரும் விண்ணப்பம் அளிக்க வேண்டியதில்லை. அதிகாரிகளே ஊர் ஊராக சென்ரனர். எங்கெல்லாம் 500 பேர் வாழும் ஊர் உண்டோ அங்கே சென்றனர். ஒரு பள்ளிக்கூடத்திலிருந்து ஒரு மைல் கல் தொலைவில் இன்னொரு பள்ளி வருமாறும் பார்த்துக் கொண்டணர். இந்த இரண்டு அடிப்படை கொண்டு, 500 பேர் வாழும் சிற்றூர் தோறும் பள்ளிகள் நிறுவப்பட்டன. 500, அதற்க்கு மேல் மக்கள்தொகை கொண்ட கிராமங்கள், சிறு நகரங்கள் கணக்கெடுக்கப்பட்டு, 12,967 புதிய பள்ளிகள் நிறுவப்பட்டன. 500 பேருக்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட சிற்றூரிலும் பள்ளிகூடம் திறக்க வேண்டும் என காமரஜிடம் வேண்டுகோள் வைக்கப்பட்டது. அவர்களின் வேண்டுகோள் நியாயமாக இருந்ததைக் கருதி, 1962- 63-ல் காமராஜ் அரசு 300 மக்கள் தொகை கொண்ட எல்லா சிற்றூரிலும் பள்ளிகள் துவங்கலாமென காமராஜ் அறிவித்து செயல்படுத்தினார். இதனால் தமிழகத்தின் அனைத்து சிற்றூரிலும் பள்ளிக்கூடம் துவங்கப்பட்டது, பள்ளிகளின் எண்ணிக்கை 30,000 தாண்டியது. பதவி ஏற்ற சுமார் 8 ஆண்டுகளில் பள்ளிக்கு செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை காமராஜின் கல்வித்திட்டத்தால் இரு மடங்காகியது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் கண்டுள்ளவாறு, தம் ஆளுகையின் கீழிருந்த தமிழ் நாடு மாநிலத்தில் பதினான்கு வயதுடைய பிள்ளைகளுக்குக் கட்டாய இலவச கல்வித் திட்டத்தைச் செயல்படுத்தினார். இந்திய அரசு, கிராமப்புறம் சார்ந்த பகுதிகளில் ஓராசிரியர் பள்ளியை உருவாக்கி தொடக்கக் கல்வியை மேம்படுத்தக் கொண்டுவந்த திட்டத்தைக் காமராஜ் அரசு எற்று உடனே செயல்படுத்தியது. தொடக்கப் பள்ளிகளே இல்லாத பகுதிகளில் இத்திட்டத்தை பயன்படுத்தி, அதிகமான ஓராசிரியர் பள்ளிகளை காமராஜ் அரசு உறுவாக்கியது.

இதனால் 1954- 55-ல் 19 லட்சமாக இருந்த செலவு 1962-ல் இருமடங்காகி 38 லட்சம் ஆனது. இவ்வளவு திட்டங்களை செயல்படுத்தியும் கல்வியின் சிறப்பை உணராத மக்கள், இளம் பிள்ளைகளைக் கல்வி கற்க அனுப்பாததைக் கண்டு காமராஜ் வருத்தமுற்றார். எனவே கிராமந்தோறும் பிரச்சாரக் கமிட்டிகளை அமைத்துக் குழந்தைகளைப் பள்ளியில் சேரக்க வழி செய்தார்.

தொடக்க கல்வி பயின்ற பிள்ளைகளின் எண்ணிக்கை பெருகியதால், உயர்நிலைப் பள்ளிகளின் தேவை அவசியமானது. ஆகவே, காமராஜ் அரசு மாநிலம் முழுவதும்

பரவலாக உயர்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை அதிகரிக்க உரிய நடவடிக்கை எடுத்தது. இதன் காரணமாக கிராம பகுதிகளில் பல உயர்நிலைப் பள்ளிகள் தோன்றியது.

உயர்நிலைப் பள்ளி அளவிலேயே, ஏட்டுக் கல்வியோடு தொழி துறை சார்ந்த கல்வியை கற்பிக்க "தொழில்சார் கல்விமுறை" அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த புதிய கல்வித் திட்டத்தால் உயர்நிலைப் பள்ளி அளவிலேயே - எஞ்னியரிங், அக்ரிகல்ச்சர், செக்ரடேரியல் கோர்ஸ், டெக்ஸ்டைல் டெக்னாலஜி முதலான தொழில் சார் கல்வி கற்க வழி வகுத்தார். கல்வியை கற்பிக்கத் தரமான ஆசிரியர்கள் தேவை என்பதை உணர்ந்த காமராஜ் அரசு, திறமை மிக்க ஆண்-பெண் ஆசிரியர்களை உருவாக்க ஆசிரியர் பயிற்ச்சிப் பள்ளிகளை அதிகமாக திறக்க முன் வந்தது.

## >>>>>> பகல் உணவுத் திட்டம்: <<<<<<<<

காமராஜ் சிந்தனையிலே தோன்றிய பகல் உணவுத் திட்டம் (இன்றைய சத்துணவு), அமைச்சரவையின் ஆய்விற்கு வந்தது. முதலைமச்சரோ, கல்வி அமைச்சரோ வாய் திறப்பதற்க்கு முன்பே, வருவாய் துறை செயலர் "அரிஜனப் பள்ளியில் போட்ட பகல் உணவால், கான்ட்ராக்டர்கலள் பிழைத்தர், ஆசிரியர்கள் பிழைத்தர், சிறுவர் சிறுமியர்க்குக் கிடைத்த பலன் அளவில் மிகக் குறைவே. ஒராயிரம் பள்ளிகளில் விரயமாவதைப் போல பதினைந்தாயிரம் பள்ளிகளுக்கு விரிவு படுத்த வேண்டாமென்று சொல்ல வேண்டியது எனது கடமை. இத்திட்டத்தை கைவிட்டு விடுவதே நல்லது" என்று சொல்லி முடித்தார். ஒரு நொடியில் காமராஜ் மிகவும் சாதாரணமாக சிரித்தபடியே அதற்குப் பதில் கூறினார், அது எல்லாறுக்கும் இடப்பட்ட கட்டளைப் இருந்தது. "இயக்குனர் இதை குறித்துக் கொள்ளட்டும், விரிவான ஆணை பிறப்பிக்கையில், மறந்து விடாமல், இதையும் ஆணையில் சேருங்கள். 'பள்ளி பகல் உணவுத் திட்டத்தைக் காண்ட்ராக்ட் முறையில் நடத்தக் கூடாது.', வேறு எந்த முறையில் நடத்தலாம் என யோசித்து சொல்லுங்கள்" என்று கூறினார். முதல் அமைச்சர் இவ்வாறு ஆணை பிறப்பித்த பிறகும் செயலர் குறுக்கிட்டு "மாணவர்களுக்கு சமைக்கும் சாப்பாட்டை ஆசிரியர்கள் சாப்பிட்டு விடுவார்கள், அவர்கள் வீட்டுக்கும் அனுப்பிவிடுவார்கள். மாணவர்களுக்கு அரை வயிற்றுக்கே கிடைக்கும்" என்றார். மீண்டும் முதல் அமைச்சர் எவ்விதத் தயக்கமும் இன்றி சிரித்த முகத்தோடு "திட்டத்தில் உங்கள் ஞாபகமாக ஒரு விதியை சேர்த்து விடுங்கள். 'பகல் உணவுத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஆசிரியர்களும், பிள்ளைகளோடு சேர்ந்து சாப்பிடலாம்.' அந்த கூடுதல் சாப்பாட்டுச் செலவு, நியாயமானது என்று ஏற்றுக் கொள்ளப்படும்" என்று பதில் கூறினார். அப்புறம் யாரும் குறுக்கிடவில்லை, பகல் உணவுத் திட்டம் ஏற்றுக்கொள்ளப் பட்டது.

பகல் உணவுத் திட்டத்தை அரசு திட்டமாக நிறைவேற்றுவதற்க்கு முன்பே, பல ஊர்களில் பொதுமக்கள் காமரஜின் வேண்டுகோளை ஏற்று தங்கள் சொந்த பொறுப்பில் நிறைவேற்றிட முனைந்தனர். பகல் உணவுத் திட்டத்தை முதலில் பாரதியின் எட்டயபுரத்தில் தொடங்கினர். பகல் உணவுத் திட்டத்தை தொடங்கி வைத்துப் பேசிய காமராஜ் பேசினார், அதில் சில "...நாம் பெறத் தவறிவிட்ட படிப்பை, வரும் தலைமுறையாவது பெற்று, வளர்ந்து வாழட்டும். அன்னதானம் நமக்கு புதியது அல்ல. இதுவரை வீட்டுக்கு வந்தவர்களுக்குப் போட்டோம். இப்போது, பள்ளிக் கூடத்தை தேடிப்போய் போடச்சொல்கிறோம். அப்படி செய்தால் உயிர் காத்த புண்ணியம், படிப்பு கொடுக்கும் புண்ணியம் இரண்டும் சேரும்.......என் மனதில், எல்லோர்க்கும் கல்விக் கண்ணைத் திறப்பதை விட முக்கியமான வேலை இப்பொதைக்கு இல்லை. நான் இதையே எல்லாவற்றிலும் முக்கியமானதாகக் கருதுகிறேன். எனவே மற்ற வேலைகளையும் ஒதுக்கி வைத்து விட்டு, ஊர் ஊராக வந்து, பகல் உணவுத் திட்டத்திற்க்குப் பிச்சையெடுக்கச் சித்தமாக இருக்கிறேன்" என்று பேசினார்.

மதிய உணவு திட்டத்தை ஒரு வாழ்க்கை தத்துவமாக கருதி தம் சக அமைச்சர்களோடும், அதிகாரிகளோடும் இணைந்து முனைப்பான இறைப் பணியாகச் செய்தார். தமிழ்நாட்டின் செல்வந்தர்களும், வள்ளன்மை குணம் படைத்தோரும் பொருளுதவி செய்தனர். காமராஜின் மதிய உணவு திட்டம் பள்ளிகளுக்கு புதிய வரவுகளை உருவாக்கியது.

குழந்தைகளின் பசியைப் போக்கி எழுத்தறிவிக்கக் காமராஜ் செயல்படுத்திய மதிய உணவு திட்டம், மக்களிடையே அறிவை மட்டும் வளர்க்கவில்லை, பல்வேறு இனத்தை சேர்ந்த பிள்ளைகளை ஒன்றாக அமர்ந்து உணவு அருந்த செய்தது. அதனால் அக்காலத்தில் நிலவி வந்த ஜாதிப்பாகுபாடுகள் மலிந்தன.

## >>>>>> பள்ளி வளர்ச்சித் திட்ட மக்கள் இயக்கம்: <<<<<<<<

பள்ளிக்கூடம் திறந்தால் போதாது, பள்ளிக்கூடத்திற்க்கு நிலையான சொத்துக்கள் ஏற்படுத்தபட வேண்டும், அதுதான் பள்ளிக்கூடம் தொடர்ந்து எவ்வித சிக்கலும் இல்லாமல் செயல்பட வழிவகுக்கும் என்பதை காமராஜ் உணர்ந்தார். ஆனால், அரசிடம் போதிய நிதி இல்லை என்ற நிலை. ஆனால் கல்விகு நிதி ஒரு பொருட்டு அல்ல என்பதை நன்கு உணர்ந்திருந்த காமராஜ், சமுதாய பங்கேற்ப்பை ஊக்குவிக்கும் மாநாடுகளை தமிழ் நாடெங்கும் நடை பெற்றிட ஆணையிட்டார். பள்ளிக்கூடங்களின் அடிப்படைத் தேவைகள் எவையென்று பட்டியலகள் தாயாரிக்கப்பட்டன.

தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல், உயர் தொடக்கப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல், உயர் நிலைப் பள்ளிகளுக்கு ஒரு பட்டியல் என்று மூன்று பட்டியல்கள் உருவாயின. தொடக்கப் பள்ளிக்கூடங்களுக்கு, என்னென்ன வசதிகள் இல்லை என்பது கிராம மக்களுக்கு தெரிவிக்ககப்பட்டு, உதவும்மாறு கேட்டுக்கொள்ளப் பட்டனர். கிராம மக்கள் உற்சாகத்துடன் உதவினர். இந்த அனுபவத்தின் அடிப்படையில் பள்ளிக்கூடங்களின் மேம்பாட்டிற்காக விரிவான் மக்கள் இயக்கமாக ஆக்குவது என முடிவு செய்யப்பட்டது.

"பள்ளிகளை கட்டுவது, பகல் உணவு அளிப்பது, ஆசிரியர்களை நியமிப்பது என்பவை எல்லாம் அரசாங்கத்தின் வேலை" என்பது போல் இருந்த மக்களிடையே, காமராஜ் ஒரு புரட்சி இயக்கத்தை துவக்கி வைத்தார். ஒவ்வொரு மனிதனும் "கல்வி என் பொறுப்பு ! கல்வி வளர்ச்சிக்கு நான் பாடுபட வேண்டும் !" என எண்ணி செயல்படுவதற்க்கு அந்த இயக்கம் காரணமாயிற்று. 'பள்ளி வளர்ச்சித் திட்ட மக்கள் இயக்கம்' என்பதை உறுவாக்கி, மக்ககளை கல்வி வளர்ச்சிக்கு உதவ முன் வரச் செய்தார்.

இத்திட்டம் 1958-ல் செங்கற்பட்டு மாவட்டம் கடம்பத்தூரில் துவங்கியது. இம்முதல் முயற்சி வெற்றிகரமாக செயல்பட்டதால், தமிழ் நாட்டில் மேலும் 159 பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்டது. இந்த இயக்கத்தை தொடங்கிய 25 மாதங்களில், தமிழகமெங்கும் 133 மாநாடுகளை நடத்தி 4 கோடி ரூபாய் பணத்தையும், 2.47 கோடி பெறுமானமுள்ள பொருள்கள் நன்கொடையாகப் பெற்றார்.

07/1958-ல் திசையன்விளை மாநாட்டில் முதல் அமைச்சர் கலந்து கோண்டார். இந்த மாநாட்டில் 102 பள்ளிகள் பங்கேற்றன. மாநாட்டில் முன் வைக்கப்பட்ட திட்டங்களின் மதிப்பு ரூபாய் 1,38,000 ஆகும். மாநாட்டின் மூலம் பெறப்பட்ட நிதிகளின் மொத்த மதிப்பு 1,36,000 ரூபாய். முதல் அமைச்சர் காமராஜ் கலந்து கொண்ட இத்தகைய ஒரு மாநாடு 11/1958-ல் செங்கற்பட்டு நகரத்தில் நடைபெற்றது. இதில் இந்திய கல்வி அமைச்சர் சி.கே.பந்த் கலந்து கொண்டர். 826 பள்ளிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில் ரூபாய் 23 லட்சத்திற்க்கு திட்டம் வைக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டன. அம்மாநாட்டில் திரு.சி.கே.பந்த் உரையாற்றும் போது, "பிற மாநிலங்களில் முளைக்காத, நல்ல மேம்பாட்டு திட்டங்கள், சென்னை மாகாணத்தில் மட்டும் பயிராவது வியப்பானது." என்று கூறினார். கூறியது மட்டுமின்றி, டெல்லி சென்றவுடன், பிரதமர் நேருவிடம் இம்மாநாடுகளை பற்றி வியந்து கூறியுள்ளார். அதன் பின்பு 01/1959-ல் காரைகுடியில் உள்ள ஆ.தெக்கூரில் நடந்த பள்ளி சீரமைப்பு மாநாட்டில் பிரந்தமர் நேரு கலந்து கொண்டார்.அடுத்த நாள் திருநெல்வேலில் உள்ள அடைக்கல்ப்புர மாநாட்டிலும் நேரு கலந்து கொண்டார். இதனை தொடர்ந்து, கல்வி மேம்பாட்டு திட்டங்களில் தமிழகத்தின் வழியில் செயல்படுமாறு அனைத்து மாநில முதல் அமைச்சர்களுக்கும் நேரு கடிதம் எழுதினார். 1963-ம் ஆண்டு வரை நடைபெற்ற மாநாடுகள் மூலம் கோடிக்கனக்கான ரூபாய் பெறுமானமுல்ல நன்கொடைகள்

இந்த இயக்கத்தின் மூலம் குவிந்தன, பள்ளி மாணவர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவது சாத்தியமாயிற்று. கல்வியில் தமிழகம் வழிகாட்டடியது. இந்த புதுமை திட்டத்தை அறிமுகப்படுத்தியவரை உலகமே பாரட்டியது.

மேலும் இதே முறையில் எழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகம், எழுதும் பலகை ஆகியவற்றை வழங்க ஏற்பாடு செய்தார். மதிய உணவுத் திட்டத்திற்கு பயன்படும் வகையில் பொருள்களையும் பணத்தையும் கொடுத்த உள்ளூர் மக்கள், பள்ளிக்கு கட்டிடம் கட்ட நிலத்தையும், கட்டுமானப் பணிக்கு உரிய பொருள்களும், பள்ளிக்குத் தேவையான பொருள்களும் கொடுத்து உதவினர்.

இத்திட்டத்தை தொடர்ச்சியாக செயல் படுத்தப்பட்டதால் மொத்தமாக 167 பள்ளி சீரமைப்பு மாநாடுகள், 24,565 பள்ளிகள் தன்னிறைவு பெற்றன. தொடக்க கல்வி அளவில் சுமார் 763 கோடி ரூபாய் அளவுக்கு பொதுமக்கள் பள்ளிகளுக்கு நன்கொடை வழங்கி பள்ளி மேம்பாட்டுக்கு உதவினார்கள்.

## >>>>>> இலவச கல்வி: <<<<<<<<

முதலில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்டு வந்த எல்லா இலவச கல்வி சலுகையும், பின்பு மிகவும் பின் தங்கிய மாணவர்களுக்கும், அதேபோல் தாழ்த்தப்பட்டவராக இருந்து கிறிஸ்தவ மதத்திற்கு மதம் மாறியவர்களுக்கும் அளித்து 1957- 58-ல் காமராஜ் அரசு ஆணையிடப்பட்டது. இதனால் மேலும் பலர் இலவச கல்வி உட்பட ஏனைய பல சலுகைகள் பெற்றனர். பின்பு ஆண்டு வருமானப் ரூ.1200 க்கு உள் இருக்கக்க்கூடிய குடும்ப மாணவர்களுக்கு உயர் கல்வி வரை இலவசக் கல்வி அளித்து 1960-ல் காமராஜ் அரசு ஆனை பிறப்பித்தது. அதுவே 1962-ல் அனைவருக்கும் உயர்நிலைப் பள்ளி வரை இலவசக் கல்வி வழங்கப்பட்டது.

## >>>>>> கட்டாயக் கல்வி: <<<<<<<<

1960-ல் மாநிலத்தின் 3-ல் 1-பகுதியில் 6- 11 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு கட்டாய கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. 1961-ல் நிலத்தின் இன்னோறு 3-ல் ஒரு பகுதியில் கட்டய கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது. இறுதியாக 1962-ல் மீதமிருந்த ஒரு பகுதியிலும் கட்டாய் கல்வி அறிமுகப்படுத்தப்பட்டது.

>>>>>> <<<<<<<<

1960 முதல் கல்வித்துறை மூலகாகவே சீருடை வழங்க ஏற்பாடு செய்தார். பொது மக்கள் நல்லுதவியுடன் செயல்பட்ட சீருடைத்திட்டம் 5 ஆண்டுகளில் மும்மடங்காகியது. இதன் மூலம் பள்ளிப் பிள்ளைகளிடையே காணப்பட்ட ஏழை பணக்காரன் என்கிற ஏற்றத்தாழ்வை ஒழித்து சமதர்ம சமுதாயம் உருவாக வழி வகுத்தார்.

>>>>>> கல்வி மேம்பாடு: <<<<<<<<

காமராஜ் ஆட்சிப் பொறுப்பேற்ற 1954-ல் 6 வயதிலிருந்து 11 வயது வரையிலான பள்ளி பிள்ளைகளில் 45% மட்டுமே பள்ளிக்கு சென்றனர். ஆனால் 1963-ல் அதே வயது பிரிவை சேர்ந்த 80% குழந்தைகள் பள்ளிக்கு சென்றனர். இந்தியா விடுதலை பெற்ற போது அப்போதைய ஒருங்கினைந்த சென்னை மாநிலத்தில் இருந்த தொடக்கப் பள்ளிகள் எண்ணிக்கை 15,303. அதுவே தனி மாநிலமாக அமைந்த பின்னர் 1963-ல் மொத்தமாக 30,020 தொடக்கப்பள்ளிகளாக வள்ர்ச்சிப்பெற்றது. 1954-ல் 18 லட்சம் சிறுவர் மட்டுமே பள்ளிக்கு சென்றனர் என்ற நிலை மாறி 1963-ல் பள்ளிக்கு சென்ற சிறுவர்களின் எண்ணிக்கை 47 லட்சமாக (47,44,091) உயர்ந்தது. இடைநிலை கல்வியை பொறுத்த வரை 1954-ல் 1006 பள்ளிகளில் மொத்தம் 4,89,115 மாணவர்கள் பயின்றனர். இது காமராஜின் ஆட்சியில் ஏறக்குறைய இரண்டு மடங்காகியது. இரண்டு பல்கலைகழகங்கலுடன் 39 கலை, அறிவியல் கல்லூரிகளை 1954-ல் கொண்டிருந்த தமிழ்நாடு 1963-ல் அதே இரண்டு பல்கலைகழகங்கலுடன் மொத்தம் 63 கலை, அறிவியல் கல்லூரிகளுடன் உயர்ந்து இருந்தது. 1954-ல் இருந்த 141 ஆசிரியர் பயிற்ச்சிப் பள்ளிகள் காமரஜின் ஒன்பது கால ஆண்டு ஆட்சியில் 209-ஆக உயர்ந்தது.

கல்வித் துறையில் காமராஜ் செய்த புரட்சி, தமிழ் நாட்டு மக்களிடையே கல்வி கற்பதில் விழிப்புணர்வை ஏற்படுத்தியது. தமிழகத்தில் 'ஆரம்ப பள்ளிகள் இல்லாத கிராமமே இல்லை" என்கிற நிலை காமராஜ் காலத்தில் உருவாயிற்று. தேவையான அளவு உயர் நிலை நவீன வசதிகளுடன் கூடிய உயர்நிலைப் பள்ளிகள், ஐந்து மைல் தூரத்திற்கு ஒன்றாக அமைந்தன.

>>>>>> ஆசிரியர் நலன்: <<<<<<<<

மாணவர் நலன்களில் அக்கரை உணர்வுப்பூர்வமாக இருக்க வேண்டுமெனில், கற்றுதரும் ஆசிரியர்களின் மன நிறைவு முக்கியப். அதற்காக அவர்களின் நலன் காத்திட பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டன. முக்கியமாக ஆசிரியர்களுக்கான் மூன்று நலன் திட்டம் - (i)நிரந்தர வைப்பு நிதி, (ii)ஓய்வு கால ஊதியம் மற்றும் (iii)ஆயுள் காப்பீடு. ஆசியாக் கண்டத்திலேயே, காமராஜ் ஆட்சியில் தான் ஆசிரியர் சமுதாயத்திற்க்கு இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டன. மேலும் சம்பள உயர்வு மற்றும் ஓய்வு பெறும் வயது 55-ல் இருந்து 58-ஆக உயர்த்தப்பட்டது.

>>>>>> பொது நூலக இயக்கம்: <<<<<<<<<

ஒரு விழிப்புற்ற சமுதாயத்தின் முன்னேற்ற வேகம் என்பது அந்த சமுதாயத்தின் வெற்றிக்கு வழிகோலாகும். இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்திருந்த காமராஜ் அரசு, தொடக்க கல்விக்கு அளித்த முன்னுரிமையை நூலக இயக்கத்திற்கும் அளித்தது. தங்கள் ஊர்களில் நூலகம் அமைத்து செயல்பட, நூலகத்திற்க்கு இடம், கட்டிடம், நூல்கல், பொருட்கள், ஆகியவற்றை தருவதற்க்கு பொதுமக்கள் உற்சாகப்படுத்தப்பட்டனர். இதன் காரணமாக, நூலகங்கள் இல்லாமல் இருந்த தமிழ்நாட்டில் 638 பொது நூலகங்களும், 12 மாவட்ட மைய நூலகங்களும் திறக்கப்பட்டன. இது தவிர நூல்களை நேரடியாகத் தரும் நோக்கில் 644 நூல் நிலையங்களும் செயல்பட்டன.

## .எல்லோரையும் வெளியேத்திட்டு நான் மட்டும் குளிக்கனுமான்னேன்

1954ம் ஆண்டு சூரிய வெப்பத்தின் கடுமையை தீர்க்க குற்றாலம் சென்றான்.. திடீரெனக் குளிக்கும் கூட்டத்தில் சலசலப்பு, முதலமைச்சர் காமராஜ் வந்திருக்கிறாராம் குளிக்க என முணுமுணுப்பு.

அதற்கு முந்தின ஆண்டில் ஏற்பட்ட ஒரு கசப்பான அனுபவம் அவனுக்கு நெஞ்சில் ஊசழாடியது. இரண்டணாக்கள் கொடுத்து சிற்றருவியில் குளித்துக் கொண்டிருந்தவன் முதுகில் ஏதோ ஒன்று குத்த திரும்பிப் பார்த்தபோது அது துப்பாக்கியின் 'பயனட்' கத்தி முனை என தெரிய, என்ன என்று அந்த துப்பாக்கி ஏந்திய காவலரை கேட்க, இந்து அற நிலையத்துறை அமைச்சர் திரு.வெங்கிடசாமி வந்திருக்கிறார். அவர் குளித்து செல்லும் வரை அனைவரும் வெளியேர வேண்டும் என அவர் கூற, " நான் காசு கொடுத்து குளிக்கிறேன்...என்னை வெளியே போகச் சொல்ல உனக்கு உரிமையில்லை" என்று அவன் வாதிட, காவலரோ வன்முறை பிரயோகித்து அனைவரையும் வெளியேற்ற, "மக்கள் காலில் விழுந்து வாக்கு கேட்டு வெற்றிப்பெறும் சட்டமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்களானவுடனே குட்டி மன்னர்கள் போல நடந்து கோள்கிறார்களே. இதை தட்டிக் கேட்க மக்களுக்கேன் வீரமில்லை" என் கூறிக்கொண்டே வெளியேறுகிறான்.அமைச்சரோ, ஒரு நண்பருடன் பேசிக் கொண்டே உள்ளே நுழைந்து அருவி பூராவையும் அரைமணி நேரம் ஆக்கிரமித்துக்கொண்டு குளித்தார்.

அந்த கதைதான் இன்றும் நடக்கவிருக்கிறது. பொன வருடம் தன் உரிமையை தட்டி பறித்தவர் ஒரு சாதாரண அமைச்சர், ஆனால் இன்று வருவதோ நாட்டின்

முதலமைச்சர். நிச்சயமாக வெளியேற்றப்படுவோம் என் உறுதி செய்து கொண்டாண். அவன் நினைத்தது பொலவே காவலர்கள் வந்தார்கள். துப்பக்கி கத்தியை காட்டி மிரட்டினர். எல்லோறும் வெளியேரினர். இடுப்பில் துண்டு கட்டி, கூட ஒருவருடன் படிக்கட்டிலிருந்து இறங்கி வரும் காமராஜரை கண்ட வண்ணமிருந்தனர்.

அருகில் வந்த காமராஜர் கோபத்துடன் அந்த காவலரை நோக்கி பேசத் தொடங்கினார். "ஏய்! நான் மேலிருந்து பார்த்துக்கிட்டுத்தான் இருந்தேன்னென். நீ இந்த வேலை செய்யத்தான் முன்னாலேயே வந்தியான்னேன். இவங்க எல்லோரையும் வெளியேத்திட்டு நான் மட்டும் குளிக்கனுமான்னேன், போ மேலே...இங்க இருக்காதேன்னேன்" என்று உத்தரவிட்டு விட்டு ஒதுங்கி நின்ற எங்களையெல்லாம் பார்த்து 'வாங்க..வாங்க... எல்லொறும் வாங்க. ஒண்ணாக் குளிக்போம்" என்றார்.

அந்த இளைஞனுக்கு இக்காட்சியை நம்பவே முடியவில்லை.

"எழைப் பங்காளர் என்றார்களே அது எவ்வளவு பொருத்தம்? தலைவரென்றால் இவரல்லவா தலைவர். அய்யோ! சொற்சிலம்பர் பேச்சைக் கேட்டு 'இந்த பண்பின் இமயத்தின் மீது எவ்வளவு தவறான எண்ணம் கொண்டிருந்தோம். இந்தத் தலைவன் காலைத்தொட்டு வணங்க வேண்டுமே" என்று எண்ணிக் கொண்டே அவர் குளிக்கும் இடம் அருகே நின்றான். கீழே குனிந்து கால்களைத் தேய்ப்பது போல் அவர் பாதங்களை தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொண்டான்.